சுவடி : 41
ஏடு : 2
ஆகத்து 2017
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
*
அலுவலக
நிருவாகப் பொறுப்பு
**ப. வடிவேலு**
94441 05892
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர்,
எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 53.

தொடர்புக்கு :
94448 04980
044-2625 2119

மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*



# காவிரி நீர் ஆணையம் அமைக்கப்பட, மேகதாட்டு அணை கட்டுவதைத் தடுத்திட, தமிழகக் கட்சிகள் ஆவன செய்ய வேண்டும்!



வெள்ளையர் காலத்தில், சென்னை மாகாண அரசுக்கும் மைசூர் அரசுக்குமிடையே 1924இல் காவிரி நீர் பங்கீடு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் 1974இல் அந்த ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்றுதான் இருந்தது.

தமிழ்நாடு 01.11.1956இல் தனித்தமிழ் மாநில மாகிவிட்டது. 1974இல் தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியில் இருந்தது. காவிரிநீர் ஆண்டுக்கு 361 கோடி கனஅடி சராசரியாக தமிழ்நாட்டுக்கு கர்நாடக அரசால் விடப்பட்டது.

1974இல் கர்நாடகம் போதிய நீர் விடவில்லை. எனவே, தஞ்சை மாவட்ட காவிரி பாசனப் பகுதி விவசாயிகள், உரிய அளவு நீர் பங்கீடு கோரி, கர்நாடக அரசை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். அப்போது தமிழ் நாட்டில் ஆட்சியிலிருந்த கலைஞர் அவர்கள், பிரதமர் இந்திராகாந்தியின் விருப் பப்படி, தஞ்சை மாவட்ட விவசாயிகள் சங்கத்தின் வழக்கை அவர்கள் திரும்பப் பெற வேண்டும் என்று வற்புறுத்தினார். அதனால்தான், கர்நாடகத்தின் கைஓங்கியது.

கர்நாடகத்தில் 1918-1920 வாக்கில் கட்டப்பட்டது, கிருஷ்ணராஜசாகர் அணை. அதற்கு கண்ணம்பாடி அணை என்றும் பெயர்.

**அந்த அணையைத் தவிர, மேற்கொண்டு காவிரியின் குறுக்கே கர்நாடகம் புதிய அணையைக் கட்ட வேண்டுமானால், அதற்கு இந்திய மத்திய அரசின் அனுமதியைப் பெறவேண்டும்; அத்துடன் காவிரியின் கீழ்மடையிலுள்ள தமிழ் நாட்டு அரசின் ஒப்புதலையும் பெறவேண்டும்.**

ஆனால், கர்நாடக அரசு

1. கபினி அணையை 1959இல் கட்டியது. அப்போது தமிழ்நாட்டை ஆண்ட காமராசர் அதைத் தடுக்கவில்லை.
2. ஏரங்கி அணையைக் கர்நாடக அரசு 1964இல் கட்டியது. அப்போது ஆட்சியி லிருந்த காங்கிரஸ் முதலமைச்சர் எம்.பக்தவத்சலம் அதைத் தடுக்கவில்லை.
3. அவருடைய ஆட்சிக்காலத்திலேயே, 1965இல் சுவர்ணவதி அணையைக் கர்நாடக அரசு கட்டியது. அதையும் தடுக்கவில்லை.
4. 6.3.1967இல் தி.மு.க. தமிழகத்தில் ஆட்சிக்கு வந்தது. தி.மு.க. ஆட்சிக்காலத் தில் 1968இல் ஏமாவதி அணையைக் கர்நாடக அரசு கட்டியது. "எத்தனை அணைகளை வேண்டுமானாலும் கர்நாடகம் கட்டிக்கொள்ளட்டும்! ஆனால் தமிழகத்திற்குத் தரவேண்டிய அளவு நீரை தந்தே ஆகவேண்டும்" என்று வீரவசனம் பேசினார், கலைஞர் கருணாநிதி.

இப்படி மேலே கண்டவாறு தொடர்ந்து காங்கிரஸ் ஆட்சியும், தி.மு.க. ஆட்சியும் காவிரி நீர் உரிமையைக் கோட்டைவிட்டு விட்டு - அதாவது தும்பை விட்டு விட்டு ஓடுகிற மாட்டின் வாலைப் பிடிப்பது போல, தி.மு.க. ஆட்சியும், அ.தி.மு.க

ஆட்சியும் எந்தக் கட்டத் திலும் ஒன்றுபட்டு நின்று இந்திரா காந்தி காலத்திலோ, ராஜீவ்காந்தி காலத்திலோ, பி.வி. நரசிம்மராவ் காலத் திலோ மத்திய அரசுக்கு அழுத்தம் தந்து தட்டிக்கேட்க வில்லை.

தி.மு.க. செய்தது எல்லாம், 1989-1991 ஆட்சியின் போது, பிரதமர் வி.பி. சிங் அவர்களுக்கு அழுத்தம் கொடுத்து "காவிரி நடுவர் மன்றம்" அமைத்தது ஒன்றுதான் உருப் படியான பணி. அதன் இறுதித் தீர்ப்பைக்கூட இந்திய அரசுப் பதிவு இதழில் (Government of India Gazettee) வெளியிட, 2011 வரையில் தி.மு.க. முயற்சிக்கவில்லை. அத்துடன் 270 கோடி கனஅடி நீரைப் பங்கிட்டுத்தர, கர்நாடக அரசு 1974இல் முன்வந்த போதும் எம்.ஜி.ஆருக்கு அஞ்சி, அப்போது தி.மு.க. அரசு அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடத் தவறிவிட்டது.

அதேபோல், மேலே கண்ட ஒப்பந்தத்தில் 1979இல் அ.தி.மு.க. ஆட்சியின் போது கையெழுத்துப் போட எம்.ஜி.ஆர். தவறிவிட்டார்.

தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் இப்படி போட்டி போட்டுக் கொண்டு தமிழ்நாட்டுக் காவிரி பாசனப் பகுதியைப் பாலைவனமாக ஆக்கியதுதான் 50 ஆண்டைய தி.மு.க.- அ.தி.மு.க. ஆட்சியில் நாம் கண்ட பயன்.

2011-2016 அ.தி.மு.க. ஆட்சியில் செல்வி. செயலலிதா இரண்டு உருப்படியான சாதனைகளைப் புரிந்தார்.

1. முல்லைப் பெரியாறு அணையில் அதன் உச்சக் கட்டக் கொள்ளளவு 152 அடிவரை உயர்த்தக் கோரி, 146 அடியாக உயர்த்திப் பெற்றார்.
2. காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பைப் பல ஆண்டுகள் கழித்து, 2014இல் இந்திய மத்திய அரசு பதிவு இதழில் வெளியிடச் செய்தார்.

இப்போது, 29.6.2017 அன்று கர்நாடகம் ஏறக்குறைய ஒரு மணிக்கு மூவாயிரம் கனஅடி நீர் விடுவதாக அறி வித்தது. ஆனால், 05.07.2017 வரையில் காவிரி நீர் ஒகேனக்கல் அணைக்கே வந்துசேரவில்லை. இது பற்றி இடைவிடாமல் பிரதமருக்குக் கடிதம் எழுதுவ தோடு இப்போதைய தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி நிறுத்திக் கொண்டார்.

அத்துடன், கடந்த மூன்று ஆண்டுகளாக காவிரியின் குறுக்கே புதியதாக மேகதாட்டு அணையைக் கட்டு வதற்கு எல்லா ஏற்பாடுகளையும் கர்நாடக அரசு செய்த பிறகு, "மத்திய நீர்வள ஆணையம் கர்நாடகத்துக்கு ஒப்புதல் வழங்கக்கூடாது" என்று மத்திய நீர்வள அமைச்சர் உமாபாரதிக்கு மடல் எழுதுவதோடு முதல மைச்சர் நிறுத்திக் கொண்டார். மேகதாட்டு அணை என்றால் மேக = ஆடு + தாட்டு என்றால் = தாண்டும் காவிரி = ஆடு தாண்டும் காவிரி என்றுதான் பொருள். அவ்வளவு குறுகிய இடத்தைக் கூடவிடாமல், கர்நாடகம் தமிழகத்துக்கு நீர்வரக்கூடிய எல்லா வழிகளையும் அதற்கே வைத்துக் கொள்ள எத்தனிக்கிறது. மேகதாட்டு அணை, கிருஷ்ணராஜ சாகாரைவிடப் பெரிதாம்.

**இதில் காங்கிரஸ் - பாரதிய சனதா - மதச்சார்பற்ற சனதா என்கிற எந்த வேறுபாட்டையும் கர்நாடக அரசியல் கட்சித் தலைவர்கள் பாராட்டவில்லை; எந்தக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சிப் பாகுபாடு பார்க்க வில்லை.**

**ஆனால், தமிழ்நாட்டில் தமிழ்நாட்டைப் பாழடித்த தி.மு.க.வும், அ.தி.மு.க.வும், இந்தச் சூழ்நிலையிலும் பிரிந்தே நிற்கின்றன. இது கண்டனத்துக்குரியது.**

**உடனடியாக தமிழக ஆளுங்கட்சியான அ.தி.மு.க. வினரும், எதிர்க்கட்சியாக உள்ள தி.மு.க.வினரும் ஒன்றிணைந்து - இந்த ஒரு சிக்கலிலாவது, தமிழக அனைத்துக் கட்சித் தலைவர்களையும், தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 57 பேரையும் உடனடி யாக தில்லிக்கு நேரில் அழைத்துச் சென்று 1. குடியரசுத் தலைவர், 2. தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, 3. உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், 4. இந்திய மத்திய நீர்வளத் துறை அமைச்சர் உமாபாரதி ஆகியோரை யும்; தில்லியிலுள்ள நாளிதழ்களின் ஆசிரியர்களையும் நேரில் கண்டு தமிழ்நாட்டின் காவிரி நீர்ப் பங்கீடு உரிமையை உறுதிசெய்யும் வண்ணம், 1.காவிரி மேலாண்மை ஆணையத்தை அமைத்தல், 2. அவ்வப்போது இருப்பு உள்ள நீரில் தமிழகத்துக்குரிய பங்கைக் கர்நாடகம் திறந்துவிட ஆவன செய்தல் வேண்டுமென்று, எல்லாக் கட்சியினரையும் குறிப்பாகத் தமிழக ஆளும் கட்சியி னரையும் வற்புறுத்தி வேண்டிக் கொள்கிறோம்.**

**1-8-2017** **- வே. ஆனைமுத்து**

## ஆர்க்கலி பிறந்த நாள்



பெரியார் - நாகம்மை அறக் கட்டளை நூலகர் வில்லிவாக் கம் தோழர் இரா. மதியழகன் - ம.பழனியம்மாள் இணையரின் மூத்த மகன்வழிப் பெயர்த்தி யும், கடலூர் பேராசிரியர் கே.ஆர். லோகியா-பி.மீனா இணையரின் மகள்வழிப் பெயர்த்தியும், தமிழ் நாடு அரசு (திருவள்ளூர்) சிறப்பு மருத்துவர் ம. சேரன் (ஆர்த்தோ) மருத்துவர் லோ. காயத்திரி ஆகியோரின் மகளுமான செல்வி 'ஆர்க்கலி' ஐந்தாம் அகவை பிறந்த நாள் (29.7.2017) வருவதை நினைவுகூரும் மகிழ்வாக 'சிந்தனையாளன்' வளர்ச் சிக்கு உருவா 1000/- வழங்கினர். வாழ்க 'ஆர்க்கலி'.

**- ஆசிரியர் குழு**

# தமிழர் நாகரிகம் கி.மு.3000 ஆண்டையது; இதை நிறுவும் சான்றுகளே தொல்லியல் சான்றுகள்; செம்மொழி நிறுவனத்தைக் காப்போம்!

வே. ஆனைமுத்து

**தொல்** பழந்தமிழர் இந்தியா முழுவதும் பரவி யிருந்தனர். சிந்துவெளியை நோக்கி ஆரியர் வந்த பிறகுதான், தமிழர் தெற்கு நோக்கி நகர்ந்தனர்.

1920களில் கன்னிங்ஹாம் என்ற அரசப் பிரதிநிதி தொல்லியல் தரவுகளைக் காண்பதில் அக்கறை செலுத்தினார்.

மொகஞ்சாதாரோ, அரப்பா நகரங்கள், நகரங்களுக் குரிய எல்லா வசதிகளோடும் அமைந்திருந்ததை நிறுவினார்கள், அதற்கென ஏற்பட்ட துறைதான் தொல் லியல் துறை (Archeological Department). அது இந்திய அரசு நிருவாகத்தில் உள்ளது.

1920களில் அங்கு காணப்பட்ட செங்கற் கட்டடங்கள், நீர்ப்போக்குவரவு வசதி, தானியக் கிடங்குகள், கருவி கள், அணிகள், சிறிய உருவங்கள் எல்லாம் தொல்லி யல் துறைக்குச் சொந்தமானவை. அதாவது தரைக் கும் கீழே அகழ்ந்து காணப்படும் எல்லாப் பொருள் களும் தடயங்களும் தரவுகளும் பழைய கட்டடங் களும் மத்திய அரசுக்குச் சொந்தமானவை.

பழங்கால மொழிகள் தமிழ், கிரேக்கம், ரோமன் மொழிகள் முதலானவை. மொஹஞ்சதாரோ, அரப்பா மக்கள் பேசியது தமிழ் என்பதை, அங்கு கிடைத்த தரவுகளைக் கொண்டு எண்பிக்கப்பட்டுள்ளது. ஆரியர் பேசிய மொழி, தமிழ்மொழியின் சிறந்த கூறுகளை எடுத்துச் செப்பம் செய்யப்பட்ட மொழி.

இதனை கால்டுவெல், கிரியர்சன் போன்ற தமிழ் கற்ற வெள்ளையர் நிறுவினர். தமிழ், இலக்கண - இலக்கிய வளமுள்ள மொழி என அவர்கள் நிறுவினர். தமிழ் செம்மொழி என்றும் கூறினர்.

பிற்காலத்தில் பரிதிமாற்கலைஞர், மறைமலை அடிகள் போன்றோரும் தமிழ் செம்மொழி என நிறுவி யிருந்தனர்.

சமற்கிருதம் செம்மொழி எனக் கூறி, இந்திய அரசு, அம்மொழி வளர்ச்சிக்கு மட்டும் வெள்ளையர் காலத் திலும், வெள்ளையர் வெளியேறிய பிறகும் பெரிய தொகைகளைச் செலவு செய்து வளர்த்தது, பேச்சு வழக்கில் இல்லாத சமற்கிருத வளர்ச்சிக்குச் செலவு செய்ததைப் போல் தமிழ் போன்ற மற்ற மொழிகளின் வளர்ச்சிக்கு மத்திய அரசு செலவு ஒருபோதும் செய்ய வில்லை.

தி.மு.க. அரசு கொடுத்த அழுத்தத்தின் பேரில், ‘‘தமிழ் செம்மொழி’’ என இந்திய அரசு 2004இல் அறிவித்தது.

அப்போதும் இப்போதும் தென்னிந்தியாவுக்குரிய, ‘‘மொழிகள்’’ வளர்ச்சி மத்திய நிறுவனம், மைசூரில் உள்ளது. கல்வெட்டு ஆராய்ச்சித் தரவுகள், பழைய ஓலைச்சுவடிகள் தமிழ்நாட்டுக்கு உரியவை - மைசூரில்தான் உள்ளன.

**தமிழ் செம்மொழி என அறிவிக்கப்பட்டவுடன், தமிழக அரசு முயற்சித்ததன் பேரில், ‘‘செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்’’ என்னும் தன்னாட்சி நிறுவனத்தை, சென்னையில் 2007 ஆகத்தில் மத்திய அரசு நிறுவியது.**

ஆனால் அன்று முதல் இன்று வரை தமிழ் மூதறிஞர் எவரையும் அந்நிறுவனத்துக்கு முழுநேர இயக்குநராக அமர்த்தவில்லை.

மைசூரில் மத்திய மொழிகள் நிறுவனத்தில் துணை இயக்குநராகப் பணிபுரிந்து கொண்டிருந்த அறிஞர் க. இராமசாமி அவர்களைப் பொறுப்பு அலுவலராக அமர்த்தி, சென்னையில், தனி அலுவலகம் தொடங்கப் பட்டது. அவர் மிகச் செப்பமாகச் செயல்பட்டார்.

1. சங்க இலக்கியங்களைச் செம்பதிப்பாக வெளி யிடுவது;
2. சங்க இலக்கியங்களை அய்ரோப்பிய மொழி களிலும் இந்திய மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிடுவது;
3. தொல்லியலில் ஆர்வம் உள்ள நிறுவனங்களுடன் இணைந்து, தொல்லியல் பற்றிய கருத்தரங்கு களை நடத்துவது முதலான நற்பணிகளை - ‘‘சென்னை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்’’ பல இடங்களில் நடத்தி, தமிழ்நாட்டு மக்களிடையே தொல்லியல் பற்றிய விழிப்புணர் வை ஏற்படுத்தியது.

**இவ்வகையில், ‘‘அம்பத்தூர்-பெரியார் ஈ.வெ. இராமசாமி-நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளை’’ யினர் - சென்னை செம்மொழி மத்திய நிறுவனத்துடன் இணைந்து, பின்கண்டவாறு கருத்தரங்குகளை நடத்தினோம்.**

அவ்விவரங்கள் கீழே உள்ளன.

ஆதிச்சநல்லூர் தாமிரபரணிக் கரையில் அமைந் துள்ள பழைய பெரிய நகரம். இன்று வரலாற்றுப் பெருமை குன்றிச் சிற்றூராக உள்ளது அதில், 1876 ஆம் ஆண்டு செருமனியைச் சேர்ந்த டாக்டர் ஜாகோர்



ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட பொருள்கள்

அகழ்வாய்வு நடத்திய போது, பல அரிய பொருள்கள் கிடைத்தன. அவை பெர்லின் அருங்காட்சியகத்தில் வைக்கப் பெற்றுள்ளன.

1904இல் அலெக்சாண்டர் இரியா மீண்டும் ஆதிச்சநல்லூரில் அகழ்வாய்வை மேற்கொண்டார். ஆயிரக்கணக்கான பொருள்கள் அவருக்குக் கிடைத்தன. அவற்றை அவர் வரிசைப்படுத்திச் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தினார்; நூலாகவும் வெளியிட்டார்.

சிந்துவெளி நாகரிகத்துடன் ஒப்ப எண்ணத்தக்க ஆதிச்சநல்லூர், ஒரு நூற்றாண்டுக்காலம் யாராலும் கண்டுகொள்ளப்படாமல் கிடந்தது. இந்தியத் தொல்லியல் துறையின் சென்னைத் தொல்லியல் கண்காணிப்பாளர் தியாக. சத்தியமூர்த்தியின் முயற்சியால் 2005 ஆம் ஆண்டு மீண்டும் அங்கு அகழ்வாய்வு நடந்தது.

**இதற்கு முன்பு கிடைத்தவை இதில் கிடைக்கவில்லையென்றாலும், அரிதான பொருள்கள் கிடைத்தன. மூன்றடுக்குத் தாழிகள் இந்தமுறை கிடைத்தன. 6000 ஆண்டுப் பழமையை அறிய இவை துணை புரிந்தன. "தாழிக்காடு" என்றே பலராலும் அழைக்கப் பெற்ற 110 ஏக்கர் பரப்பிலான ஆதிச்சநல்லூர்ப் பறம்பில், 2005ஆம் ஆண்டு ஆய்வு, வாழ்விடச் சான்றையும் கண்டு தந்தது.**

இவ்வளவு சிறப்புடைய ஆதிச்சநல்லூர் பற்றித் தமிழ் மக்களுக்குப் பெரிதாக எதுவும் தெரியாது. ஆதிச்சநல்லூரின் சிறப்பை உலகுக்கு உணர்த்தும் வகையில், "பெரியார் ஈ.வெ.ராமசாமி - நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளையும்", சென்னைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் இணைந்து 4.3.2009 முதல் 6.3.2009 முடிய மூன்று நாள்கள் "தமிழ்நாட்டுத் தொல்லியல் ஆய்வுகள்: ஆதிச்சநல்லூர் சிறப்பும் எதிர்காலத் திட்டங்களும்" என்ற பொருளில் தேசியக் கருத்தரங்கம் ஒன்றை நடத்தின.

**தொடக்க விழா**

சென்னைத் தியாகராயர் நகர் தேவர் மண்டபத்தில் அக்கருத்தரங்கம் நடந்தது. மொழிவாழ்த்துடன் தொடங்கிய நிகழ்ச்சியில் அறக்கட்டளைத் தலைவர் தோழர் வே.ஆனைமுத்து வரவேற்புரை நிகழ்த்தினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி செம்மொழித் திட்டம் பற்றி எடுத்துரைத்தார்.

அதனை அடுத்து, திருநெல்வேலியில் 22.1.2010, 23.1.2010, 24.1.2010 மூன்று நாள்கள் ஆய்வரங்கம் நடந்தது. விழாவுக்கு பெரியார் ஈ.வெ.இராமசாமி - நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை தலைவர் வே. ஆனைமுத்து தலைமை வகித்தார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் ந. அரண முறுவல் வரவேற்றார். எண்பேராய உறுப்பினர் வா.மு. சேதுராமன் படக் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

இதில் தொல்லியல் துறை முன்னாள் இயக்குநர் நடன. காசிநாதன் பேசியதாவது :

ஆதிச்சநல்லூர் நாகரிகத்திற்கும், சிந்து சமவெளியிலுள்ள அரப்பா நாகரிகத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. அங்குக் காணப்படும் உருவ எழுத்துகள்

இங்குள்ள பெருங்கற்காலப் பானை ஓடுகளில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் ஆஸ்திரேலிய, ஆர்மேனிய மற்றும் மத்திய தரைக்கடல் மனிதர்களின் எலும்புக் கூடுகளோடு ஒத்துப்போவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

**கட்டடம் மற்றும் நகர அமைப்புகள் ஆதிச்சநல்லூர், பூம்புகார் மற்றும் அரப்பாவில் ஒரே மாதிரியே உள்ளன. ஒரு பகுதியில் மக்களும், மறு பகுதியில் மன்னரும் வாழ்ந்துள்ளனர். சிந்து சமவெளியில் கண்டெடுக்கப்பட்ட நடன மங்கை சிற்பம் திராவிடப் பெண் போன்றே உள்ளது. சிந்து சமவெளியில் வாழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பது ஆதாரப்பூர்வமான உண்மை.**

ஆதிச்சநல்லூரில் குவியல் குவியலாகக் கிடைக்கும் ஆயுதங்கள் மற்றும் கருவிகளை வைத்துப் பார்க்கும் போது பெரும் தொழில் நகரமாக இருந்திருக்க வாய்ப்புள்ளது. ஆதிச்சநல்லூரில் எடுக்கப்பட்ட முது மக்கள் தாழி ஒன்றின் உட்பகுதியில் கரி அரவநாதன் என்று எழுதப்பட்டிருந்தது. இதை நானும் பார்த்து கதிரவன் மகன் ஆதன் என்று பொருள் கொண்டேன். ஆனால் தற்போது அங்கு தாழியில் எதுவும் எழுதப்படவில்லை என்று ஆராய்ச்சி அறிக்கையில் கூறுகின்றனர். தமிழர்கள் தொன்மையானவர்கள் என்ற வரலாற்று உண்மையை மறைக்க முயல்கின்றனர்.

கன்னியாகுமரி, காயல்பட்டினம் பகுதியில் கடல் ஆராய்ச்சி செய்ய வேண்டும். சாயர்புரம் தேரி பகுதியில் நுண்கற்கால ஆயுதங்கள் ஏராளமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இங்கும் கொற்கை, ஆதிச்சநல்லூர் ஆகிய இடங்களிலும் விரிவான அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்டால் தமிழன் உலகின் முதல் குடிமகன் என்ற உண்மை உறுதிப்படும் என்றும் அவர் பேசினார்.

அண்மையில், மதுரையை அடுத்த கீழடி அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. கீழடி ஆய்வு புதியது; 2014, 2015, 2016ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டது.

**தொல்லியல் ஆய்வு, மூலிகைத் தோட்டம் வளர்ப்பு இவற்றில் பெரியார் ஈ.வெ. இராமசாமி-நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு நல்ல நாட்டம் உண்டு; அதன் வேலைத் திட்டங்களுள் இவை அடக்கம்.**

அதனால் பெற்ற உந்துதலால், இப்போது அறிஞர் 'செம்மொழி' க. இராமசாமி அவர்கள் மூலம், 1) ஆதிச்சநல்லூர், கொடுமணல் பொருந்தல், கீழடி ஆய்வுகளை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று கோரி அதற்கான விண்ணப்ப தையும்;

2. அரியலூர் - பெரம்பலூர் மாவட்டங்களில் பெரும் பரப்பில் பரவியுள்ள உயிர்ப்படிவப் பாறைகள் (Fossil Deposits and Fossil Tree) நிரம்பிய பகுதி முழுவதையும் இந்திய மண்வளத் துறையினர் ஆய்வு செய்ய வேண்டும் என்று கோரும் விண்ணப்பத்தையும் ஆயத்தப்படுத்திக் கொண்டு, அதற்காகவே, 18.2.2017 அன்று நான் தில்லியை அடைந்தேன்.

இதற்கிடையில் தில்லி மாநிலங்கள் அவையில், கீழடி பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானத்தை டி.கே. ரெங்கராஜன் கொணர்ந்தார். அதையொட்டி, திருச்சி சிவா, கனிமொழி, இல. கணேசன், சுப்பிரமணிய சாமி ஆகியோர், கீழடி அகழ்வாய்வு பற்றி நாடாளு மன்றத்தில் ஆர்வத்துடன் பேசினர்.

இந்தச் சூழலில் தொல்லியல் துறைக்கான அமைச்சர் மகேஷ் சர்மா தலைநகரில் இல்லாததால், அமைச்சருக்கு உரிய மடலின் படியுடன், தொல்லியல்துறை இயக்குநர் நாயகம் (Director General - Archaeological Survey of India) **முனைவர் ராகேஷ் திவாரி** அவர்களை - அறக்கட்டளையின் சார்பில் நானும், தில்லி பெரியார் - அம்பேத்கர் தொண்டு நிறுவனம் ப. இராமமூர்த்தி அவர்களும் 21.2.2017 மாலை 4 மணிக்கு அலுவலகத்தில் நேரில் கண்டு பேசினோம்.

அவர் தமிழகத் தொல்லியல் இடங்கள் எல்லாவற்றையும் நேரில் பார்த்திருக்கிறார்.

"அய்யா, தமிழகத் தொல்லியல் துறைப் பணிகளில் இந்திய அரசு போதிய ஆர்வம் காட்டவில்லை; நாங்கள் புறக்கணிக்கப்படுகிறோம்" என, நான் சொன்னேன்.

அவர், உடனே, "இதோ பாருங்கள் - இந்தத் தொகுதி கீழடி அகழ்வு ஆய்வு பற்றியது. இந்த அறிக்கை 9.2.2017இல் அனுப்பப்பட்டு, 13.2.2017இல் எங்களுக்குக் கிடைத்தது. இது கிடைத்த பிறகு, நான் பரிந்துரைத்த தன் பேரில், இந்திய அரசினர், கீழடி தொல் ஆய்வு மேற்கொண்டு நடைபெற நிதி ஒதுக்கியுள்ளனர்!" என்று கூறினார்.

"ஆதிச்சநல்லூரில் மேற்கொண்டு அகழ்வாய்வு செய்ய, ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை" எனக் கேட்டேன்.

"டாக்டர் டி.எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் இன்னமும் அவருடைய ஆராய்ச்சி பற்றிய முழு அறிக்கையையும் அனுப்பவில்லை. முழு அறிக்கை வந்தால் உடனே நடவடிக்கை எடுப்போம்" என்றார், அவர்.

இதுபற்றி, மதிப்புக்குரிய முனைவர் டி.எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் கருதிப் பார்த்து ஆவன செய்ய வேண்டுகிறேன்.

புதுச்சேரி முனைவர் கே. இராசனின் பொருந்தல், கொடுமணல் ஆய்வறிக்கைகள் முழுமையாகக் கிடைத்தன எனக் கூறி, அவரைப் பாராட்டினார், திவாரி.

தமிழகத்தில் உள்ள ஆதிச்சநல்லூர்-தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம், மொகஞ்சதாரோ-அரப்பா நாகரிகத்துக்கு முந்தியது என நாம் பெருமைப்படுகிறோம்.

அந்த வரலாற்றுப் பெருமையை நாம் நிலைநாட்ட வேண்டும்.

அதற்கு இப்போது என்ன செய்ய வேண்டும்?

**தமிழ்நாட்டைப் பற்றிய அரசியல், 1977 முதல் தி.மு.க. - அ.தி.மு.க. போட்டா போட்டி அரசியல்.**

தமிழ்வழிக் கல்வியைப் பாழடித்தவர்கள் இவர்கள்.

காவிரிநீர்ப் பங்கீட்டை மேலும் சிக்கலாக்கிய வர்கள், இவர்கள்.

சென்னை வள்ளுவர் கோட்டத்தைச் சீரழித்த வர்கள் இவர்கள்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை வளர வொட்டாமல் தடுத்தவர்கள், இவர்கள்.

அதாவது தி.மு.க. அரசு தொடங்கிய பணியை, அ.தி.மு.க. ஆட்சி முடக்குவதை வழக்கமாகக் கொண் டார், எம்.ஜி.ஆர்.

அ.தி.மு.க. ஆட்சி தொடங்கிய பணியை தி.மு.க. ஆட்சி முடக்குவதை நன்றாகச் செய்தார், டாக்டர் கலைஞர்.

அதாவது, எல்லாம் தமிழ்நாட்டுக்கு - தமிழருக்கு - தமிழின் நலத்துக்கு என்பதை மறந்த மக்கள்நல எதிரிகள் ஆயினர், இரண்டு கட்சியினரும்.

**2011 முதல் 2016 நவம்பர் வரை - தி.மு.க. 2007 இல் தொடங்கி வைத்த - சென்னை செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தை ஏரெடுத்தும் பார்க்கவில்லை - முதல்வர் செயலலிதா.**

தில்லியிலுள்ள மோடி அரசுக்கு ஒத்துழைத்தவர், செயலலிதா.

இன்றைய அ.தி.மு.க. அரசு இன்று போகுமா? நாளை போகுமா என்கிற ஈனநிலையில் உள்ளது.

தமிழ்நாட்டு நலனில் உண்மையான அக்கறை உள்ளவர்களாக இருந்தால்-தமிழக முதலமைச்சரும், எல்லாக் கட்சித் தலைவர்களும் - தமிழகத்தைச் சார்ந்த 57 நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து ஒரு குழுவாக தில்லிக்குச் சென்று - பிரதமர், கல்வி அமைச்சர், தொல்லியல் துறை அமைச்சர், தொல்லி யல் துறை உயர் அதிகாரிகள் ஆகியோரைக் கண்டு -

1. சென்னையிலுள்ள செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் தொடர்ந்து தன்னாட்சி நிறுவனமாகவே சென்னையிலேயே இயங்க வேண்டும்;
2. அந்நிறுவன வளர்ச்சிக்குப் போதிய நிதியை, இந்திய அரசு ஒதுக்கிட வேண்டும்;
3. தமிழிலும் பிறமொழிகளிலும் சிறந்த தகுதி வாய்ந்த ஒருவரை முழுநேர இயக்குனராக அமர்த்த வேண்டும்;

என வற்புறுத்திக் கோரிட, அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

## இந்தியத்தை உடைப்போம்

- நா. மதனகவி

மூன்றாண்டு முழுமை பெற்றது பாசக ஆட்சி
முன்னெப்போதும் இல்லாத நெருக்கடியில் மக்களாட்சி
பொளாதாரம் வேலைவாய்ப்பில் பெரும் வீழ்ச்சி
பொருளற்ற மதக்கொள்கையே மோடியின் மூச்சு

அகண்டபாரதமும் அயோத்திராமனுமே இவர்களின் பேச்சு
அன்றாடம் சாகின்ற விவசாயியின் வாழ்வோபாழாச்சு
இராமராச்சியமும் மனுதருமமுமே இவர்களின் போக்கு
இந்துநாடென பெயரித்துணியுது இவர்களின் நாக்கு

இந்தியாவில் இந்திதான் ஆட்சிஅலுவல் மொழிஎன்று
தொந்திபார்ப்பனரின் சூழ்ச்சியது திணிக்கும் தமிழாகண்விழி
தேசியஇன மக்கள்நாம் ஒன்றாய்இதை எதிர்ப்போம்
அவரவர் தாய்மொழியில் எல்லாம் கற்போம்

மக்களைப் பற்றி அக்கறை கொள்ளாத அரசு
பசுவைப் பாதுகாக்கச் சட்டம் இயற்றுது
நாடே போர்க்களமாய் மாறப் போகுது
மாடே கொம்பால் தடையை கிழிக்கப்போகுது

எதிரிகளின் பலம்நமை நாளும் சுருக்குது
உதிரிகளாய் நாம்! என்று ஒன்றாவது
கட்சியையும் கொடியையும் தூக்கி எறிவோம்
கட்டாய காலத்தேவை தமிழர்நாம் ஒரணியாவோம்

விரம்செறிந்த காசுமீரு நமக்கு வழிகாட்டுது
உரம் இடுவோம் மண்மீட்க இளைஞர்களுக்கு.
மார்க்சியம் மட்டுமே மானுடத்தின் விடுதலை
பெரியார் அம்பேத்கரே ஆரியத்தின் எதிர்நிலை

விடுதலை முழக்கம் விண்ணை முட்டனும்
இடுஎல்லைக் கோடு நாம்பறை கொட்டனும்.
முட்டி மோதி இந்தியத்தை உடைப்போம்
கட்டி நாமே தமிழகத்தை ஆக்குவோம்!

# மருத்துவ நுழைவுத் தேர்வும் வஞ்சிக்கும் அரசுகளும்

**க. முகிலன்**

தமிழ்நாட்டில் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை வழக்கமாக சூலை மாதத் தொடக்கத்தில் நடந்து முடிந்துவிடும். ஆனால் இந்த ஆண்டு இது எப்போது நடக்கும், எந்த முறையில் நடக்கும் என்பது தெரியாத ஒரு குழப்ப நிலை நீடிக்கிறது. இதனால் மருத்துவக் கல்லூரியில் சேர வேண்டும் என்ற முனைப்பில் படித்த பல்லாயிரம் மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் கடுமையான மனஉளைச்சலில் இருக்கின்றனர்.

2007ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில், பனிரெண்டாம் வகுப்பில் பொதுத் தேர்வில் மாணவர்கள் பெறுகின்ற மதிப்பெண்களின் தர வரிசைப்படி மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை நடைபெற்று வந்தது. இது ஒரு சீர்மையான நடைமுறையாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தது. ஆனால் கடந்த ஆண்டு நரேந்திர மோடி தலைமையிலான நடுவண் அரசு உச்சநீதிமன்றத்தின் துணையுடன் இந்தியா முழுவதும் மருத்துவப் படிப்பில் சேருவதற்கு இந்திய அளவில் நடைபெறும் தேசிய தகுதிகாண் மற்றும் நுழைவுத் தேர்வைக் (National Eligibility cum Entrance Test - NEET - நீட்) கட்டாயம் எழுத வேண்டும் என்கிற ஆணையைப் பிறப்பித்தது.

திடீரென அறிவிக்கப்பட்ட மருத்துவப் பொது நுழைவுத் தேர்வை 2016-2017ஆம் கல்வி ஆண்டில் நடைமுறைப் படுத்த முடியாது என்று தமிழ்நாட்டு அரசும் மற்றும் சில மாநில அரசுகளும் எதிர்த்தன. அதனால் இந்தப் பொது நுழைவுத் தேர்விலிருந்து 2016-2017ஆம் கல்வி ஆண்டிற்கு மட்டும் விலக்கு அளிக்கும் வகையில் நடுவண் அரசு ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தது. அதனால் தமிழ்நாட்டில் 2016-2017ஆம் கல்வி ஆண்டில் வழக்கம் போல் பனிரெண்டாம் வகுப்பின் மதிப்பெண் அடிப்படையில் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை நடைபெற்றது.

இதையடுத்து தமிழ்நாட்டு அரசு 2017-18ஆம் கல்வி ஆண்டு முதல் மருத்துவ நுழைவுத் தேர்வுக்கு நிலையான வலைக்குப் பெறப்படும் என்று உறுதி அளித்து வந்தது. முதலமைச்சராக இருந்த செயலலிதா திடீரென உடல்நலக் குறைவால் 2016 செப்டம்பரில் மருத்துவமனையில் சேர்ந்தார், 5.12.2016 அன்று மருத்துவமனையிலேயே மறைந்தார். இந்த நான்கு மாதங்களில் தமிழ்நாட்டு அரசு முற்றிலுமாகச் செயலிழந்து கிடந்தது. ஆயினும் மருத்துவ நுழைவுத் தேர்வுக்கு நிலையான விலக்கு பெறவேண்டும் என்ற கோரிக்கை வலிமையாக ஒலித்துக் கொண்டே இருந்தது.

செயலலிதாவின் மறைவுக்குப்பின் ஆளும் அ.தி.மு.க.வில் ஏற்பட்ட குழப்பங்களுக்குப்பின் கூட்டப்பட்ட சட்டப்பேரவைக் கூட்டத்தில் தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள இடங்களுக்கும், தனியார் மருத்துவக் கல்லூரிகள் அரசுக்கு ஒப்படைக்கும் இடங்களுக்கும் பனிரொண்டாம் வகுப்புப் பொதுத்தேர்வின் மதிப்பெண் தரவரிசைப்படி ஒற்றைச் சாளர முறையில் மாணவர் சேர்க்கை நடைபெறுவதற்கு தேசிய தகுதிகாண் நுழைவுத் தேர்விலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று 1.2.2017 அன்று ஒரு மனதாகச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.



நீட் தேர்வுக்கு எதிராக மருத்தவக் கல்லூரி மாணவிகள்

மேலும் மருத்துவ மேற்படிப்புக்கு, தமிழ்நாட்டு அரசு நடத்தும் நுழைவுத் தேர்வு மூலம் தமிழ்நாட்டின் மருத்துவர்கள் மட்டுமே சேர்க்கப்படும் நிலை 2015ஆம் ஆண்டு வரையில் இருந்தது, 2016ஆம் ஆண்டில் உச்சநீதிமன்றம் பிற மாநில மருத்துவர்களையும் தேசிய பொதுத் தேர்வின் மூலம் தமிழ்நாட்டின் மருத்துவக் கல்லூரிகளில் மேற்படிப்பில் சேர்க்க வேண்டும் என்று ஆணையிட்டது. எனவே, 1.2.2017 அன்று சட்டப் பேரவையில் மருத்துவ மேற்படிப்பில் சேர்க்கை முறை 2015ஆம் ஆண்டில் இருந்த நிலையே நீடிக்க வேண்டும் என்று சட்டம் இயற்றப்பட்டது. இவ்விரண்டு சட்டங்களும் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற் காக நடுவண் அரசுக்கு 2017 பிப்பிரவரி மாதமே அனுப்பப்பட்டன. நடுவண் அரசின் பரிந்துரையின் பேரில்தான் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிப்பது என்பது அரசமைப்புச் சட்ட நடைமுறை ஆகும்.

இச்சட்டங்களுக்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுத் தருவதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறு தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும் அதிகாரிகளும் தில்லி சென்று நடுவண் அரசின் கல்வி அமைச்சர், மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர், சட்ட அமைச்சர், ஆகியோரைப் பிப்பிரவரி மற்றும் மார்ச்சு மாதங்களில் சந்தித்து வேண்டினர். முதலமைச்சர் பழனிச்சாமியும் தில்லியில் நரேந்திர மோடியைச் சந்தித்த போது, இக்கோரிக்கையை முன்வைத்தார்.

எசமானனின் முன் மண்டியிட்டுக் கண்ணீர் மல்க ஓர் அடிமை விடுக்கும் வேண்டுகோளாகவே தமிழ்நாட்டு அரசின் கோரிக்கை முயற்சி இருந்தது. மக்களவையில் 37 நாடாளு

மன்ற உறுப்பினர்களையும் மாநிலங்கள் அவையில் 11 உறுப்பினர்களையும் கொண்டிருக்கின்ற வலிமையைப் பெற்றுள்ள அ.தி.மு.க. தமிழ்நாட்டு மாணவர்களின் நலன் களைக் காத்திட - மாநில உரிமையை நிலைநாட்டிட நடுவண் அரசுக்கு உரிய அழுத்தம் கொடுத்து நுழைவுத் தேர்விலிருந்து விலக்குப் பெறத் தவறிவிட்டது. மோடி அரசின் மனங் கோணாமல் நடந்துகொள்ள வேண்டும் என்பதில் அ.தி.மு.க. ஆட்சி கண்ணுங்கருத்துமாக இருக்கிறது. ஆயினும் மருத்துவப் படிப்புக்கான பொது நுழைவுத் தேர்வுக்கு விலக்கு கிடைத்து விடும் என்கிற பொய்யான நம்பிக்கையை மாணவர்களுக்கு ஊட்டிக்கொண்டே இருந்தது. அரசின் வாக்குறுதியை நம்பி தமிழ்நாட்டு மாணவர்கள் மருத்துவ நுழைவுத் தேர்வு எழுதுவதற்கான முயற்சியில் ஈடுபடாமல் இருந்தனர்.

இந்திய அளவில் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகள் 470 உள்ளன. இவற்றில் 65,170 இடங்கள் உள்ளன. இதேபோன்று மொத்தம் உள்ள 308 பல் மருத்துவக் கல்லூரிகளில் 25,730 இடங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் 22 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 3,050 இடங்கள் உள்ளன. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக எண்ணிக் கையில் அரசு மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. நரேந்திர மோடி முதலமைச்சராக இருந்த குசராத் மாநிலத்தில் நான்கு அரசு மருத்துவக் கல்லூரிகள்- இருபது கோடி மக்களைக் கொண்ட உத்தரப்பிரதேசத்தில் எட்டு அரசு மருத்துக் கல்லூரி கள் மட்டுமே உள்ளன. தமிழ்நாட்டில் தனியார் மருத்துவக் கல்லூரிகள், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள், அரசுக் கல்லூரிகள் ஆகியவற்றில் மொத்தம் 6,500 இடங்கள் இளநிலை மருத்துவப் படிப்பில் (எம்.பி.பி.எஸ்.) உள்ளன. அதாவது 29 மாநிலங்களையும் 7 யூனியன் பிரதேசங்களை யும் கொண்ட இந்தியாவில் உள்ள மொத்த மருத்துவப் படிப் புக்கான இடங்களில் பத்து விழுக்காடு இடங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. இதேபோன்று மருத்துவ மேற்படிப்புக்கான இடங்களும் தமிழ்நாட்டில்தான் அதிக எண்ணிக்கையில் உள்ளன. எனவேதான் தமிழ்நாட்டில் மருத்துவ பொது நுழைவுத் தேர்வை மக்கள் கடுமையாக எதிர்க்கின்றனர்.

மருத்துவ நுழைவுத் தேர்வு 7.4.2017 அன்று இந்திய அளவில் நடைபெற்றது. இத்தேர்வை மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (Central Board of Secondary Education - CBSE - சி.பி.எஸ்.இ.) நடத்துகிறது. நுழைவுத்தேர்வின் வினாக்கள் சி.பி.எஸ்.இ. பாடத் திட்டத்தின் அடிப்படையில் கேட்கப்படுகின்றன. மேலும் பதினோராம் வகுப்பு, பனிரெண் டாம் வகுப்பு பாடங்களிலிருந்து வினாக்கள் கேட்கப்படு கின்றன. 2016-2017ஆம் ஆண்டு இந்தி, ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளில் மட்டும் நுழைவுத்தேர்வு நடந்தது. இந்த ஆண்டு தமிழ், தெலுங்கு, மராத்தி, குசராத்தி, வங்காளி உள்ளிட்ட பத்து மொழிகளில் தேர்வு நடைபெற்றது. ஆனால் ஒவ்வொரு மொழியிலும் வெவ்வேறு வினாக்கள் இருந்தன.

இந்திய அளவில் மருத்துவப் படிப்புக்கான பொது நுழைவுத் தேர்வை 10,90,085 மாணவர்கள் எழுதினார்கள். இவர்



ஓய்வு பெற்ற நீதிபதி அரிபரந்தாமன் உள்ளிட்டோர் நீட் தேர்வுக்கு எதிராக நடத்திய ஆர்ப்பாட்டம்

களில் 6,11,539 பேர் தேர்ச்சி பெற்றனர். தமிழ்நாட்டில் 83,859 மாணவர்கள் நுழைவுத் தேர்வை எழுதினர். 32,570 பேர் தேர்ச்சி பெற்றனர். ஆனால் மாநிலப் பாடத் திட்டத்தின்கீழ் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களில் பெரும்பாலோர் நுழைவுத் தேர்வில் மிகவும் குறைவான மதிப்பெண் பெற்றனர். இது அம்மாணவர்களை யும் பெற்றோர்களையும் அதிர்ச்சியடையச் செய்தது. அதே சமயம் தமிழ்நாட்டில் சி.பி.எஸ்.இ.யில் படித்த மாணவர்கள் நுழைவுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றிருந்தனர். நுழைவுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடந்தால், அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள இடங்களில் 72 விழுக்காட்டை சி.பி.எஸ்.சி. மாணவர்களின் கைப்பற்றும் நிலை ஏற்படும்.

இந்த நிலையில், மாநிலப் பாடத் திட்டத்தில் படித்த மாணவர்கள் பொதுத் தேர்வில் 200க்கு 198, 199, 200 என்கிற அளவில் மதிப்பெண்கள் பெற்றுள்ள போதிலும், மருத்துவப் படிப்பில் இடம் கிடைக்காமல் போவது மிகப் பெரிய சமூக அநீதியாகும் என்பதை உணர்ந்த தமிழ்நாட்டு அரசு 22.6.2017 அன்று ஓர் ஆணையைப் பிறப்பித்தது. அதன்படி மருத்துவ நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள தமிழ்நாட்டு மாணவர்களில், மாநிலப் பாடத் திட்டத்தில் படித்தவர்களுக்கு 85 விழுக்காடும் சி.பி.எஸ்.சி.யில் படித்தவர்களுக்கு 15 விழுக்காடும் மருத்துவப் படிப்பில் இடஒதுக்கீடு அளிக்கப்படும் என்று அந்த ஆணையில் அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கான அடிப்படை பனிரெண்டாம் வகுப்புப் பொதுத்தேர்வில் உயிரியல் பாடப் பிரிவில் மாநிலப் பாடத் திட்டத்தில் 4.2 இலட்சம் மாணவர்கள் தேர்வு எழுதினர். சி.பி.எஸ்.சி. பாடத் திட்டத்தில் 4,675 பேர் எழுதினர். இவர்களில் 2000 பேர்தான் மருத்துவ நுழைவுத் தேர்வை எழுதினர்.

தமிழக அரசின் 85 விழுக்காடு, 15 விழுக்காடு எனும் உள்இடஒதுக்கீட்டு ஆணையை எதிர்த்து சி.பி.எஸ்.இ.யில் படித்த மாணவர்கள் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத் தனர். இவ்வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி எம்.

இரவிச்சந்திரபாபு 11.7.2017 அன்று தமிழக அரசின் ஆணை செல்லாது என்று தீர்ப்பளித்தார். அதனால் தமிழக அரசால் திட்டமிட்டிருந்தவாறு மருத்துவப் படிப்புக்கு மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வை நடத்த முடியவில்லை. தமிழக அரசு உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது.

மருத்துவ சேர்க்கைக்கான கலந்தாய்வு நடக்காத நிலையில் 17.7.2017 முதல் பொறியியல் படிப்புக்கான கலந்தாய்வு நடைபெற்று வருகிறது. அதனால் மருத்துவப் படிப்பில் சேருவதற்கான மதிப்பெண் பெற்றுள்ள போதிலும் பெரும்பாலான மாணவர்கள் பொறியியல் படிப்பில் சேர்ந்து வருவதால், பொறியியல் படிப்பில் தாங்கள் விரும்பிய கல்லூரி யில் இடம் கிடைக்காமல் மாணவர்கள் தவிக்கின்றனர்.

இக்கேடான நிலைக்கு நடுவண் அரசும் தமிழக அரசும் முழுப் பொறுப்பாவார்கள். 2017 பிப்பிரவரியில் மருத்துவ நுழைவுத் தேர்விலிருந்து விலக்கு கோரும் சட்டம் நடுவண் அரசுக்கு அனுப்பப்பட்டது. அதை ஏற்பது அல்லது தள்ளுபடி செய்வது என்கிற எந்தவொரு நிலைப்பாட்டையும் நடுவண் அரசு இக்கட்டுரை எழுதப்படும் நாள் (25.7.2017) வரையில் எடுக்கவில்லை. சட்டமன்றத்தால் ஒருமனதாக நிறைவேற்றப் பட்ட-ஏழரைக் கோடித் தமிழர்களின் கருத்தாக உள்ள சட்டத்தை நடுவண் அரசு கிடப்பில் போட்டுவிட்டது.

தன் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத் தமிழ கத்தின் சுயமரியாதையை, உரிமைகளை எந்த அளவுக்கும் காவு கொடுப்பதற்குத் தயாராக உள்ள எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசு, நுழைவுத் தேர்வி லிருந்து விலக்கு கோரும் சட்டத்துக்குக் குடியரசுத் தலை வரின் ஒப்புதலைப் பெற்றுத்தருமாறு நடுவண் அரசுக்கு உரிய அழுத்தம் தரத் தவறிவிட்டது. மக்களவையில் அ.தி.மு.க. மூன்றாவது பெரிய கட்சியாக இருக்கிறது என்று மார்தட்டிக் கொள்பவர்கள் மோடியின்முன் மண்டியிட்டுக் கிடக்கிறார்கள். குடியரசுத் தலைவர் தேர்தலின்போதுகூட, சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் உள்ள தங்கள் எண்ணிக்கை வலிமையின் அடிப்படையில் பேரம் பேசி விலக்குச் சட்டத்துக்கு நடுவண் அரசின் ஒப்புதலைப் பெற அ.தி.மு.க. அரசு தவறிவிட்டது.

17.7.2017 அன்று சென்னை உயர்நீதிமன்றம், மாநிலத் திட்டத்தில் படித்த மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பில் 85 விழுக்காடு வழங்கும் தமிழக அரசின் ஆணையைச் செல்லாது என்று அறிவித்தவுடன் தமிழக அமைச்சர்கள் விஜயபாஸ்கர், ஜெயகுமார், சி.வி. சண்முகம், கே.பி. அன்பழகன், பி. தங்கமணி ஆகியோர் தில்லிக்குச் சென்றனர். 20.7.2017 அன்று இவர்கள் நடுவண் அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஜெ.பி. நட்டா, கல்வி அமைச்சர் ஜவடேகர், சட்ட அமைச்சர் இரவிசங்கர் பிரசாத் ஆகியோரைச் சந்தித்து தமிழ்நாடு சட்டமன்றம் இயற்றிய சட்டத்துக்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு வேண்டினர். அதன்பின் மு. தம்பித்துரையின் தலைமையில்



நீட் தேர்வின்போது அவமானப்படுத்தும் வகையில் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட மாணவிகள்

தமிழக அமைச்சர்கள் அவ்வரும் நரேந்திரமோடியைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்தனர். இதுபோன்ற நடவடிக் கையைத் தமிழக அரசு நுழைவுத் தேர்வு நடைபெறுவதற்கு முன்பே எடுத்து ஒரு திட்டவட்டமான முடிவு நிலையை உண்டாக்கியிருக்க வேண்டும்.

24.7.2017 அன்று தமிழகத்தைச் சேர்ந்த ஆறு அமைச்சர்கள் தில்லியில் பொன். இராதாகிருட்டிணன், மு. தம்பித்துரையுடன் நடுவண் அரசின் உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங், சட்ட அமைச்சர் அருண்ஜெட்லியைச் சந்தித்து, தமிழக அரசின் சட்டத்துக்கு ஆதரவு கோரினர். முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம், நரேந்திர மோடியைச் சந்தித்து இதுகுறித்து விண்ணப்பம் அளித்தார். தமிழக அரசு அனுப்பிய சட்டத்தின்மீது நடுவண் அரசின் நிலைப்பாடு என்ன என்பது இதுவரையில் எதுவும் தெரியவில்லை.

மருத்துவப் படிப்புக்கான பொது நுழைவுத் தேர்வு குறித்த சிக்கலுக்கு, தமிழ்நாட்டு அரசின் பாடத் திட்டத்தை சி.பி.எஸ்.இ.யின் பாடத் திட்டத்திற்கு இணையாக மாற்றிய மைப்பதுதான் தீர்வு என்று படித்த மேல்சாதி ஆதிக்கச் சக்திகள் கூறிவருகின்றன. ஆனால் குறைந்தது அரசு மருத்துவக் கல்லூரியில் உள்ள இடங்களுக்கேனும் தேசிய தகுதிகாண் நுழைவுத் தேர்விலிருந்து விலக்கு பெறுவதே சரியான தீர்வாகும். அப்போதுதான் ஊரகப் பகுதியிலும் நகரங்களிலும் உள்ள கீழ்த்தட்டு வகுப்பு மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் இடம்பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கும்.

தேசிய அளவிலான பொது நுழைவுத் தேர்வு இருக்கும் நிலையில், நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி நிலையங்கள் நகரங்களில் ஏற்படும். இவற்றில் இலட்சக்கணக்கில் பணம் செலுத்திப் படிக்கும் பணக்கார வீட்டுப்பிள்ளைகளே நுழைவுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவார்கள். இவ்வாறு மேட்டுக் குடியிலிருந்து மருத்துவம் பயிலும் மாணவர்கள் சிற்றூர் களில் உள்ள அரசின் தொடக்க சுகாதார மய்யங்களில் பணி யில் சேரமாட்டார்கள். தனியார் மருத்துவமனைகளுக்குச் செல்வார்கள். இதனால் கிராமப்புறங்களில் குறைந்த அளவி

லேனும் அரசு அளிக்கும் மருத்துவ சேவையை மக்கள் பெற முடியாத நிலை ஏற்படும். இதனால் ஏழை, எளிய மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

தனியார் மருத்துவக் கொள்ளை மேலும் அதிகரிக்கும். இப்போது தனியார் மருத்துவக் கல்லூரிகளின் நிருவாக ஒதுக் கீட்டு இடங்களிலும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களிலும் ஒரு கோடி உருபாவுக்கு மேல் செலவு செய்யக்கூடிய அளவுக்கு வசதி படைத்த பணக்கார வீட்டுப் பிள்ளைகள்தான் படிக்கின்றனர். தமிழக மக்களின் வரிப்பணத்தில் உருவாக் கப்பட்டு, செயல்படுகின்ற அரசு மருத்துவக் கல்லூரிகளிலும் பணக்கார வீட்டு மாணவர்களே படிக்கும் நிலையை ஏற் படுத்தும் நுழைவுத் தேர்வு முறையை சமூக நீதியில் அக்கறை உடைய அனைவரும் எதிர்த்து ஒழிக்க வேண்டுமல்லவா!

நடுவண் அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழுவின் 92ஆவது அறிக்கை 8.3.2016 அன்று மக்களவையிலும் மாநிலங்கள் அவையிலும் வைக் கப்பட்டது. அதில் இந்தியா முழுவதற்கும் மருத்துவ நுழைவுத் தேர்வு நடத்தப்படவேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. அத்துடன், பொது நுழைவுத் தேர்வில் பங்கேற்க விரும்பாத மாநிலங்களுக்கு விலக்கு அளிக்கலாம் என்றும் அதில் கூறப் பட்டிருந்தது. எனவே நுழைவுத் தேர்விலிருந்து விலக்கு கோரிட மாநில அரசுக்கு உரிமை உள்ளது.

உச்சநீதிமன்றத்தில் அய்ந்து நீதிபதிகளைக் கொண்ட அமர்வு, “மார்டன் பல் மருத்துவமனை” வழக்கில் 2016 மே 2 அன்று அளித்த தீர்ப்பில், “மாநிலங்களில் நிலவும் சமமற்ற வாய்ப்பைக் கருத்தில் கொண்டு, எல்லோருக்கும் சமமான வாய்ப்பை வழங்கக் கூடிய வகையில் மருத்துவக் கல்விக் கான மாணவர் சேர்க்கை நடைமுறையை வகுத்து, அதற் கான சட்டம் இயற்றும் அதிகாரம் மாநில சட்டமன்றங்களுக்கு உள்ளது” என்று கூறப்பட்டுள்ளது.

எனவே தமிழ்நாட்டு அரசு 2017இல் இயற்றிய சட்டத் திற்கு நரேந்திர மோடி தலைமையிலான நடுவண் அரசு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுத்தரும் பொறுப் பைத் தட்டிக்கழிக்க முடியாது. ஆனால் இந்துத்துவ மோடி அரசின் நோக்கம் நடுவண் அரசின் கீழ் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் மட்டுமின்றி, மாநிலங்களில் உள்ள மருத்துவக் கல்லூரிகளிலும் மேல்சாதி பணக்கார மாணவர்களே இடம் பெறவேண்டும் என்கிற தீயநோக்கத்துடன்தான் தேசிய பொது நுழைவுத் தேர்வைக் கட்டாயமாக்குகிறது.

மாநிலங்களில் உள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி களிலிருந்தும் 15 விழுக்காடு இடங்களை நடுவண் அரசு பறித்துக் கொள்கிறது. இந்த இடங்களுக்கு நுழைவுத் தேர்வின் தரவரிசைப்படி இந்த ஆண்டு மாணவர் சேர்க்கையை நடத்திய போது பிற்படுத்தப்பட்டோர் 27 விழுக்காடு, தாழ்த்தப் பட்டோர் 15 விழுக்காடு, பழங்குடியினர் 7.5 விழுக்காடு என 49.5 விழுக்காடு போக மீதி உள்ள 50.5 விழுக்காடு இடங் களுக்கு முற்றிலும் மேல்சாதி மாணவர்களையே சேர்த்த கொடுமை நிகழ்ந்துள்ளது. இதே நடைமுறையை மாநிலங் களிலும் செயல்படுத்த வேண்டும் என்பதே மோடி அரசின் நோக்கமாகும்.

2018-2019ஆம் கல்வி ஆண்டில் ஆயுர்வேதா, யுனானி, சித்த மருத்துவம், ஹோமியோபதி ஆகிய மருத்துவப் படிப்பு களுக்கும் தேசிய நுழைவுத் தேர்வை நடத்த நடுவண் அரசு முடிவு செய்துள்ளது. அதேபோல் பொறியியல் படிப்புக்கும் இந்திய அளவில் நுழைவுத் தேர்வை நடத்திட தீவிரமாகத் திட்டமிட்டு வருகிறது.

தற்போது தமிழக அரசு தமிழக மாணவர்களின் பெற் றோர்களின் கடும் சினத்தைத் தணிப்பதற்காக மருத்துவ நுழைவுத் தேர்விலிருந்து ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு விலக்கு பெற்றிட நடுவண் அரசிடம் கெஞ்சிக் கூத்தாடிக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டின் ஏழை எளிய, நடுத்தர வகுப்புகளின் மாணவர்களின் நலனைக் காத்திடவும், கல்வியில் மாநில அரசின் உரிமையை நிலை நாட்டிடவும் மருத்துவ நுழைவுத் தேர்விலிருந்து நிலையான விலக்கு பெறும் வரையில் தொடர்ந்து போராடுவோம்.

## வே.ஆனைமுத்து மாமன் மகன் க. துரைசாமி ஆசிரியர் மறைவு



முருக்கன்குடியில் கலியபெருமாள்-சேவாயி இணையரின் ஐந்தாவது மற்றும் இளைய மகனாக 8.7.1930 அன்று பிறந்தார். நல்ல கல்வி பயின்று 26.8.1958இல் ஆசிரியர் பணியைத் தொடங்கினார். இவருக்கு மனைவி ரெங்கநாயகி அம்மாள், மகள்கள் தேன்மொழி, மணி, முத்துலெட்சுமி, விஜயா, மகாலெட்சுமி, செல்வராணி, மகன் கணேசன் ஆகியோர் உள்ளனர்.

மகன் கணேசன் அரசு சார்ந்த பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் பணிபுரிந்து வருகிறார். இவர் பிறந்த குடும்பத்தில் இவர் மட்டுமே ஆசிரியர் என்பதால் தனது அண்ணார் பிள்ளைகளுக்குக் கல்வி அளிப்பதில் மிகவும் ஆர்வம் கொண்டு பயிற்றுவித்தார். இவரது குடும்பம் ஒரு கூட்டுக் குடும்பம் என்பதால், தனது மாத ஊதியம் முழுவதையும் மூத்த அண்ணார் வீரமுத்து படையாட்சியிடம் கொடுத்து கூட்டுக் குடும்பத்திற்கு இலக்கணமாகத் திகழ்ந்தார்.

இவர் 31.5.1981இல் தனது ஆசிரியர் பணியை நிறைவு செய்தார். சில நாள்களாக உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டு 16.5.2017இல் மறைவுற்றார்.

**- வீ.பாலுசாமி**

## முற்றுரிமை பெற்ற தனித்தமிழ்நாடு வேண்டும் - 01.11.1956

தமிழ்நாடு தமிழருக்கே – 11.09.1938

## தமிழ்நாடு பிரிட்டிஷ் மன்னர் ஆளுகையில் இருக்க வேண்டும் - 30.4.1942

முற்றுரிமை பெற்ற திராவிட நாடு வேண்டும் – 29.08.1945

தந்தை பெரியார் அவர்கள் ''தமிழ்நாடு தமிழருக்கே!'' என முதன்முதல் 11.9.1938இல் குரல் எழுப்பினார். அது இந்தி கட்டாயப் பாடம் ஆக்கப்பட்டதால் எழுந்தது.

அப்போது அவர் தமிழர், தெலுங்கர், கன்னடர், கேரளர், ஒரியர் உள்ளிட்ட ''தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம்'' (S.I.L.F.) (அ) நீதிக்கட்சி என்ற தேர்தல் கட்சியின் தலைவராக இருந்தார்.

எனவே, உடன்காலில், சென்னை செட்டிநாடு அரண்மனையில் 15-10-1939இல் நடந்த மேற்படி நீதிக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில், தெலுங்கர்கள், ''நீங்கள் எம்கட்சியின் தலைவர். நீங்களே தமிழ்நாடு தமிழருக்கே என்று கோரினால் - மற்ற நாங்கள் எங்கே போவது?'' என்று, ஈ.வெ.ரா.விடம் கேட்டார்கள்.

உடனே, 17.12.1939இல் ''திராவிட நாடு திராவிடருக்கே!'' என முழங்கினார்.

திருவாரூர் மாநாடு 24, 25.8.1940இல் நடந்தது. அதற்குமுன் ''திராவிட நாட்டின் எல்லை எது?'' என்று ஈ.வெ.ராவிடம் கேட்டார்கள். அப்போதைய சென்னை மாகாணத்தின் படத்தை வரைந்து, திருவாரூர் மாநாட்டில் அதைத் திறந்து வைக்க, ஈ.வெ.ரா. ஏற்பாடு செய்தார். திருவாரூர் மாநாட்டில், ஈ.வெ.ரா. - அரை மணிநேரம் தெலுங்கிலும் உரையாற்றினார்.

இவை உறுதியானவை.

ஆனால், 30.4.1942இல் சர். ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் குழுவிடம் (Sir. Stafford Cripps Mission) என்ன கோரினர் பெரியார் குழுவினர்?

''தமிழ்பேசும் மாவட்டங்களை மட்டும் (Tamil Speaking Districts) தில்லி ஆதிக்கத்திலிருந்து தனியே பிரித்து, பிரிட்டானியச் சக்கரவர்த்தி ஆளுகையின்கீழ் இருக்கப் பரிந்துரை செய்ய வேண்டும்'' என்று மட்டுமே - ஈ.வெ.ரா., என்.ஆர். சாமியப்பா, எம்.ஏ. முத்தய்ய செட்டியார், ஊ.பு. சௌந்திரபாண்டியன் குழுவினர் கேட்டனர்.

அதாவது, ''பார்ப்பனர்-பனியா ஆதிக்கத்திலிருந்து தமிழ்நாட்டைப் பிரித்து, அயல்நாட்டு வெள்ளையர் ஆதிக்கத்தில் வைக்கப் பரிந்துரை செய்யுங்கள்'' என்றே, கிரிப்ஸ் குழுவிடம் நால்வரும் கோரினர்.

''அது எங்கள் அதிகார வரம்பில் - terms of reference இல்லாதது. அப்படி நாங்கள் செய்ய முடியாது'' என்று, 30.4.1942லேயே நேரில் கூறிவிட்டனர், கிரிப்ஸ் குழுவினர்.

**இது, ''<u>முற்றதிகாரம் பெற்ற திராவிட நாடு</u>'' ஆகாது. மாறாக, உச்சகட்டக் குழப்பமான கோரிக்கையே இது.**

கிரிப்ஸ் பரிந்துரைத்த முடிவை, வெள்ளையர் அரசு, திட்டவட்டமாக 1945 சூலையில் அறிவித்தது. அப்போது தான், தனிச்சுதந்தர நாட்டு உணர்வு, உண்மையில் ஈ.வெ.ராவுக்கு உதித்தது.

அம்முடிவு, வெள்ளையரால் வெளியிடப்பட்ட போது, ஏற்கெனவே, 26, 27.8.1944 சேலம் மாநாட்டின் முடிவுப்படி, ''தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் (அ) நீதிக்கட்சி'' என்கிற பெயரை ''திராவிடர் கழகம்'' என்று மாற்றப்பட்டுவிட்டதன் நீட்சியாக, 29, 30.9.1945இல் ''திராவிடர் கழக - (நீதிக்கட்சி) 17ஆவது மாகாண மாநாடு'' திருச்சிராப்பள்ளி புத்தூர் மைதானத்தில் (இப்போது மாவட்டத் தலைமை மருத்துவமனை உள்ள இடம்) மாபெரும் பந்தரில் நடைபெற்றது.

அம்மாநாட்டில், ஈ.வெ.கிருஷ்ணசாமி மகள் ஈ.வெ.கி. மிராண்டா, பி.ஏ., திராவிடர் கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

அம்மாநாட்டில், இரண்டு நாள்களும் நான் பிரதிநிதியாகப் பங்கேற்றேன். தந்தை பெரியார் மற்றும் ஏனைய தலைவர்கள் உரையை அங்கு கேட்டேன்.

**அந்த மாநாட்டில் தான் - பிசிறு இல்லாத - ஈரட்டு இல்லாத - வழவழாத்தனம் இல்லாத - தன்மையில் ''அந்நிய நாட்டு வெள்ளை ஏகாதிபத்தியமும், பார்ப்பன-பனியா சுரண்டலும் ஒழிந்த தனிச் சுதந்தர திராவிட நாடு அடைவதே, திராவிடர் கழக இலட்சியம்''** என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**அதன்பிறகு, எப்போதும் பெரியாரின் தனிநாட்டுப் பிரிவினைக் கோரிக்கையில் கொஞ்சமும் தடுமாற்றம் இல்லை.**

**நாட்டுப் பிரிவினை என்பது பலரைக் காவு கொடுப்பது என்பதிலும் பெரியார் தெளிவாகவே இருந்தார். 9.12.1973 கடைசி மாநாட்டிலும் அதைச் சுட்டிப் பேசினார். நிற்க.**

**அவருடைய வாழ்நாளில், பலரைச் சாகக் கொடுக்க ஏற்ற விடுதலைப் படையை அவர் உருவாக்கவில்லை.**

**அவருடைய பிறங்கடைகளும், அத்தகு படை பற்றிச் சிந்திக்கவில்லை.**

அதன் அடையாளமாக "தமிழ்நாடு" நீக்கப்பட்ட, இந்திய தேச வரைபடத்தை அச்சிட்டு அதை 1960இல் எரித்தார்.

ஆனால் அவர் சாகும் தறுவாயிலும், 1.11.1956இல் திடமாக அவர் அறிவித்தபடி, தம் 19.12.1973 இறுதிச் சொற்பொழிவில், "தனிச் சுதந்தரத் தமிழ்நாடு வேண்டும்" என்பதில் உறுதியாக இருந்தார்; அதனை அடையச் சூளுரைத்தார்.

இன்று தந்தை பெரியார் இல்லை.

**தமிழ்நாட்டுப் பிரிவினை என்று சொன்னாலே - ஒரு கோடி தமிழர் சாக நேரிடும் என்பது முற்றுறுதி யாகும்.**

அவர் விடுதலைப் படையை அமைக்க முடியாமல் போனதற்கான முதலாவது காரணம், இந்திய மக்களில் இந்துக்களில் 97 பேர் உரிமை உணர்வு அற்ற கீழ்ச் சாதிக்காரர்களாக ஆக்கப்பட்டவர்கள்.

"..... அவ்வளவு எண்ணற்ற பிரிவு. இங்கே ஒருவனுடைய கவலையை மற்றவன் எடுத்துக் கொள்வதில்லை. அப்படி எடுத்துக் கொண்டாலும் அதுவும் பார்ப்பனர்களுக்குத் தான் அனுகூலம். ஒரு பிள்ளையை அடித்தால் மற்றொரு முதலி பார்த்துக் கொண்டு சந்தோஷப்படுவது மட்டும் அல்லாமல், 'வெள்ளாளப் பயலுக்கு நல்லா வேணும்' என்று காலாட்டிக் கொண் டிருக்கிறான்" என, திருவாரூரில் 18.12.1939இல் தம் சொற்பொழிவில் குறிப்பிட்டுள்ளார். ("குடிஅரசு", 31.12.1939, "பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்" - இயக்கங்கள் - தலைப்பு - தொகுதி 2-2, பக்கம் 759).

மேலும், "வாலிபர்களே சிந்தித்துப் பாருங்கள்!" என்ற தலைப்பில், 31.12.1939இல் "குடிஅரசு" இதழில் எழுதிய தலையங்கத்தில் பின்வருமாறு ஈ.வெ.ரா. குறிப்பிட்டுள்ளார்.

"இராணுவத்தில் இந்நாடு பயிற்சி பெறவில்லை. இந்நிலைக்கு யார் காரணம்? வீரம் நிறைந்திருந்த மக்களைத் தர்ப்பைப் புல்லைக் காட்டி, வஞ்சனை யால் மிரட்டிக் கோழைகளாக்கியது யார் என்பதை நாம் விளக்க வேண்டியதில்லையென்றே கருதுகிறோம்.

ஆகவே, இந்த நிலையில் அரசியல் நிர்வாகத்தில் படிப்படியாக அனுபவம் பெற்று சுதந்தரத்தைப் பெறுவது தான் இந்நாட்டுக்கு இருக்கு ஒரே வழி" எனவும் 31.12.1939இல் குறிப்பிட்டுள்ளார். (மேற்படி தொகுதி - பக்கம் 766).

இன்னொன்றையும் நாம் கருதவேண்டும்.

தந்தை பெரியார், பார்ப்பனருக்கு எதிராகத் தத்துவப் பரப்புரை செய்தாரே அன்றி, அவர் வாழ்நாள் வரை யில் அவர்கள் பேரில் வன்முறை யை ஒரு சமயத் திலும் ஏவிவிடவில்லை. அமைதி வழியை - அகிம்சை வழியை இறுதி வரையில் கடைபிடிப்பவராகவே அவர் வாழ்ந்தார் என்பதை நாம் அறிகிறோம்.

இந்தப் புரிதலுடன், மா.பெ.பொ.க. பின்கண்ட முடிவை மேற்கொண்டது.

மா.பெ.பொ.க. நாட்டுப் பிரிவினைக்கு அணியமாக இல்லை. எனவே மக்கள் நாயக முறையில், தன்னு ரிமை (அ) தன்னாட்சி (Autonomy) பெற்ற மொழிவாரி மாநிலங்கள் ஒன்றிணைந்த - மதச்சார்பற்ற, சமதர்ம கூட்டாட்சியாக இந்தியாவை மாற்றியமைப்பதை அரசியல் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி, மார்க்சியம் - பெரியாரியம் - அம்பேத்கரியம் - இணைக் கப்படாத எந்த வேலைத் திட்டமும் - ஒருசேர சமூக - அரசியல் - பொருளாதார - பண்பாட்டு விடுதலையை ஒருபோதும் தமிழர்க்குக் கொணர மாட்டா எனத் திடமாக நம்புகிறது.

**01.08.2017** **- வே. ஆனைமுத்து**

## கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ்



கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ், மற்றும் இயல் இசை நாடக மன்றம் இணைந்து நடத்திய கார்த்திக் ராஜகோபால் 28 வது கோடை நாடக விழாவில் பங்கு பெற்று சிறந்த நாடகம், சிறந்த கதை, சிறந்த வசனம், சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த துணை நடிகை, சிறந்த இசை, சிறந்த ஒப்பனை உள்ளிட்ட 9 விருதுகளை உறவோடு விளையாடு நாடகம் வென்றது. அதற்கான பரிசளிப்பு விழா சமீபத்தில் நாரத கான சபாவில் நடைபெற்றது.

சிறந்த கதை, சிறந்த வசனம் ஆகியவற்றுக்கான சுழற்கேடயம், பாராட்டு இதழினை பூவை மணி பெற்றபோது எடுத்த படம். உடன் இயக்குனர் மௌலி, கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ் தலைவர் சபாரத்னம், சுந்தரம் பைனான்ஸ்.. ஸ்ரீனிவாச ராகவன் ஆகியோர் உள்ளனர். பூவை மணி பிரபல எழுத்தாளர் பூவை எஸ். ஆறுமுகம் அவர்களின் மகன் என்பது குறிப்பிடத் தக்கது.

# மக்களை வாட்டி வதைக்கும் சரக்கு சேவை வரி

## கொடுங்ன்மை-பாசிச அரசு!.
## ஒவ்வொருவரும் 2 முறை படியுங்கள்!

குட்டுவன்

எல்லா நாடுகளிலும் வரி அமைப்பு முறை மன்னர் ஆட்சிக் காலத்திலிருந்து இயங்கி வந்தது. பண்டைய காலத்தில் உணவு தானியங்களே நிலவரியாகப் பெறப்பட்டன. பண்டைய தமிழ் சமூகத்திலும் வரி அமைப்பு இயங்கியதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. சுங்கவரியும் விதிக்கப்பட்டதாகப் பட்டினப் பாலையில் குறிப்புகள் உள்ளன. ஓர் அரசு எவ்வகையில் வரி விதிப்பை மேற்கொள்ள வேண்டும் என்பதை வள்ளுவர்

**இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த**
**வகுத்தலும் வல்ல தரசு.** - குறள் 385

என்று அழகுற விளக்கி, அரசமைப்பு முறைக்கு இலக்கணம் தருகிறார். 18ஆம் நூற்றாண்டிற்குப் பிறகுதான் தற்கால வரி அமைப்பு முறை விரிவுபெற்றது. பொருளாதாரத் தந்தை என்று போற்றப்படுகிற ஆதம் சுமித் 'ஒருவருடைய வருமானத் திறனுக்கு ஏற்ப வரி செலுத்த வேண்டும் (Ability to pay principle)' என்ற கருத்தை முன்மொழிந்தார். மேலும் அரசு, வரிகளைப் பெறும்போது மக்களைத் துன்புறுத்தாத வகையிலும் இருக்க வேண்டும் என்று கூறிப் பல புதிய விதிகளை புகுத்தினார். அவற்றில் ஒன்றுதான் திறன் மிக்க நிர்வாகம் ஆகும்.

பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு லூயி மன்னர்கள் ஆட்சியில், வரிக் கொடுமைச் சட்டங்கள் நிறைவேற்றப் பட்டன. ஒரு பக்கம் உணவுக்குப் பற்றாக்குறை, மற்றொரு புறம் செல்வக் குவிப்பு, ஏழைகள் மீதோ வரிக்கொடுமை! இத்தகைய காரணங்களால்தான் இயற்கைவாதிகள் (Pysiocrats) என்பவர்கள் பிரான்சு நாட்டில் கொடுமை யான முறையில் வசூலிக்கப்பட்ட வரிகளை எதிர்த்தார்கள். இதுவும் பிரெஞ்சுப் புரட்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது.

குறிப்பாக வேளாண் துறையில் மிகை உற்பத்தி இருந்தால் வரி விதிப்பதில் தவறில்லை என்றும் வாதிட்டார்கள். ஆனால் இக்காலக்கட்டத்தில் Mercantilism என்ற பொருளாதாரக் கொள்கையை இங்கிலாந்தில் இருந்த சில பொருளாதார எழுத்தாளர்கள் வலியுறுத்தினர். இங்கிலாந்து அரசு வலிமையாக இருக்க வேண்டுமென்றால் வரிவிதிப்பை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டனர். இதைத்தான் பொருளாதார நூல்களில் 'வணிகஇயல் கொள்கை' (Mercantilism) என்று குறிப்பிடுகின்றனர். இதற்கு எதிர்ப்பாகப் பிரரெஞ்சு இயற்கையாளர்கள் வரியின் சுமையை மக்கள் மீது ஏற்றக்கூடாது என்று வாதிட்டனர். இக்காலக்கட்டத்தில் உருவான பொருளாதாரமே அரசியல் பொருளாதாரம் (Political Economy) என்று அழைக்கப்பட்டது. 18, 19ஆம் நூற்றாண்டுகளில் பல பொருளியல் அறிஞர்கள் குறிப்பிட்ட அரசியல் பொருளாதாரத்தின் திறனாய்வே காரல் மார்க்சின் மூலதனம் என்ற நூலாகும்.




ஜி.எஸ்.டியால் ஜவுளித் தொழில் கடுமையாக பாதிக்கப்படுவதை கண்டித்துக் கடையடைப்பு

19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய-அமெரிக்க நாடுகளில் செல்வாக்குப் பெற்ற நலப்பொருளாதாரம் (Welfare Economics) உருவாயிற்று. இக்கொள்கையை ஏற்ற பிறகு கல்வி, பொதுச் சுகாதாரம் மற்றும் கட்டமைப்புத் துறைகளில் அரசின் செலவு பெருகியது. எனவே புதிய வரிகளும் விதிக்கப்பட்டன.

முதல் உலகப் போர் ஏற்படுத்தியப் பேரழிவும் பொருளாதாரச் சரிவும் ஐரோப்பிய நாடுகளைப் பெருமளவில் பாதித்தன. வரிகள் வழியாக வருவாய் ஈட்டினால்தான் மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்ற கொள்கையும் வலியுறுத்தப்பட்டது.

இந்தியாவில் கிழக்கிந்தியக் குழும ஆட்சியில் நிலவரியைத்தான் அதிகமாக விதித்து வருவாயைப் பெற்றார்கள். 1857இல் நடந்த சிப்பாய்க் கலகத்தில் இராணுவச் செலவிற்காகப் புதிய வரிகளை விதிக்க முற்பட்டார்கள். தற்காலிகமாக வருமான வரியும் 1857க்குப் பிறகு விதிக்கப்பட்டது. பிரித்தானிய ஆட்சியில் 1919, 1935 ஆண்டு அரசமைப்புச் சட்டங்களில் நடுவண் அரசு, மாகாண அரசு, உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றுக்கான அதிகாரப் பகிர்வும் தனித்தனியான வரிவிதிப்பு முறையும் வகுக்கப்பட்டன.

1935ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டப்படி 1937ஆம் ஆண்டு தமிழ் மாகாணத்தின் பிரதமராகப் பதவியேற்ற இராஜகோபாலாச்சாரியார் சென்னைப் பல்கலைக்கழகப் பொருளாதாரத் துறைத் தலைவர் பி.ஜே.தாமசின்



ஜி.எஸ்.டி.யால் உணவகங்களில் விலைகள் உயர்ந்ததால் தெருவோரக் கடைகளை நாடும் மக்கள்

பரிந்துரையின் பெயரில் முதன்முதலில் விற்பனை வரியை விதித்தார். இந்த விற்பனை வரிதான் வாட் வரியாக மாறி இன்று சரக்கு-சேவை வரியில் இணைக்கப்பட்டுள்ளது. ஆனால் 1935ஆம் ஆண்டு பிரித்தானிய அரசியல் சட்டத்தில் மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட வரிகளைக் கூட, 1950க்குப் பிறகு ஒவ்வொன்றாக ஒன்றிய அரசுப் பிடுங்கிக் கொண்டே வருகிறது. இதில் இறுதிக் கட்டம்தான் இன்றைய சரக்கு சேவை வரியாகும். 1950இல் இந்திய அரசமைப்புச் சட்டம் நடைமுறைபடுத்தப்பட்ட போது, சேவை வரியைப் பற்றி எந்த விதியும் இடம்பெறவில்லை.

2002இல் வாஜ்பாய் அரசால் அமைக்கப்பட்ட வெங்கடாசலய்யா ஆணையம் சேவை வரியை எஞ்சிய அதிகாரத்தை (Residual Powers) பயன்படுத்தி இவ்வரியை விதிப்பது மிகத் தவறான முன்னுதாரணம் என்று கண்டனம் தெரிவித்தது. 2003லிருந்து ஒன்றிய அரசால் தன்னிச்சையாக விதிக்கப்பட்ட சேவைவரி இன்றைக்கு ஒன்றிய அரசிற்குப் பல இலட்சங் கோடி ரூபாய் வருவாயை ஆண்டுதோறும் அளித்து வருகிறது. ஒன்றிய அரசு தந்திரமாக மாநில எல்லைக்குள் விதிக்கும் இதுபோன்ற வரியைப் பற்றி மாநில அரசுகள் பெரும் அக்கறையோ கவலையோ கொள்ளவில்லை. மதிப்புக் கூட்டுவரியை (வாட்) விதிப்பதற்கு ஒன்றிய அரசுக் கையாண்ட முறையை எதிர்த்து மேற்கு வங்க இடதுசாரி ஜோதிபாசு அமைச்சரவையில் இடம் பெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்தத் தலைவரான அசோக் மித்ரா கொல்கத்தா உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். ‘மாநில அரசுகளின் உரிமை பறிபோகிறது இந்த வரியால் மாநிலங்களுக்கும் மக்களுக்கும் பலன்கள் கிடைக்காது’ என்று வாதிட்டார். இதில் ஒரு வியப்பு என்னவென்றால் மேற்குவங்க ஜோதிபாசு முதலமைச் சரவையில் நிதியமைச்சராக பொறுப்பு வகித்திருந்த அஜிம்தாஸ் குப்தா வாட் வரியை நடைமுறைப்படுத்தும் ஆலோசனைக் குழுவின் தலைவராகச் செயல்பட்டார்.

தமிழ்நாட்டில் 2006வரை வாட் வரியைத் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்கு காரணம் தமிழ் நாடு திட்டக்குழுவின் துணைத்தலைவராகப் பணி யாற்றிய இக்கட்டுரையாளர் (பேராசிரியர் மு.நாகநாதன்) வாட் வரிக்கு எதிராக பல புள்ளிவிவரங்களை இணைத்து சிறு கருத்துரையை வழங்கினார். இதைப் பார்த்த தமிழ்நாட்டு அரசின் உயர் அலுவலர்களும் வாட் வரி வேண்டாம் என்பதை ஒப்புக்கொண்டனர். இந்தியா முழுவதிலும் வாட் வரி நடைமுறைப்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு மட்டும் தனித்து நிற்கிறது என்று ஒன்றிய அரசின் சார்பில் ப.சிதம்பரம் அன்றைய முதல்வர் கலைஞரிடம் வலியுறுத்தினார். **இவ்வரி உடனடியாக நடைமுறைப்படுத்தப்படுவதால் தமிழ்நாட்டிற்கு ஏறக் குறைய ரூ.3000 கோடி இழப்பு ஏற்படும் என்று மதிப்பீடு செய்யப்பட்டது. உடனடியாக இந்த இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்று ஒன்றிய அரசு உறுதியளித்தது. ஆனால் இந்த உறுதிமொழியை ஒன்றிய அரசு காப்பாற்றவில்லை.**

வாட் வரி முறையே 1 5 14.5 என்ற விழுக்காடுகளில் விதிக்கப்பட்டது. பல அமைப்புகளும் வணிகர்களும் எதிர்த்தார்கள். வாட் வரியை நடைமுறைப்படுத்தினால் நுகர் பொருட்கள் மருந்துகள் விலை குறையும் என்று வாக்களிக்கப்பட்டது. ஆனால் அனைத்துப் பொருட்களின் விலையும் பன்மடங்காக உயர்ந்தது. தமிழ்நாடு அரசு தனது வளர்ந்து வரும் வருவாய்த் தேவையை ஈடுகட்டுவதற்காக வாட் வரி, வாட் அல்லாத வரிகள் என்று வகுத்துக்கொண்டு 2007 முதல் 2017 சூன் திங்கள் வரை இரண்டு வரிகளைப் பின்பற்றியது. சான்றாக வாட் வரி வழியாக 2010-11 நிதியாண்டில் தமிழ்நாடு பெற்ற வரி வருவாய் ரூ.12,563 கோடிகளாகும். 2015-16 நிதியாண்டில் பெற்ற வருவாய் ரூ.23,572 கோடி களாகும். வாட் அல்லாத வரியாக தமிழ்நாடு பெற்ற வருவாய் 2010-11 நிதியாண்டில் ரூ.13,795 கோடிகளாகும் 2015-16 நிதியாண்டில் இந்த வரி

வருவாய் ரூ.30,574 கோடிகளாக உயர்ந்தது. காரணம் நமது குடிமக்கள் குடலை அறுத்துக்கொண்டு மதுவை அருந்தி 2015-16இல் செலுத்திய வரித்தொகை ரூ.15,702 கோடிகளாகும். இரண்டாவதாக பெட்ரோலியப் பொருட்கள் அளிக்கும் வரி வருவாய் ரூ.10,080 கோடிகளாகும். மூன்றாவதாக கரும்பு, புகையிலை மீது விதிக்கப்படும் வரிகளாகும். இதுமட்டுமல்லாமல் உச்சநிலையில் சில மதுவகைகளின் மீது 245 விழுக்காடு வரை வரிகள் விதிக்கப்படுகின்றன. ஏற்கெனவே ஒழுங்காக இயங்கி வந்த மாநில வரி வருவாய், எல்லையில் சீரமைப்பு என்ற பெயரில் ஒன்றிய அரசு அடித்த கொட்டங்கள் ஏற்படுத்திய குழப்பங்கள் எண்ணிலடங்கா. **இதில் பாஜக காங்கிரசுக் கட்சிகளுக்கிடையே வேறுபாடுகள் இல்லை. தேசியம் என்பது புதிய முதலாளித்துவம் ஆகும் என்பதை இக்கட்சிகள் அறிவிக்காமலேயே மக்களை ஏமாற்றி வருகின்றன.**

ஜனகண வரியே வரியே
ஏழை மீதுதான் எல்லா வரியுமே
ஜனகண உள்நாட்டு பன்னாட்டு முதலாளிகளுக்கே
எல்லா வரிச்சலுகைகளே ஜனகண

என்று புதிய கீதத்தைப் பாடி வருகின்றனர். இத்தகைய சூழலில் 2017 சூலை 1 முதல் ஒன்றிய அரசு நள்ளிரவில் சரக்கு சேவை வரி என்ற பெயரில் 5, 12, 18, 28 விழுக்காடு என நான்கு முனை வரிகளை விதித்துள்ளனர். பொருளாதாரப் பாடங்களில் முதன்மையான பாடமாக-பொது நிதியியல் (Public Economics) என்ற பாடமும் இளங்கலை முதுகலைப் பாடங்களில் இடம் பெற்றுள்ளது. எல்லாப் பொருளாதார அறிஞர்களும் ஒட்டு மொத்தமாக மறைமுக வரிகள் மக்களை வாட்டி வதைக்கும் வரிகள் வரிச்சுமையை அதிகரிக்கும் வரிகள் என வாதிட்டுள்ளனர். இத்தயை மறைமுக வரியை ஆங்கிலத்தில் Regressive Taxes என்று குறிப்பிடுவ ார்கள். தமிழில் இதைக் கொடுங்கோன்மை வரிகள் என்றே குறிப்பிடலாம். இந்த விவரங்கள் எல்லாம் மக்களிடம் சென்று அடைந்துவிடக்கூடாது என்பதற்காகத் திசை திருப்பும் வகையில், 'ஒரே வரி, ஒரே நாடு' என்ற முழக்கம் வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களில் எழுப்பப்படுகிறது. சான்றாக ஒன்றிய தீர்வை வரி (Central Excise Duty), கூடுதல் தீர்வை வரிகள் (Additional Duties of Excise), மருந்து கழிவறை சார்ந்த பொருட்களின் மீதான தீர்வை (Excise Duty levied under Medicinal and Toilet Preparation Act), இறக்குமதி மீதான கூடுதல் வரிகள் (Additional Duties of Customs) சேவை வரிகள் (Servics Taxes), துணை வரிகள் (Cesses), துணைக் கட்டணங்கள், (Surcharges), ஆகிய எல்லா வரிகளும் இணைந்து CGST (Central Goods and Service Tax) ஒன்றிய அரசின் சரக்கு சேவை வரியாக மக்கள் மீது திணிக்கப்படுகிறது.

மாநில வாட் வரி, விற்பனை வரி, மத்திய விற்பனை வரி, கொள்முதல் வரி, உள்ளாட்சி அமைப்புகள் விதிக்கும் கேளிக்கை வரிகள் தவிர்த்த, மாநில அரசுகள் விதிக்கும் கேளிக்கை வரி, ஆடம்பர வரி, எல்லாவிதமான நுழைவு வரிகள், சூதாட்டம் பந்தயம் பரிசு சீட்டுகளின் மீதான வரி கட்டணங்கள் ஆகியவற்றுக்குப் பதிலாக SGST (State Goods and Service Tax) மாநில அரசின் சரக்கு சேவை வரியாக மக்கள் மீது சுமத்தப்படுகிறது. இதே முறையைப் பின்பற்றி தில்லி அரசின் ஆளுமையின் கீழ் இயங்கும் 7 பகுதிகளில் (Union Territory Goods and Service Tax) இவ்வரியை விதிக்கிறார்கள.

**மேற் குறிப்பிட்ட வரிக் கட்டமைப்புகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட சரக்கு சேவை வரி (Integrated Goods and Service Tax) 5, 12, 18, 28 விழுக்காடுகளில் மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வணிகம், சேவை, மீது ஒன்றிய அரசு விதிக்கிறது. ஆகவே ஒன்றிய அரசு மூன்று விதமான வரி அமைப்புகளையும் மாநில அரசுகள் ஒரு வரி முறையையும் பின்பற்றி வரிச்சுமையை மக்கள் மீது அடுக்குகின்றன. இது வரிச்சுமை மட்டுமல்ல; ஏழை நடுத்தர மக்களை வஞ்சிக்கும் செயலாகும்.**

மூன்று முறை இந்திய தேசிய காங்கிரசுக் கட்சியின் ஆரம்ப காலத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அறிஞர் தாதாபாய் நௌரோஜி, இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்திய போது, 'நீங்கள் இங்கிலாந்து மக்கள் மீது வரியைப் போடுகிறீர்கள். ஆனால் இந்திய மக்கள் மீது இரத்தம் வழிய வரி போடுகிறீர்கள் (You are taxing the people of England but you are bleeding the people of India)' என்றார். இதனால்தான், காந்தி நௌரோஜியைப் பொருளாதார தேசியம் கற்பித்த பிதாமகன் என்றார். ஆனால் இன்றோ, ஏழை எளியவர்களின் இரத்தம் உறிஞ்சும் வரி அமைப்பை நாடாளுமன்றத்தில் நள்ளிரவில் சீர்திருத்தம் என்று அறிவிக்கின்றார் மோடி. சீரழிவா? சீர்திருத்தமா? என்பதற்கான வெளிப்பாடுகள் இப்போதே நாடெங்கும் நடைபெறுகிற வேலை நிறுத்தங்கள், வணிகர்களின் எதிர்ப்புப் போராட்டங்களின் வழியே தென்படத் தொடங்கிவிட்டன.

**சான்றாக, தமிழ்நாட்டில் திருமண மண்டபத்தில் மணவிழா நடத்தினால் 18 விழுக்காடு வரி செலுத்த வேண்டும். மாநகராட்சிகள்தான் சாலை தெருவிளக்கு மற்றும் சுகாதாரப் பணிகளை மக்களுக்கு அளிக்கின்றன. தற்போது திருமண மண்டபங்களில் தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவுவதால் மணவிழா நடத்துவோர் பணம் கொடுத்துத் தண்ணீரைப் பெற வேண்டிய நிலையில் உள்ளனர். எந்த சேவையையும் வழங்காமல் தேவையற்ற முறையில் சரக்கு சேவை வரியாகத் திணிப்பது இதற்கு ஒரு தக்க சான்றாகும்.**

இந்திய விடுதலைக்குப் பிறகு 1950ஆம் ஆண்டின் அரசமைப்புச் சட்டப்படி 1953-54ஆம் ஆண்டில் வரி ஆய்வு ஆணையம், (Taxation Enquiry Commision) ஒன்றிய, மாநில, உள்ளாட்சி அரசுகள் தனித்தனியே விதிக்கும் வரிகளைப் பரிந்துரைத்தது. இதன் அடிப்படை

யில்தான் ஒன்றிய அரசும் மாநில அரசுகளும் உள்ளாட்சி அமைப்புகளும் பல வரிகளை விதித்து வந்தன. இவ்வரிகளையே சுமையான வரிகள் என்று மக்கள் குற்றம் சாட்டி வந்தார்கள். இருப்பினும் நாட்டு வருமானமும் தனிநபர் வருமானமும் பெருகியதால் இவ்வரிகள் சரியானவை எனப் பொருளாதார வல்லுநர்கள் வாதிட்டனர். நேர்முக வரிகள் வழியாக அதிக வருவாயைப் பெறுவதுதான் பொருளாதாரத்தில் வளர்கின்ற நாடுகளுக்குச் சரியான அடையாளம் என்று பல வரி இயல் அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். சான்றாக வட அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் அரசிற்கு நேர்முக வரிகள் வழியாக 60 முதல் 70 விழுக்காடு வரை வருவாய் கிடைக்கின்றது.

**இந்தியாவில் 9, 8, 7 விழுக்காடுகள் பொருளாதார வளர்ச்சி தொடர்கிறது என்று முழக்கமிடும் ஒன்றிய அரசு மறைமுக வரி வழியாகத்தான் அதிக வருவாயை ஈட்டுகிறது. இந்தப் புதிய சரக்கு சேவை வரி மறைமுக வரியினுடைய வருவாய் விழுக்காட்டை நேர்முக வரி வருவாயைக் காட்டிலும் பெருமளவில் அதிகமாக்கும் சூழல் தற்போது உருவாகியுள்ளது.**

பிரதமராக நேரு இருந்த காலத்தில் நேர்முக வரியைத் திருத்தியமைத்து அதன் வழியாக ஒன்றிய அரசின் வரி வருவாயைப் பெருக்க வேண்டும் என்று விரும்பினார். 1957ஆம் ஆண்டு நிக்கலோஸ் கால்டர் என்ற இங்கிலாந்து நாட்டு வரி இயல் அறிஞரை அழைத்து நேர்முக வரிச் சீர்திருத்தக் குழுவை நேரு அமைத்தார். இரண்டு ஐந்தாண்டுத் திட்டக்காலங்களில் பெரும் பணக்காரர்கள் பெருகி வருவதை உணர்ந்த நேரு, இந்த வரி சீர்திருத்தத்தை மேற்கொண்டார். 1957க்குப் பிறகுதான் தனிநபர் வருமான வரியிலிருந்து குழுமங்களின் வருமான வரி (Corporate Tax) பிரிக்கப்பட்டது. இந்த இரண்டு பெரிய வரிகளுக்குத் துணை வரிகளாக-கொடைவரி (Gift Tax), செல்வவரி (Wealth Tax), இறப்பு வரி (DeathTax), மூலதன இலாபத்தின் மீதான வரி (Capital Gain Tax), செலவு வரி (Expenditure Tax) எனப் பணம் படைத்தோர்கள் வரி ஏமாற்றாமல் இருப்பதற்காக நேரு காலத்து ஒன்றிய அரசால் விதிக்கப்பட்டன. ஆனால் நேரு மறைவிற்குப் பிறகு ஒவ்வொன்றாக இந்தத் துணை வரிகளை நீக்கிப் பணக்காரர்கள் தங்கள் செல்வாக்கை உயர்த்திவிட்டனர்.

மேலும் 2013இல் ஒன்றிய அரசிற்குத் தேசியப் பொது நிதியியல் ஆய்வு மையத்தால் அளிக்கப்பட்ட அறிக்கையில் ஆண்டு ஒன்றிற்கு உள்நாட்டில் மட்டும் நேர்முக வரிகளைக் கட்டாமல் ஏமாற்றி ரூபாய் 23 இலட்சம் கோடிகளைக் கறுப்புப் பணமாகப் பதுக்குகிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கும் வரி நிர்வாகத்தைச் செம்மைப்படுத்துவதற்கும் பல வல்லுநர் குழுக்கள் பல பரிந்துரைகளை வழங்கியுள்ளன. இந்த முதன்மையான பரிந்துரைகளை எல்லாம் புறந்தள்ளி விட்டு ஏழை எளிய நடுத்தர மக்களை-சிறு வணிகர்களைப் பாதிக்கின்ற சரக்கு சேவைவரியை ஒன்றிய அரசு நடைமுறைப்படுத்தியது வரிக்கொடுங்கோன்மையின் உச்சநிலையாகும்.

அண்மையில் வெளிவந்த இந்திய புள்ளிவிவரங்களின்படி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் 1969 லிருந்து 1991 வரை ரூபாய் 2 இலட்சம் கடன் பெற்றவர்கள் எண்ணிக்கை 99.3 விழுக்காடாகும். இவர்களில் பெரும்பாலானோர் சிறு வணிகர்கள் சிறு விவசாயிகள் மாணவர்கள் என்று புள்ளிவிவரம் சுட்டுகிறது. 1991ஆம் ஆண்டிற்குப் பிறகு வணிக வங்கிகளில் பணக்காரர்கள் புகுந்து தங்களின் ஆதிக்கத்தை நிலை நிறுத்தி வங்கிகள் தேசியமயமாக்கப்பட்ட போது சொல்லப்பட்ட வாக்குறுதிகளை அறவே அழித்தனர். 2015 புள்ளிவிவரப்படி ரூபாய் 100 கோடி முதல் 1000 கோடி வரை கடன் பெற்ற பெரு முதலாளிகள் எண்ணிக்கை 86 விழுக்காடாகும். ரூபாய் 2 இலட்சத்திற்குக் குறைவாகக் கடன் பெற்றவர்கள் எண்ணிக்கை 6.9 விழுக்காட்டினர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுத் துறை வங்கிகளைப் பயன்படுத்தித்தான் தங்களின் மூலதனப் பெருக்கத்தை உருவாக்கி, மக்களின் பணத்தைப் பெரும் முதலாளிகள் சூறையாடியுள்ளனர் என்பது தற்போது வெட்டவெளிச்சத்திற்கு வந்துள்ளது. மேலும் இந்த முதலாளிகள் செலுத்த வேண்டிய கடன் தொகை 2016 வரை ரூ.8 இலட்சம் கோடிகளாகும்.

இதைத் தவிர 1991 முதல் 2015 வரை நேர்முக, மறைமுக வரிச்சலுகைகளைப் பெரு முதலாளிகள் பெருமளவில் பெற்றுள்ளனர். அத்தொகையை ஒட்டு மொத்தமாகக் கூட்டினால் ஏறக்குறைய 200 இலட்சம் கோடியைத் தாண்டுகிறது. 2017ஆம் ஆண்டு புள்ளி விவரத்தின்படி இந்தியாவில் பல்முனை வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்வோரின் எண்ணிக்கை மக்கள் தொகையில் 50 விழுக்காடாகும். அமைப்பு சாராத் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஒட்டுமொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் ஒப்பிடும் போது 93 விழுக்காடாக உயர்ந்துள்ளது. இது போன்று ஏழை எளிய சாதாரண மக்கள் நுகரும் பொருட்கள் தேநீர் திண்பண்டங்கள், குழந்தைகள், பெண்கள் பயன்படுத்தும் பொருட்கள் ஆகியவற்றின் மீது சரக்கு சேவை வரியைச் சுமத்துவது பொருளாதார அறிஞர்களால் சுட்டப்படுகிற வரிச்சமத்துவக் கொள்கையை (Principle of Equity) ஒன்றிய அரசு திட்டமிட்டுக் குலைக்கிறது. மேலும் கடந்த ஓராண்டாக வேளாண்மை, தொழில், சேவை ஆகிய மூன்று துறைகளிலும் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியுள்ளது. இச்சூழலில் இந்தச் சரக்கு, சேவை வரி பெரும் சீரழிவை மக்களுக்கும் பொருளாதாரத்திற்கும் ஏற்படுத்தும். மேலும் இருக்கின்ற குறைந்த வரி அதிகாரங்களைக் கூட மாநிலங்கள் இழந்து வருகின்றன. இந்தியா ஒரே வரி, ஒரே நாடு என்கிற முழக்கத்தின் வழியாக ஒரு கொடுங்கோன்மை பாசிச அரசாக ஒன்றிய அரசு மாறி வருகிறதா?

# மா.பெ.பொ.க. தோழர்களுக்கும் தமிழ் பெருமக்களுக்கும் வேண்டுகோள்

கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக நாம் மா.பெ.பொ.க. அமைப்பையும், "**சிந்தனையாளன்**" இதழையும் மிகவும் வெற்றியாக நடத்தி வருகிறோம். அத்துடன் அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையையும், பெரியார் இராமசாமி - நாகம்மை அறக்கட்டளையையும் இயக்கி வருகிறோம்.

இந்த நான்கு அமைப்புகள் தொடர்பான களப்பணிக்கு நான் தங்கள் உதவியை நாடிவந்த போதெல்லாம் முழுமனதோடு ஆதரவு அளித்தீர்கள்.

இப்போது 2.7.2017 பொதுக்குழு முடிவுப்படி, நாம் 1) சிந்தனையாளன் சந்தா சேர்ப்புக்கு என்று தோழர் சி. பெரியசாமியையும்; 2) சிந்தனையாளன் வெளியீட்டுப் பொறுப்புக்கு என்று தோழர் க. முகிலனையும்; 3) அறக்கட்டளை நிதி திரட்டுவதற்கு என்று தோழர் துரை கலையரசுவையும் தேர்ந்தெடுத்துள்ளோம்.

இதுவரையில் நான் நேரில் வந்தபோது எப்படி ஒத்துழைப்பு அளித்தீர்களோ, அதைப்போல் இனியும் தொடர்ந்து மேலே கண்ட தோழர்கள் மேற்கொள்ளும் முயற்சிக்கு முழுஆதரவு நல்க வேண்டுகிறேன்.

அறிவுதான் வலிமையானது; அறிவை வளர்க்கும் "**சிந்தனையாளன்**" ஏடுதான் நமக்குள்ள ஒரே கருத்துப்பரப்பு ஊடகம். எனவே, ஊடகத்தை வலிமைப்படுத்துவது கட்சி வளர்ச்சிக்கு உதவும் என்பதை உணர்ந்து மா.பொ.பொ.க. தோழர்கள் அனைவரும் தமிழ்ப் பெருமக்களும் அன்புடன் செயல்பட வேண்டுகிறேன். மிகவும் நன்றி.

**வே. ஆனைமுத்து**

# மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி

## பொதுக்குழுக்கூட்ட முடிவுகள்

**02-07-2017 ஞாயிறு**

**காலை 10.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை நடைபெற்றது.**

**முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்கள் :**

1. **"சிந்தனையாளன்" உறுப்பினர்சேர்க்கை : சூலை – செப்டம்பர் 2017**

    பொறுப்பாளர் : சி. பெரியசாமி
    துணைப் பொறுப்பாளர்கள் : 1. சா.குப்பன், 2. துரை சித்தார்த்தன்

2. **"சிந்தனையாளன்" இதழ் வெளியீடு**

    பொறுப்பாளர் : க. முகிலன்
    துணைப் பொறுப்பாளர்கள் : 1. வாலாசா வல்லவன், 2. ப. வடிவேலு

3. **அறக்கட்டளையில் 2017 ஆகத்தில் வகுப்பு தொடங்க ஏற்பாடு செய்தல்.**
4. **அறக்கட்டளைக்கு நிதி திரட்டல் : சூலை 2017 முதல்**

    பொறுப்பாளர் : துரை. கலையரசு
    துணைப் பொறுப்பாளர்கள் : 1. கவிஞர் காவிரிநாடன், 2. கலசம்

5. **மாதந்தோறும் மாவட்டச் செயலாளர்கள் சந்தித்துப் பேசுதல்.**
6. பெரியார் வரலாறு - முதுல் தொகுதி வெளியிடல் பற்றி 2017 செப்டம்பரில் அறிவிப்பது தொடர்பாக கலந்து பேசுதல்.
7. கட்சிக்கு உறுப்பினர் சேர்த்தல்,

# உற்றுழி உதவிய என் இளவல் த.கி. இராமலிங்கம் மறைந்தார்



27.6.2017 அன்று மா.பெ.பொ.க. அரியலூர் மாவட்டச் செயலாளர் இரா. கலியமூர்த்தி, "நம் குமிழியம் இராமலிங்கம் படுக்கையாகிவிட்டார். உடனே நீங்கள் வந்து பார்க்க வேண்டும்" என்று சொன்னார். இச்செய்தியை நான் சொன்னவுடன், என் மனைவி, மக்கள் எல்லோரும் கவலைப்பட்டார்கள்.

குமிழியம் ஆசிரியர் தோழர் த.கி. இராமலிங்கம் என் குடும்பத்தில் ஓர் உறுப்பினர் போன்றவர்; எனக்கு உற்றுழியெல்லாம் உதவியவர்.

நான் 30.6.2017 காலை 8.30 மணிக்குப் புறப்பட்டு, பகல் 12.20 மணிக்க த.கி. இராமலிங்கம் இல்லம் அடைந்தேன். கட்டிலில் அவர் அருகில் உட்கார்ந்து, உச்சிமோந்து, பல தடவைகள் அவருக்கு முத்தம் கொடுத்தேன். எனக்கு வருத்தம் மேலிட்டது; கண்கலங்கினேன். ஒரு மணிநேரம் அவர் அருகிலேயே உட்கார்ந்து சற்று ஆறுதல் பெற்ற பின்னர், பகல் உணவுக்காக வடக்குப் பரணம் புறப்பட்டேன்.

**1961 முதல் த.கி. இராமலிங்கம் என்னோடு பழகினார்.**

**நான் 1963இல் திருச்சியில் தனிப் பயிற்சிக் கல்லூரியைத் தொடங்கிட, அவரே முதலீடு முழுவதும் தந்தார்.**

அச்சமயம் முதல் குமிழியம் த.கி. இராமலிங்கம், தி.மு.க. தோழர் நெடுஞ்செழியன், குமிழியம் து. இராசமாணிக்கம்; இரும்புலிக்குறிச்சி அஞ்சல்காரர் இராமச்சந்திரன், ந. உத்திராபதி, ஆசிரியர் பயிற்சி பெற்ற தோழர்கள் இரா. சின்னசாமி, சி.பி. சர்வாதிகாரி, இ.சு. இராசமாணிக்கம், மாணிக்கம், சிறுகடம்பூர் இரா. கலியமூர்த்தி, பெரியசாமி, ஆரியப்பன், மணியக்காரர் பெருமாள் - டாக்டர் பொற்கோ, பரணம் தங்க. மணியன் ஆகியோரும்; 1967 முதல் வடக்குப் பரணம் வே. பரமசிவம் ஆகியோரும் என் பொது வாழ்விலிருந்து பிரிக்க முடியாதவர்கள் ஆனார்கள்.

"தம்பி உடையான் படைக்கு அஞ்சான்" என்கிற பழமொழிக்கு ஒப்ப, திருச்சியில் 1970 முதல் 1976 வரை என்னைச் சூழ்ந்த பல கேடுகளின் போது, இவர்களுள் எவராவது ஒருவர் என்னுடனிருந்து உதவினர்; திருச்சியில் நான் நடத்திய எல்லா நிகழ்ச்சிகளுக்கும் துணை நின்றனர். இவர்களுள் பலர் இன்று இல்லை.

30.5.2017 மாலை சிறுகடம்பூரில் நடைபெற்ற அம்பேத்கர்-பாவேந்தர் பிறந்த நாள் விழாக் கூட்டத்தில் தி.க. இராமலிங்கம் என் பேச்சு முழுவதையும் கேட்டுவிட்டு, எனக்கு 93ஆம் பிறந்த நாள் நன்கொடை தந்தார். 30.6.2017 வரை நேரில் பார்த்த நான், 10.7.2017 அன்று காலை அவர் மறைந்தார் என்ற செய்தி தெரிந்தவுடன், மிகவும் வருந்தினேன். என் வீட்டார் என்னை இறுதி நிகழ்ச்சிக்குப் போகச் சொன்னார்கள்; நான் என் உடல்நலிவு கருதிப் போகவில்லை.

படத்திறப்பு நிகழ்ச்சிக்கு வரச் சொல்லி அவருடைய துணைவியார் வெள்ளையம்மாள் அழைத்தார்; என் உடல்நிலை இடம் தரவில்லை; எனவே நான் போகவில்லை.

என் இளவல் த.கி. இராமலிங்கத்தை இழந்து வருந்தும் அவர்தம் துணைவியார் வெள்ளையம்மாள், மகள் அறிவுக்கொடி, மருமகன்; மகன்கள் சிந்தனைச் சிற்பி, சித்தார்த்தன், மருமகள்; மருமகன் பரணம் ப.வே. பரமசிவம் அவருடைய குடும்பத்தார், ஊரார், உற்றார், மா.பெ.பொ.க. தோழர்கள் அனைவர்க்கும் என் சார்பிலும், என் குடும்பத்தார் சார்பிலும், மா.பெ.பொ.க. சார்பிலும் ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் உரித்தாக்குகிறேன்.

**வளர்க த.கி. இராமலிங்கம் புகழ்!**

**- ஆனைமுத்து**

**இறுதி ஊர்வலம்**

குமிழியம் த.கி. இராமலிங்கம் இறுதி ஊர்வலத்தில் சுற்றுவட்டார மக்களும், மா.பெ.பொ.க. தோழர்கள் திருச்சி. இரா. கலியபெருமாள், ந. கருணாகரன், த.பொட்டக்கொல்லை தோழர்கள் துரைக்கண்ணு, கோவிந்தசாமி, இராமசாமி, இராமலிங்கம், துரை சித்தார்த்தன், சி. பெரியசாமி, ப.வே. பரமசிவம், சேடக்குடிக்காடு சீனிவாசன், மாவட்டச் செயலர் இரா. கலியமூர்த்தி மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

# மார்க்சையும் பெரியாரையும் புரிந்து கொள்வோம் வாருங்கள்!

உலக மதங்களுள் ஜொராஸ்டியனிசம் மிகப் பழைய மதம்.

இந்திய மதங்களுள் இந்து மதம் என்கிற வேத மதம் அல்லது பிராமண மதம் மூத்தது.எல்லா மதங்களும் தலைவிதி, முன்பிறப்பு, மறு பிறப்பு, மோட்சம், நரகம் இவற்றை நம்புகின்றன.

திட்டமிட்டுக் கொலை செய்தாலும், திருடினாலும், ஆணோ பெண்ணோ சோரம் போனாலும் அது பாவம் என்று எல்லா மதங்களும் கற்பித்தன. அத்துடன் அப்படிப்பட்ட பாவத்தைச் செய்தால் அதற்கு மன்னிப்பு உண்டு, பிராயச்சித்தம் உண்டு என்றும் கற்பித்தன, மதங்கள்.

**எனவே பாவம் செய்தவர்கள் தப்பித்துக் கொள்ளத் தான் பிரார்த்தனை அல்லது வழிபாடு செய்கிறார்கள். இதில் எல்லா மதமும் ஒரே தன்மையானதுதான். எனவேதான் பாவம் செய்கிறவனுக்குப் புகலிடமாகக் கோவில்கள், மசூதிகள், மாதாகோவில்கள், புத்த விகார்கள் இருக்கின்றன.**

இந்தப் பாவ மன்னிப்பு இடங்களுக்கு அரசு பாதுகாப்புக் கொடுக்கிறது. மக்கள் பிரார்த்தனை வரி அல்லது தட்சணை கொடுக்கிறார்கள்.

இவற்றை நிருவகிக்கப் பூசாரிகள் (அ) அர்ச்சகர் கள், பாதிரிகள், முல்லாக்கள், மவுல்விகள், பிட்சுகள் இருக்கிறார் கள். இந்துக் கோவில்களில் பூசாரி அல்லது அர்ச்சகராகப் பார்ப்பனர் மட்டுமே இருக்கின்றனர்.

மற்ற மதங்களில் உள்ள பூசாரிகள், அதற்கு என்று இருக்கிற படிப்பைப் படித்தவர்கள் என்கிற 'தகுதி'யால் பூசாரிகளாக வருகிறார்கள்; அமர்த்தப்படுகிறார்கள்.

ஆனால் இந்துக் கோவில்களில் உள்ள அர்ச்சகர் மட்டும் பிராமண-பார்ப்பன சாதியில் பிறந்தவர்களாகவே இருக் கிறார்கள். இவர்கள் பிறவியாலேயே உயர்ந்தவர்கள். 'பிறவி உயர்வு' என்பதை மட்டுமே 'தகுதி'யாகக் கொண்டவர்கள். இது 2017லும் இப்படி இருக்கிறது.

பிராமணர், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்கிற பிறவிசாதிப் பெயர்கள் "இந்துச் சட்டத்தில்" தெளிவாக உள்ளன.

இந்து மதத்தில் பிறந்தவர்கள் இதை அறிந்தும், அறியா மலும் இருக்கிறார்கள். அத்துடன் மட்டுமா?

பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்கிற சொற்கள் எழுதப்படாமலேயே, இந்திய அரச மைப்புச் சட்ட விதிகள் 13 (2) (அ), (ஆ) - Article 13 (2) (a), (b) என்கிற பிரிவுகளில் - பிறவி நால்வருண சாதிக்குக் கெட்டியான பாதுகாப்பு இருக்கிறது. எந்த வடிவத்தில் இருக்கிறது?

வழக்கம் (Custom), பழக்கம் (Usage) என்கிற பெயர் களில் இந்த 13ஆம் விதியில் உள்ளது.

**விதி 13 என்பது அடிப்படை உரிமைகள் என்கிற பகுதியில் உள்ளது என்பது முதன்மையானது.**

அத்துடன், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் XX-ஆம் பகுதி "அரசமைப்புச் சட்டத் திருத்தம்" (Amendment of the Constitution) என்பதாகும்.

**அதன்கீழ் உள்ள விதி 372(3) விளக்கம் I-என்பதில் (Article 372 (3) Explanation I) என் பதன்கீழ் - நால்வருண பிறவி சாதி வழக்கச் சட்டம், பழக்கச் சட்டம் இவை தகுதி வாய்ந்த சட்ட அவையால் நீக்கப்படுகிற வரையில் செல்லுபடி யாகும் என்று தெளிவாக உள்ளது.**

இங்கே மார்க்சியத்துக்கு என்ன வேலை-கார்ல் மார்க்சுக்கு என்ன வேலை என்கிற வினா-இயல்பாகவே எழவேண்டும்.

கார்ல்மார்க்சு முதன்முதலாக, இந்தியாவைப் பற்றி 10.5.1853இல் முதலாவது கட்டுரையை எழுதினார்.

1853இல் இந்துச் சட்டம் தொகுக்கப்படவில்லை.

வெள்ளையர் ஆணைப்படி, வடநாட்டுப் பார்ப்பனப் பண்டிதர்கள், 1860இல் தான் இந்துச் சட்டத்தைத் தொகுத்தனர்.

மார்க்சுக்கு, 1853இல் இலண்டன் நூலகத்தில் கிடைத்தது மநுஸ்மிருதியின் ஆங்கில மொழிபெயர்ப்புத்தான். அவர், மனுஸ்மிருதியை நன்றாக ஆய்வு செய்து, 10.5.1853இல் இந்தியாவைப் பற்றி முதலாவது கட்டுரையை எழுதினர்.

அக்கட்டுரையில், "இந்தியாவிலுள்ள இழிசாதி மக்கள் - தாங்கள் எந்தப் பயனும் எதிர்பாராமல் மேல்சாதிக்காரர் களுக்கு ஊழியம் செய்வதுதான், தாங்கள் மோட்சத்துக்குப் போக (Beatitude) வழி என்று இன்றும் நம்புகிறார்கள்" என எழுதினார்.

இது, மனுஸ்மிருதியின் பத்தாவது அத்தியாயத்தில் உள்ளது என்றும் அக்கட்டுரையின் அடிக்குறிப்பில், மேற்கோளாக எழுதினார்.

மார்க்சின் சமகாலத்தில் இந்தியாவில் வாழ்ந்த வடலூர் வள்ளலார் 1865இல் இதைச் சொன்னார்; பூனேவில் வாழ்ந்த மகாத்மா புலே 1870இல் இதைச் சொன்னார்; அத்திப்பாக்கம் வேங்கடாசல நாயகர் 1882இல் இதைச் சொன்னார்.

"தீண்டாமையை ஒழித்திட தமிழகக் காங்கிரசு பாடுபட வேண்டும்" என்கிற தீர்மானத்தை, திருப்பூரில் வாசுதேவ அய்யர் தலைமையில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரசு மாநாட்டில் 1922 திசம்பர் 15இல் முன்மொழிந்தார், ஈ.வெ. ராமசாமி.

மாநாட்டுத் தலைவர் அதை எதிர்த்தார்; ச. இராசகோபா லாச்சாரியார் எதிர்த்தார்; எஸ்.சீனிவாச அய்யங்கார் எதிர்த் தார். அதுகண்டு வெகுண்டெழுந்த ஈ.வெ. இராமசாமி, அன்றிரவு திருப்பூரில் நடந்த காங்கிரசுப் பொதுக் கூட்டத்தில்,

"மநுஸ்மிருதியும், இராமாயணமும் தான் நால் வருண பிறவி சாதியையும் தீண்டாமையையும் காப்பாற்றுகின்றன. இவற்றை எரிக்க வேண்டும்" என்று அடித்துப் பேசினார்.

இந்திய சமுதாயத்தைப் பற்றி, காரல்மார்க்சு 1853 இல் எழுதியதைத்தான் - 1922இல் ஈ.வெ.ராவும் கூறினார்,

மார்க்சும் பெரியாரும் சிந்தனை உள்ளவர்கள் என்பதை உணருவோம், வாருங்கள்!

**- வே. ஆனைமுத்து**

# திருச்சி வே. ஆனைமுத்துவின் கருத்துக் கருவூலம்

**உடனே வாங்கிடுங்கள்!**

| திருச்சி வே. ஆனைமுத்து கருத்துக் கருவூலம் | | ரூபா. |
|---|---|---|
| 1. | அறிவுநெறி அடிக்கற்கள் | 275.00 |
| 2. | தமிழ்நாட்டில் பண்பாட்டுப் புரட்சி | 250.00 |
| 3. | இந்திய அரசமைப்புச் சட்டம் : ஒரு மோசடி | 225.00 |
| 4. | விகிதாசார வகுப்புவாரி இடப்பங்கீடு | 275.00 |
| 5. | நாத்திகர் போர்வாள் | 170.00 |
| 6. | மார்க்சியம் பெரியாரியம் | 200.00 |
| 7. | இயக்கம் | 375.00 |
| 8. | அரசியல் - தமிழ்நாடு | 300.00 |
| 9. | அரசியல் - இந்தியா, உலகம் | 375.00 |
| 10. | தேசிய இன விடுதலை | 250.00 |
| 11. | ஒடுக்கப்பட்டோர் விடுதலை | 300.00 |
| 12. | தமிழீழ விடுதலை | 450.00 |
| 13. | காலப் பதிவுகள் | 300.00 |
| 14. | பெரியாரியல் (பகுதி-1) | 120.00 |
| 15. | பெரியாரியல் (பகுதி-2) | 180.00 |
| 16. | பெரியார் ஈ.வெ.ரா. பயணக்காலக் கண்ணாடி (PERIYAR E.V.R. - A DETAILED CHRONOLOGY) | 450.00 |
| **திருச்சி வே. ஆனைமுத்து பதிப்பித்த நூல்கள்** | | |
| 17. | மதவிசாரணை | 200.00 |
| 18. | தத்துவ விவேசினி : தொகுதி - 1 (1882-1888) | 525.00 |
| 19. | தத்துவ விவேசினி : தொகுதி - 2 (1882-1888) | 525.00 |
| 20. | THE THINKER (1882-1885) | 475.00 |
| 21. | நானும் தமிழும் : சங்கமித்ரா | 40.00 |

**விற்பனை விலை ரூ.4,500** **மொத்த விலை ரூ.6,260**

**குறிப்பு :** காசோலை அனுப்பிட உரிய பெயர் :
பெரியார் நூல் வெளியீட்டகம் - PERIYAR NOOL VELIYEETTAHAM
* நூல்களைத் தனித்தனியாக விற்க இயலாது.
* பதிப்பகத்தின் செலவில் நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

அஞ்சல் முகவரி

**ஆனை. பன்னீர்செல்வம்,** மேலாண்மைப் பங்குதாரர்
**பெரியார் நூல் வெளியீட்டகம்**
எண்.8/2, இராசரத்தினம் தெரு, இரண்டாம் மாடி, மேற்குத் தாம்பரம், சென்னை.
கைப்பேசி : 98413 35522, 94448 04980

# மாநிலங்களின் உரிமையை, சிறு வணிகர்கள், சிறு உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தைப் பறிக்கும்

## சரக்கு மற்றும் சேவை வரி

- க. முகிலன்

நரேந்திர மோடி தலைமை அமைச்சரானது முதல், அவ்வப்போது அதிரடியான அறிவிப்புகளை ஆரவாரத்துடனும் அதேசமயம் அதிகார ஆணவத்துடனும் வெளியிட்டு வருகிறார். இதன் உச்சக்கட்டம் போல், 2017 சூலை 1 முதல் சரக்கு மற்றும் சேவை வரி (Goods and Service Tax - GST - ஜி.எஸ்.டி.) நடைமுறைப்படுத்தப்படும் என்பதை அறிவிப்பதற்காக சூன் 30 நள்ளிரவு நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தை நாடாளுமன்றத்தின் நடு மண்டபத்தில் நடத்தினார். ஒரு வரி விதிப்பு மாற்றத்தை வேறு எந்தவொரு சனநாயக நாட்டிலும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க விழாவைப்போல் கொண்டாடியதில்லை.

இந்தியாவுக்கு ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றதற்கான அறிவிப்பு - இந்தியா சுதந்தர நாடாகிவிட்டது என்பதற்கான விழா 1947 ஆகத்து 14 நள்ளிரவு 12 மணிக்கு நாடாளுமன்றத்தின் நடு மண்டபத்தில் நடைபெற்றது. அதன்பின் இந்தியா சுதந்தரம் பெற்றதன் வெள்ளிவிழா இதே இடத்தில் நடைபெற்றது. அதன்பின் சரக்கு மற்றும் சேவை வரி (இனி ஜி.எஸ்.டி.) செயல்பாட்டுக்கு வருவதை முறைப்படி நாட்டு மக்களுக்கு அறிவிப்பதற்கான விழா மோடி அரசால் 2017 சூன் 30 நள்ளிரவு நாடாளுமன்றத்தின் நடு மண்டபத்தில் நடத்தப்பட்டது. இந்தக் கேலிக்கூத்தை சமூகவியல் அறிஞர்களோ, ஊடகங்களோ கண்டிக்கவில்லை என்பது இந்திய சனநாயகத்தின் அவல நிலையைக் காட்டுகிறது.

வல்லபாய் பட்டேல் இந்தியாவின் உள்துறை அமைச்சராக இருந்தபோது 1947-48களில் இந்தியாவில் இருந்த 560க்கும் மேற்பட்ட மன்னராட்சிப் பகுதிகளை இந்திய ஒன்றியத்துடன் இணைத்து, இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு வழிவகுத்தார். அதுபோல், நரேந்திர மோடி ஜி.எஸ்.டி.யை நடைமுறைப்படுத்தியதன் மூலம், இந்தியப் பொருளாதார ஒருமைப்பாட்டை உருவாக்கியிருக்கிறார் என்று பாரதிய சனதா கட்சியினர் பெருமிதத்துடன் கூறுகின்றனர்,

ஜி.எஸ்.டி. குறித்து மக்களவையில் 2016 ஆகத்து 8 அன்று நரேந்திர மோடி உரையாற்றிய போது, ''காந்தியார் 1942 ஆகத்து அன்று 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தைத் தொடங்கினார். அதுபோல் ஜி.எஸ்.டி. இந்தியர்களை 'வரி பயங்கரவாதத்திலிருந்து' விடுவிக்கும்'' என்று கூறினார். ஜி.எஸ்.டி.க்கான எதிர்ப்பை முறியடிப்பதற்காக, நாட்டின் பொருளாதார



2017 சூன் 30 நள்ளிரவில் நாடாளுமன்ற மைய மண்டபத்தில் நரேந்திரமோடி ஜி.எஸ்.டியைத் தொடங்கி வைத்தார்.

ஒருமைப்பாட்டுக்கும், வளர்ச்சிக்கும் பலமுனை வரிச் சுமைகளிலிருந்து மக்களை விடுவிப்பதற்கும் ஜி.எஸ்.டி. இன்றியமையாத தேவையாக இருக்கிறது என்று ஆட்சியாளர்களும் பா.ச.க.வினரும் கூறிவருகின்றனர். ஜி.எஸ்.டி.யால் நாட்டின் உள்நாட்டு உற்பத்தி (GDP) 2 விழுக்காடு அதிகமாகும் என்று நிதி அமைச்சர் அருண் ஜெட்லி சொல்கிறார்.

ஆனால் ஜி.எஸ்.டி., மாநிலங்களின் வரி விதிப்பு உரிமையைப் பறிக்கிறது; தேசிய இனங்களின் பாரம்பரிய சந்தையை அழிக்கிறது; சிறு-நடுத்தர வணிகர்களையும் சிறு-நடுத்தர உற்பத்தியாளர்களையும் நசுக்குகிறது; அதேசமயம் பெருமுதலாளியக் குழுமங்களின் பொருளியல் ஆதிக்கத்தை ஊக்குவிக்கிறது; பொருளியல் ஒருமைப்பாட்டின் மூலமாக இந்துத்துவ ஒருமைப்பாட்டை வளர்க்கிறது. ஜி.எஸ்.டி.யின் இக்கூறுகள் குறித்து இக்கட்டுரையில் சுருக்கமாகப் பார்ப்போம்.

வரி இனங்களில் நேர்முகவரி (Direct Tax), மறைமுக வரி (Indirect Tax) ஆகிய இரு வகைகள் உள்ளன. இவற்றுள் மறைமுக வரி என்பது சந்தைக்கு வரும் சரக்குகள், பணம் பெற்றுக் கொண்டு செய்யப்படும் சேவைகள் ஆகியவற்றின் மீதான வரி விதிப்புகள் ஆகும். நேர்முகவரி என்பது தொழில் முனைவோர், வணிக நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் வருமானத்தின் மீதும், சொத்துக்கள் மீதும் விதிக்கப்படும் வரி இனங்கள் ஆகும்.

இவற்றுள் மறைமுக வரி என்பது பெரும்பாலும் சரக்கு மற்றும் சேவைகளின் விலைகளில் ஏற்றப்பட்டு, இறுதியில் நுகர்வோர் சுமக்க வேண்டிய வரி இனம் ஆகும். மறைமுக வரி ஏழைகள், பணக்காரர்கள் என்ற வேறுபாடு இல்லாமல் ஒரே அளவில் வசூலிக்கப் படுகிறது. அதனால் பெரும்பான்மையினராக உள்ள ஏழை-நடுத்தர மக்களே பெருமளவில் பாதிக்கப்படு கின்றனர். நேர்முக வரி என்பது நிரந்தர வருமானம் உள்ள நடுத்தர - உயர் நடுத்தர மற்றும் உயர் வரு மானம் உள்ளவர்களிடமிருந்து வசூலிக்கப்படுவதாகும்.

இந்திய நிதித்துறையின் 2015ஆம் ஆண்டின் புள்ளிவிவரப்படி, நடுவண் அரசு மற்றும் மாநில அரசு களின் வரி வருவாயில் மறைமுகவரியின் பங்கு 67 விழுக்காடாகும். நேர்முக வரியின் மூலம் அரசு களுக்கு வரும் வருமானம் 33 விழுக்காடுதான். எனவே ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்களிட மிருந்துதான் அரசுகள் அதிக வரி வருவாயை ஈட்டுகின்றன.

அதேசமயம் அரசுகள் பெரும் பணக்காரர்கள் மீதான நேரடி வரிவதிப்பை அதிகப்படுத்தாமல் இருக் கின்றன. 2000ஆம் ஆண்டில் இந்திய மக்கள் தொகை யில் மேல் நாட்டில் உள்ள ஒரு விழுக்காடு குடும்பங் களுக்கு நாட்டின் மொத்த சொத்தில் 36.8 விழுக்காடு சொந்தமாக இருந்தது. 2013இல் இது 49 விழுக்காடாக இருந்தது. நரேந்திர மோடி தலைமை அமைச்சரான பின் இரண்டு ஆண்டுகளில் இது 58.4 விழுக்காடாக உயர்ந்திருக்கிறது. எனவே நடுவண் அரசில் காங்கிரசுக் கட்சி ஆட்சி செய்தாலும், பா.ச.க. ஆட்சி செய்தாலும் பணக்காரர்களின், பெருமுதலாளியக் குழுமங்களின் நலன்களைப் பேணுவதையே கொள்கையாகக் கொண்டு செயல்படுகின்றன என்பதே உண்மையாகும். ஆனால் தேர்தல் சமயங்களில் மட்டும் இக்கட்சிகள் ஏழை, எளிய மக்களின் நலனுக்காகவே பாடுபடுவதாகப் பசப்புகின்றன.

ஜி.எஸ்.டி. கோட்பாடு 2000ஆம் ஆண்டில் வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் முதன்முதலாக முன்மொழியப்பட்டது. 2006ஆம் ஆண்டில் காங்கிரசு ஆட்சியில் ப.சிதம்பரம் நிதி அமைச்சராக இருந்த போது நிதிநிலை அறிக்கையில் ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு முறையைக் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தினார். 2010 ஏப்பிரல் மாதம் மன்மோகன் சிங் ஆட்சியில் ஜி.எஸ்.டி.யை சட்டமாக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்போது பா.ச.க. ஜி.எஸ்.டி.யைக் கடுமையாக எதிர்த்தது. அப்போது நாடாளுமன்ற நிலைக்குழுவின் தலைவராக இருந்த வரும், வாஜ்பாய் ஆட்சியில் நிதி அமைச்சராக இருந்த வருமான யசுவந்த் சின்கா, "முதலில் நடுவண் அரசு தன்னுடைய வரி இனங்களை இணைத்து, ஜி.எஸ்.டி. யை முதலில்




செயல்படுத்திக் காட்ட வேண்டும்; அதன் பின் மாநிலங்களைப் பின்பற்றுமாறு கேட்கலாம்" என்று கருத்துரைத்தார். குசராத் முதல்வராக இருந்த நரேந்திர மோடியும் ஜி.எஸ்.டி.யைக் கடுமையாக எதிர்த்தார். ஆனால் இப்போது ஜி.எஸ்.டி.யில் இருந்த குறைபாடுகளை நீக்கிவிட்டதால் ஜி.எஸ்.டி. புனிதம் அடைந்துவிட்டதாகக் கூறுகிறார்.

2016 ஆகத்து மாதம் அரசமைப்புச் சட்டத்தின் 122ஆவது திருத்தத்தின் மூலம் ஜி.எஸ்.டி. சட்டமாக நிறைவேற்றப்பட்டது. மதிப்புக் கூட்டு வரி, சேவை வரி போன்ற பலவகையான மறைமுகவரிகள் இரத்து செய்யப்பட்டு, நடுவண் சரக்கு - சேவை வரி (Central GST - CGST), மாநில சரக்கு - சேவை வரி (State GST - SGST), ஒருங்கிணைந்த சரக்கு - சேவை வரி (Integerated GST - IGST) என்கிற மூன்று பிரிவுகள் ஜி.எஸ்.டி.யில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சரக்குகள் மற்றும் சேவைகள் மீது வரிவிகிதத் தைத் தீர்மானிப்பதற்காக சரக்கு - சேவை வரி மன்றம் (ஜி.எஸ்.டி. கவுன்சில்) என்கிற ஒரு அமைப்பு உருவாக் கப்பட்டுள்ளது.

2016 சூன் 30 நள்ளிரவு விழாவில் நரேந்திர மோடி வெற்றிக் களிப்பில் "ஒரே நாடு, ஒரே சந்தை, ஒரே வரி" என்று முழாங்கினார். ஆனால் ஜி.எஸ்.டி.யில் 5 விழுக்காடு, 12 விழுக்காடு, 18 விழுக்காடு, 28 விழுக்காடு என்று நான்கு வகையான வரி விகிதங்கள் இடம்பெற்றுள்ளன. காங்கிரசுக் கட்சி திட்டமிட்டிருந்த ஜி.எஸ்.டி.யில் இரண்டு வகைான வரி விகிதங்கள் மட்டுமே இடம்பெற்றிருந்தன. முதலாவது கச்சாப் பொருள்கள் மற்றும் பிற வகையான அடிப்படைப் பொருள்கள் மீது விதிக்கப்படுவது; இரண்டாவது நுகர்வு நிலையில் உள்ள சரக்குகள் மற்றும் சேவைகள் மீதானதாகும்.

ஜி.எஸ்.டி.யின் நான்கு வகையான வரி விகிதங்களால் பல பொருள்களின் விலைகள் உயரக் கூடிய வாய்ப்பு இருப்பதாக மாநில அரசுகள் தங்கள் அச்சத்தை நடுவண் அரசிடம் தெரிவித்தன. அதற்கு

நடுவண் அரசு, ஏற்கெனவே நடப்பில் உள்ள மறைமுக வரிகளின் கூட்டுத்தொகை யின் அளவிற்கே ஜி.எஸ்.டி. இருக்கும் என்று கூறி ஏமாற்றியது. இது "வருவாய் நடுநிலை விகிதம்" (Revenue Neutral Rate - RNR) என்று கூறுப்படுகிறது.

மொத்தத்தில் ஜி.எஸ்.டி. என்பது உற்பத்தியாளர்கள் மீது விதிக்கப்படும் வரி அல்ல; மாறாக பலநிலை நுகர்வோர் மீது விதிக்கப்படும் வரியாகும். ஒரு சரக்கு எங்கே உற்பத்தியானாலும், எந்த மாநிலத்தில் உற்பத்தியானாலும் அது நுகரப்படும் அல்லது அது பயன்படுத்தப்படும் இடத்தில்தான் இந்த வரி விதிக்கப்படுகிறது.

**மாநில உரிமை பறிப்பு**

சரக்கு மற்றும் சேவை வரியைத் தீர்மானிக்கும் அதிகாரம் படைத்த 'சரக்கு மற்றும் சேவை வரி மன்றம்' நடுவண் அரசின் ஆதிக்கத்தின்கீழ் இருக்கும் வகையில் விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இம்மன்றத்தின் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் மாநில அரசுகளின் பிரதிநிதிகளாக இருப்பார்கள். மாநிலங்களின் வாக்கு மதிப்பு 66.6 விழுக்காடாகும். நடுவண் அரசின் வாக்கு மதிப்பு 33.3 விழுக்காடு ஆகும். ஆனால் சரக்கு - சேவை மன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேறுவதற்கு 75 விழுக்காடு வாக்குகள் தேவை. எனவே 33.3 விழுக்காடு வாக்கு மதிப்பு அதிகாரம் கொண்டுள்ள நடுவண் அரசின் ஒப்புதல் கிடைக்காமல் எந்தவொரு தீர்மானத்தையும் நிறைவேற்ற முடியாது.

மாநிலங்களுக்குப் பெரும்பான்மை வாக்குரிமை மதிப்பு இருப்பது போல் தோன்றினாலும், எந்தவொரு மாநிலமும் தன் உரிமையைத் தனியாகப் போராடி நிலைநாட்டிக்கொள்ள முடியாது. உண்மை நிலை இவ்வாறிருக்க நரேந்திர மோடியும் நிதி அமைச்சர் அருண்ஜெட்லியும் இம்மன்றத்தில் மாநிலங்களுக்குப் பெரும்பான்மை வாக்குரிமை இருப்பதைச் சுட்டிக்காட்டி, இதைக் "கூட்டுறவுக் கூட்டாட்சி" (Cooperative federalism) என்று பெருமையுடன் கூறுகின்றனர். கூட்டாட்சி முறையை மேலும் ஒரு உயர்ந்த நிலைக்குக் கொண்டு சென்றிருப்பதாக வெட்கமில்லாமல் பிதற்றுகின்றனர்.

உண்மை நிலை என்னவெனில், எந்தவொரு மாநில அரசும் ஏதாவது ஒரு சரக்கின் மீது அல்லது சேவையின் மீது வரி விகிதத்தைக் கூட்டவோ அல்லது குறைக்கவோ விரும்பினால் இதுவரையில் இருந்தது போல் மாநில அரசே முடிவெடுக்க முடியாது. இது குறித்து ஜி.எஸ்.டி. மன்றத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும். இம்மன்றத்தின் ஒப்புதல் கிடைத்தால்தான் அதைச் செயல்படுத்த முடியும். எனவே எல்லா மாநில அரசுகளும் எத்தகைய வரிவிதிப்பு அதிகாரமும் இல்லாத, நடுவண் அரசின் வெறும் வரி வசூலிப்பு முகமைகளாக மாற்றப்பட்டுள்ளன.

அதேசமயம் நடுவண் அரசு தான் விரும்புகின்ற எந்தவொரு மாற்றத்தையும் ஜி.எஸ்.டி.யில் எளிதாக செய்துகொள்ள முடியும். எவ்வாறெனில், நடுவண் அரசுக்கு உள்ள 33.3 வாக்கு மதிப்புடன், நடுவண் அரசில் ஆட்சி செய்யும் பா.ச.க.வோ அல்லது காங்கிரசோ தன் கட்சி ஆட்சியில் இருக்கும் மாநில அரசுகளின் வாக்குகளை எளிதில் பெற்றுக்கொள்ள முடியும். மாநிலங்களுக்கான நிதியைப் பங்கிட்டுத்தரும் முழு அதிகாரம் நடுவண் அரசிடம் இருப்பதால் மற்ற கட்சிகள் ஆளும் மாநில அரசுகளையும் மிரட்டி அவற்றின் வாக்குகளைப் பெற முடியும். ஆகவே சரக்கு-சேவை மன்றம் என்பது முற்றிலும் நடுவண் அரசின் கைப்பாவையாகவே செயல்படும்.

வரிகளை நிர்ணயிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்தின், மாநில சட்டமன்றங்களின் வரம்பிலிருந்து தற்போது ஜி.எஸ்.டி. மன்றத்துக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இந்த மன்றத்தின் முடிவுகளை நாடாளுமன்றத்திலோ சட்டப் பேரவையிலோ விவாதிக்கவும், இறுதி முடிவு எடுக்கவும் வழியில்லாத நிலையை உண்டாக்கியிருப்பது சனநாயக நெறிமுறையைக் குழிதோண்டிப் புதைப்பதாகும். நடுவண் அரசின் ஆதிக்கத்தின்கீழ் உள்ள ஜி.எஸ்.டி. மன்றத்தைப் பெருமுதலாளியக் குழுமங்கள் தங்களின் நலனுக்கு ஏற்ப ஆட்டிப்படைக்க வாய்ப்பு உள்ளது.

ஜி.எஸ்.டி. வரி விதிப்பால் மாநிலங்களின் வரி வருவாய் பெருமளவில் பாதிக்கப்படும் என்று மாநில அரசுகள் மன்றாடியதால் பெட்ரோலியம், மது வகைகள், மின்சாரம், புகையிலைப் பொருள்கள் மீதான வரி விதிப்பை ஜி.எஸ்.டி.யில் சேர்க்காமல், மாநிலங்களின் அதிகார வரம்பிலேயே விடப்பட்டுள்ளது.

மேலும் ஜி.எஸ்.டி. வரி விதிப்பால் மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை முதல் மூன்று ஆண்டுகளுக்கு முழு அளவிலும் நான்காவது ஆண்டில் 75 விழுக்காடும், அய்ந்தாவது ஆண்டில் 50 விழுக்காடும் ஈடுசெய்யப்படும் என்று நடுவண் அரசு அறிவித்திருக்கிறது. அய்ந்தாண்டுகளுக்குப் பிறகு இழப்பீடு எதுவும் கிடைக்காது. ஜி.எஸ்.டி.யால் மாநில அரசுகள் கடுமையான நிதி நெருக்கடிக்குத் தள்ளப்படும். தமிழ்நாட்டு அரசுக்கு ஜி.எஸ்.டி.யால் ஆண்டிற்கு உருவா 9,270 கோடி இழப்பு ஏற்படும் என்று கூறி மறைந்த முதலமைச்சர் செயலலிதா இதை எதிர்த்தார். ஆனால் இப்போது எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் உள்ள அ.தி.மு.க. அரசு சிறு முணுமுணுப்பும் இல்லாமல் சட்டப் பேரவையில் ஜி.எஸ்.டி.க்கு ஒப்புதல் அளித்தது.

உலகில் முதல்நிலை பொருளியல் வல்லரசாகவும், தாராளமய முதலாளியத்தை உலக நாடுகளில் நிலை

நாட்ட வேண்டும் என்பதைக் கொள்கையாகவும் கொண்டுள்ள வடஅமெரிக்காவில் ஜி.எஸ்.டி. இல்லை. வடஅமெரிக்கா முழுமைக்கும் ஒரே சந்தை என்கிற நிலை உள்ள போதிலும், அமெரிக்காவின் மாநிலங்கள் தங்களின் தேவைகளுக்கு ஏற்ப வரி விதிக்கும் அதி காரத்தைப் பெற்றுள்ளன. அதேபோல் அய்ரோப்பிய ஒன்றிய நாடுகள், அய்ரோப்பிய பொதுச் சந்தை (European Common Market) என்ற ஒற்றைச் சந்தைக் கட்டமைப்பைக் கொண்டிருக்கின்றன. யூரோ என்ற பொது நாணயமும் புழக்கத்தில் உள்ளது. ஆனாலும் அய்ரோப்பிய ஒன்றியம் முழுமைக்குமான ஜி.எஸ்.டி. இல்லை.

ஆனால் இந்தியாவில் ஒற்றைச் சந்தையின் பெய ரால் மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப்படுவதற்குப் பொருளியல் ஆதிக்கம் மட்டும் காரணமன்று. இந்தியா ஒரே அரசமைப்புச் சட்டத்தின்கீழ் இருந்தாலும் மொழி வழியில் அமைந்த தேசிய இனங்களின் அடிப்படை யில் பல்வேறு மாநிலங்களாக இருக்கின்ற ஒரு துணைக் கண்டமாகும். ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் தனித்த மொழி இருப்பதுடன் நீண்ட வரலாறும், தனித்தன்மை யான பண்பாட்டுக் கூறுகளும் வணிக முறைகளும் உணவு முறையும் உடையும் பழக்கவழக்கங்களும், இலக்கியங்களும், கலைகளும் உள்ளன. தேசிய இனங் களின் எழுச்சியை, தனித்தன்மைகளை அழிப்பதற் காகவே பார்ப்பன-பனியா-ஆரிய ஆளும் வர்க்கம் இந்துத்துவக் கோட்பாட்டை, இந்தி, சமற்கிருதத்தைத் திணித்து வருகிறது. இத்தன்மையில் தேசிய இனங் களின் உணர்வுகளை, அதிகாரத்தை ஒடுக்குவதற்கான ஒரு கருவியாக ஜி.எஸ்.டி.யைப் பயன்படுத்துகிறது.

**சிறு தொழில்களை, சிறு வணிகத்தை நசுக்கும் ஜி.எஸ்.டி. :**

ஜி.எஸ்.டி. ஒரு குறிப்பிட்ட சரக்கிற்கு அல்லது சேவைக்கு ஒரே விகிதத்தில் வரிவிதிக்கிறது. இதனால் சந்தையில் பெருமுதலாளிய நிறுவனங்களின் பொருள்களுடன் சாதாரண சில்லறை வணிகர்கள் போட்டியிட முடியாத நிலை ஏற்படுகிறது. அதனால் காலப்போக்கில் சிறு மற்றும் நடுத்தர வணிகர்கள் ஜி.எஸ்.டி.யால் விரட்டி யக்கப்படுவார்கள்.

அதேபோல், “ஒரே நாடு, ஒரே சந்தை” என்பதில் அதிகப் பயனடையும் இந்திய மற்றும் பன்னாட்டு முதலாளிய நிறுவனங்களும், சிறு உற்பத்தியாளர் களும் ஒரே வரிச்சுமையை ஏற்கும் நிலையில், சந்தைப் போட்டியில் சிறு தொழில் முனைவோர்கள் படிப்படியாக வெளியேறும் நிலை ஏற்படும்.

எனவே தான் தமிழ்நாட்டில் பெரிய அளவில் பாதிக்கப்படும் சாயத் தொழில், விசைத்தறிகள், தீப் பெட்டித் தொழில், பட்டாசுத் தொழில் முதலானவற்றில் ஈடுபட்டுள்ள சிறு உற்பத்தியாளர்கள் ஜி.எஸ்.டி.யை எதிர்த்துப் போராடி வருகின்றனர். இதுவரை வரி விதிப்பு இல்லாத 509 பொருள்களுக்கு வரி விதிக்கப் பட்டுள்ளது. பலமுனை வரியைவிட தற்போது விதிக்கப் பட்டுள்ள ஒருமுனை ஜி.எஸ்.டி. வரி, கூடுதலாக இருப்பதால் பல பொருள்களின் விலைகள் முன்பு இருந்ததைவிட அதிகரித்துள்ளன. உணவகங்களில் உணவுப் பொருள்களின் விலை ஏற்றத்தால், உண வகங்களுக்கு வருவோர் எண்ணிக்கை குறைந்து விட்டது. தெருவோரக் கடைகள், வீட்டில் சமைத்து தரப்படும் உணவுகளை மக்கள் அதிகம் நாடுகின்றனர்.

பெரிய நிறுவனங்கள், சிறிய நிறுவனங்கள் என அனைத்தும் ஒவ்வொரு மாதமும் 5ஆம் நாள், 15ஆம் நாள், 25ஆம் நாள் என மூன்று முறை வரித்துறை யினருக்குத் தங்கள் கணக்குகளை மின்னியல் வடிவில் (Electronic Format) அனுப்ப வேண்டும். எனவே சிறிய நிறுவனங்களும் கட்டாயம் கணினி மயமாக வேண்டும். நிறுவனங்களின் வரவு-செலவுக் கணக்குகளை “ஜி.எஸ்.டி. இணையம்” (GST Network) என்ற வலைப்பின்னலில் இணைக்க வேண்டும். இம்மாற்றங்களை செப்டம்பர் மாதத்திற்குள் செய்து முடிக்க வேண்டும் என்று மோடி அரசு கூறுகிறது. குறைந்த அளவிலான எழுத்தறிவு கொண்ட சிறு வணிர்கள், சிறு உற்பத்தியாளர்களால் கணினி மூலம் இவற்றைச் செய்ய முடியுமா? இந்த நிலையால் சிறு வணிகர்களும் சிறு உற்பத்தியாளர்களும் வரித்துறை அதிகாரிகளால் மிரட்டப்படுவார்கள். இதனால் ஊழல் அதிகமாகும். மேலும் இணையதள வசதியைக் கொண்டிருக்கும் சிறிய நிறுவனங்களிடம் மட்டுமே பெரிய நிறுவனங்கள் தமக்கான பொருள்களை வாங்கு வார்கள். எனவே எல்லா வகையிலும் ஜி.எஸ்.டி. சிறுவணிகர்களுக்கும், சிறு உற்பத்தியாளர்களுக்கும் எதிரானதாகவே இருக்கிறது.

எனவேதான் ஆர்.எஸ்.எஸ்.-இன் அறிவுஜீவி யாகக் கருதப்படும் எஸ். குருமூர்த்தி, “சிறுவணிகர் களுக்கு ஜி.எஸ்.டி.யை நடைமுறைப்படுத்த மூன்று ஆண்டு முதல் அய்ந்து ஆண்டுகள் வரை அவகாசம் கொடுத்தால், அது நாட்டின் வளர்ச்சிக்கு வழிகாட்டும். சரக்கு மற்றும் சேவை வரி சட்டத்தில் பதிவு செய்ய வில்லை எனில் அபராதம் விதிக்கப்படும் நிலை இருக் கிறது. எனவே ஆண்டுக்கு ரூ.4 அல்லது ரூ.5 கோடி வர்த்தகம் செய்வோருக்கு ஜி.எஸ்.டி.யிலிருந்து அவகாசம் அளிக்க வேண்டும்” என்று கூறியிருக்கிறார் (தினமணி, 22.7.17). குருமூர்த்தியே இந்த அளவுக்குப் பேசுகிறா ரெனில், உண்மையில் சிறுவணிகர்களும் சிறு உற்பத்தியாளர்களும் ஜி.எஸ்.டி.யால் எந்த அளவுக்கு அல்லல்படுவார்கள் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

அரசு நிலையில் கூட ஜி.எஸ்.டி.யை நடைமுறைப் படுத்துவதற்கான போதிய கட்டமைப்புகள் உருவாக்கப்பட

வில்லை என்று பொருளியல் வல்லுநர்கள் கருத்துரைத்துள்ளனர். ஜி.எஸ்.டி. குறித்து பலதரப்பு வல்லுநர்களுடன் கலந்துரையாடாமல், வெறும் உயர் அதிகாரிகள் மட்டத்தில் மட்டுமே ஜி.எஸ்.டி. வகுக்கப்பட்டதால் நடைமுறையில் அது பல சிக்கல்களை எதிர்கொள்ளும் என்று பொருளியல் வல்லுநர்கள் கூறுகின்றனர். நரேந்திர மோடி 2016 நவம்பரில் பண மதிப்பு நீக்க நடவடிக்கையை அதிரடியாக மேற்கொண்டது போல் ஜி.எஸ்.டி.யையும் 2017 சூலை 1 முதல் செயல்படுத்த வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருந்தார்.

ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு வெளிப்படைத் தன்மையையும், வரி வசூலிப்புத் திறனையும் அதிகப்படுத்தும்; ஊழலைக் குறைக்கும் என்கிற வாதம் நடுவண் அரசால் வலுவாக முன்வைக்கப்படுகிறது. இந்த வாதம் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போன்றதாகும். 2005ஆம் ஆண்டு வாட் வரி வந்த போதும் இதே வாதத்தை முன்வைத்தார்கள். வாட் வந்ததால் வரி வசூலிப்புத் திறன் அதிகரித்ததாகவோ, ஊழல் குறைந்துவிட்டதாகவோ மெய்ப்பிக்க சான்றுகள் இல்லை. மாறாக, கடந்த பத்து ஆண்டுகளில் ஊழல் அதிகமாகியிருக்கிறது. அதேபோல் ஜி.எஸ்.டி.யிலும் உயர் வரிவிகிதங்களில் வரி ஏய்ப்பு செய்வதற்கான வாய்ப்புகள் மிகுதியாக இருப்பதாகப் பொருளியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

ஊழலுக்கு அடிப்படை, அரசியல் ஊழல் மயமாகி விட்டிருப்பதே ஆகும். பெருமுதலாளிய நிறுவனங்கள் அரசியல் கட்சிகளுக்கு ஆண்டுதோறும் கோடிக்கணக்கில் நன்கொடை என்ற பெயரில் கையூட்டுத் தருவதே ஊழலின் ஊற்றுக்கண் ஆகும். மோடி ஆட்சிக்கு வந்தபின், முதலாளிய நிறுவனங்கள் எந்த அரசியல் கட்சிக்கு எவ்வளவு நன்கொடை அளித்தன என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்கிற விதியையும் நீக்கி விட்டார்.

ரொக்கப் பரிவர்த்தனை முறையை நீக்கி டிஜிட்டல் பரிவர்த்தனை ஏற்பட்டுவிட்டால் ஊழல் ஒழிந்துவிடும் என்று மோடி தொடர்ந்து கூறிக்கொண்டிருக்கிறார். மோடியின் கூற்று எவ்வளவு பொய்யானது என்பதை 21.7.2017 அன்று நாடாளுமன்றத்தில் அரசால் வெளியிடப்பட்ட அறிக்கை அம்பலப்படுத்துகிறது. இந்தியாவின் தலைமை கணக்குத் தணிக்கை அலுவலக ஆய்வறிக்கையில், தொலைத்தொடர்பு சேவையில் முன்னணியில் உள்ள ஏர்டெல், வோடாஃபான், ஐடியா, ஆர்காம், ஏர்செல், எஸ்.எஸ்.டி.எல். ஆகிய ஆறு நிறுவனங்கள் தங்கள் வருவாயில் ரூ.61,000 கோடியைக் கணக்கில் காட்டாததால், அரசுக்கு ரூ.7697 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது; அரசின் தொலைத் தொடர்புத்துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்காததால் இத்தவறு நிகழ்ந்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது (The Hindu, 22.7.2017).

இந்தியாவில் நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் (GDP) வரிவருவாயின் பங்கு 16.6 விழுக்காடாகும். இது வளரும் நாடுகளில் 21 விழுக்காடாகவும், வளர்ந்த நாடுகளில் 34 விழுக்காடாகவும் உள்ளது.

எனவே வரிவருவாயை அதிகரிக்க முதலாளிகள், பணக்காரர்கள் மீதான நேரடி வரிவிதிப்பை அதிகப்படுத்திட வேண்டும். மறைமுக வரியான ஜி.எஸ்.டி. மூலம் வெகுமக்களை அலைக்கழித்து, துன்புறுத்தக் கூடாது. மாநிலங்களின் உரிமையைப் பறிக்கின்ற, சிறுவணிர்களை, சிறு உற்பத்தியாளர்களை ஒடுக்குகின்ற ஜி.எஸ்.டி.யை நடுவண் அரசு திரும்பப் பெற வேண்டும்.

# அம்பேத்கர் எழுச்சி இயக்கம் கிளை துவக்க விழா

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், கரிக்கிளாம்பாடி கிராமத்தில் அம்பேத்கர் எழுச்சி இயக்கம் கிளை துவக்க விழா சிறப்பாக நடைபெற்றது. மாலை 7 மணியளவில் அம்பேத்கர் எழுச்சி இயக்க பெயர்ப் பலகை திறப்பு மற்றும் கொடியேற்று விழா நடைபெற்றது. இதைத் தொடர்ந்து இரவு 9 மணிவரை பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கிளை நிர்வாகிகளும், உறுப்பினர்களும் நிகழ்ச்சி ஏற்பாட்டைச் சிறப்பாகச் செய்திருந்தனர். கிளையின் துணைப் பொருளாளர் தோழர் சுந்தர்ராஜன் வரவேற்புரை ஆற்றினார். கீழ்ப்பென்னாத்தூர் ஒன்றியச் செயலாளர் தோழர். ஏழுமலை தலைமை தாங்கினார். அம்பேத்கர் எழுச்சி இயக்க தோழர்கள் ராமன், வினோத், ஜெய்குமார், ரகு ஆகியோர் உரை நிகழ்த்தினர். மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர். முரளி தமிழன் சிறப்புரையாற்றினார்.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி மாவட்டச் செயலாளர் தோழர். பொன். சுப்பிரமணி, மக்கள் சனநாயக குடியரசு கட்சி விழுப்புரம் மாவட்டச் செயலாளர் தோழர் வையவன், இணைப் பொதுச் செயலாளர் தோழர் முகிலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இறுதியாக தோழர் தனஞ்செய்கீர் எழுதி, தோழர் க.முகிலன் தமிழில் மொழிப்பெயர்த்து மா.பெ.பொ.க வெளியிட்ட அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு என்ற நூலை தோழர் சுப்பிரமணி, அ.எ.இ. கிளைக்கு நன்கொடையாக வழங்கினார்.

கிளை நிர்வாகிகள் ஏற்பாடு செய்திருந்த சிறப்பான இரவு விருந்தோடு நிகழ்ச்சி சிறப்பாக முடிவுற்றது.

# நெடுஞ்சாலைகளும் மதுக் கடைகளும்

- இராமியா




இந்திய நாட்டின் தேசிய நெடுஞ் சாலைகள் மற்றும் மாநில நெடுஞ் சாலைகளின் இருமருங்கிலும் 500 மீட்டர் தொலைவு வரை மது விற்பனை கூடாது என்று கடந்த 15.12.2017 அன்று உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங் கியது. மதுக் கடைகளில், 90 விழுக் காட்டுக்கும் மேல் இப்பகுதியில் தான் உள்ளன. இந்த ஆணையை அமல்படுத் துவது என்பது கிட்டத்தட்ட மது விலக்கை அமல்படுத்துவது போல் தான்.

மது நாட்டிற்கு, வீட்டிற்கு, உயிருக்கு விளைவிக்கும் நன்மைகள் கொஞ்சமா நஞ்சமா? அதை எப்படி ஒழிக்க முடியும்? ஆகவே மக்கள் நலனுக்கு என்றே தங்கள் உயிரைத் தக்க வைத்துக் கொண்டு இருக்கும் மாநில அரசுகள், உச்ச நீதிமன்றத்தின் ஆணையைப் புறம் கண்டு மக்கள் சேவையைத் தொடர்வதற்கான வழி வகைகளை யோசித்தன. மதுவினால் மக்கள் அடையும் நன்மைகளை விளக்கி உச்ச நீதிமன்றத்திலேயே மேல் முறையீடு செய்யலாம். ஆனால் அம்முறையீடு விசாரிக்கப்பட்டு 'நல்ல தீர்ப்பு' பெறுவதற்கு வெகுநாட்கள் ஆகும். அதுவரை மக்கள் அடையும் நன்மைகளைக் கிடப்பில் போட்டு வைக்க முடியுமா?

இது மிக முக்கியமான பிரச்சினையாக இருப்பதால் எல்லா மாநில அரசுகளும் அவசர ஆலோசனையில் ஈடுபட்டன; தங்களுக்குள் ஒரு அறிவுப் போட்டியையே நடத்தின. இந்தப் போட்டியில் அரியானா மாநில அரசு முதல் பரிசைத் தட்டிச் சென்றது. உச்ச நீதிமன்றத்தின் ஆணைப்படி தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளின் அருகில் மது விற்பனை கூடாது. இந்நெடுஞ்சாலைகளை மாவட்டச் சாலைகள் என்று அறிவித்து விட்டால் ,,, ? ஆகா ,,, ! என்ன அறிவுத் திறன்? எல்லா மாநில அறிவாளிகளும் அரியானா மாநில அறிவாளிகளின் நுண்ணறிவைக் கண்டு, திக்குமுக்காடிப் போய் நன்றி கூறினார்கள். மதுக் கடைகள் உள்ள நெடுஞ்சாலைகள் எல்லாம் மாவட்டச் சாலைகளாகப் பெயர் சூட்டப்பட்டன. அச்சாலைகளுக்கு அருகே உள்ள நட்சத்திர விடுதிகள் மற்றும் அதைப் போன்ற ஆடம்பர மதுக் கடைகள் தொடர்ந்து தங்கள் சேவை செய்ய வசதி செய்து கொடுத்தனர். வழக்கம் போல சிறு வணிகர்களைக் கண்டு கொள்ளாமல் விட்டு விட்டனர்.

அரசுகள், மதுக் கடைகள் செழித்து வளர வேண்டும் என்பது மட்டும் அல்லாமல், பல விஷயங்களில் மக்களின் நலன்களுக்கு எதிராகவே நடந்து கொள்வதன் உண்மையான காரணத்தை அறியாத, அக்காரணம் தெரிந்தால் உச்ச நீதிமன்றமும் தன் ஆணையைத் தானே மாற்றிக் கொள்ளும் என்பதையும் அறியாத, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பல உள்ளன. அவற்றுள் ஒன்று தான் "பாதுகாப்பாக வந்து சேர் சமூகமே" எனும் நிறுவனம்.

அந்நிறுவனம் அரியானா மாநில அறிவாளிகளின் முடிவுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கைத் தொடுத்தது. அவ்வழக்கு கடந்த மார்ச் மாதம் விசாரணைக்கு வந்தது. நெடுஞ்சாலைக்கு மாவட்டச் சாலை என்று பெயர் மாற்றி நீதிமன்ற ஆணையைப் புறங்கண்ட அரசின் செயலைக் கேட்டு நீதிபதிகள் கடும் கோபம் கொண்டனர். தங்களது ஆணை சில்லரைக் கடைகளுக்கு மட்டும் அல்ல என்றும், நட்சத்திர விடுதிகள், களியாட்ட இடங்கள், கேளிக்கை விடுதிகள் என அனைத்து இடங்களுக்கும் பொருந்தும் என்றும், மது அருந்தி விட்டு வாகனம் ஓட்டி விபத்து நடந்து, அதில் மக்கள் கொல்லப் படுவதைத் தடுப்பது தான் தங்கள் நோக்கம் என்றும் அழுத்தம் திருத்தமாகக் கூறி விசாரணையை 4.7.2017 அன்று ஒத்தி வைத்தார்கள்.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் இவ்வாறு கூறி இருந் தாலும், அரசுத் தலைமை வழக்கறிஞர் வேறு விதமாக விளக்கம் அளித்தார். உச்ச நீதிமன்றத்தின் நோக்கம் சில்லரை மது விற்பனையைத் தடுப்பது தான் என்றும், நட்சத்திர விடுதிகள் போன்ற பெரிய நிறுவனங்களைக் கட்டுப்படுத்தாது என்றும் அவர் தன்னுடைய சட்டபூர்வக் கருத்தில் விளக்கம் கூறியிருந்தார்.

அரசுத் தலைமை வழக்கறிஞரின் விளக்கமும் நீதிபதிகளின் கருத்தும் முரண்பட்டு இருப்பதைக் கண்ட மாநில அரசுகள், தாங்கள் எப்படியும் தப்பித்துக் கொள்ள வழி கிடைத்தது என்று நிம்மதியுடன் இருந்தன. எதைச் சொல்வது, எப்படிச் சொல்வது என்று பா.ஜ.க.வின் முகத்தையே குறிப்புக்காகப் பார்த்துக் கொண்டு இருக்கும் தமிழக அரசு கூட, மது தொடர்பான அனைத்துப் பிரச்சி னைகளையும் ஒரே ஆணையின் மூலம் தீர்த்து விட முயல்வது நன்மை அளிப்பதை விட அதிகமாகத் தீமை பயக்கும் என்று துணிச்சலாகத் திருவாய் மலர்ந்து அருளி விட்டது.

**2017 மார்ச்சு மாதம் கோபாவேசமாகப் பேசிய உச்ச நீதிமன்றம் 4.7.2017 அன்று வழக்கு விசாரணைக்கு வந்த போது, எடுத்த எடுப்பிலேயே நெடுஞ்சாலைகள்**

**மாவட்டச் சாலைகளாக மாற்றம் செய்ததில் தவறு இல்லை என்று கூறியது. அது உச்ச நீதிமன்ற ஆணையின் நோக்கத்திற்கு எதிரானது என்று தொண்டு நிறுவனம் சுட்டிக் காட்டிய பேது, நகரங்களில் வாகனங்கள் மெதுவாகச் செல்வதால் விபத்துகள் நடந்தாலும் அவை கடுமையாக இருக்க வாய்ப்பு இல்லை என்று கூறி விட்டது.**

அவ்வழக்கு மீண்டும் 11.7.2017 அன்று விசாரணைக்கு வந்தது. அரியானா மாநில அறிவாளிகளின் யோசனைப்படி நெடுஞ்சாலைகளை மாவட்டச் சாலைகளாக மாற்றுவதற்கு உச்ச நீதிமன்றத்திற்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று நீதிபதிகள் கூறினர். நெடுஞ்சாலைகள் மாவட்டச் சாலைகளாக மாற்றம் செய்யப்பட்டு உள்ள நிலையில், மதுக் கடைகள் கூடாது என்ற ஆணை அங்கு பொருந்தாது என்றும் அவர்கள் தெரிவித்தார்கள்.

வழக்கைத் தொடுத்த தொண்டு நிறுவனம் இப்பொழுது என்ன செய்வது என்று தெரியாமல் பேந்தப் பேந்த முழித்துக் கெண்டு இருக்கிறது. அது சரி! இது போன்ற வழக்குகள் அனைத்துமே இறுதியில் மக்கள் நலனுக்கு எதிராகவே முடிகின்றனவே என்று தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் என்றாவது யோசித்து இருக்கின்றனவா? மது உற்பத்தி, விற்பனையில் முதலாளிகளில் பலர், தங்கள் மூலதனத்தை முதலீடு செய்து உள்ளனர். மது விற்பனைக்கு ஊறு விளைவித்தால், அவர்கள் தங்கள் மூலதனத்தை வேறு தெழில்களுக்குக் கொண்டு செல்ல வேண்டி இருக்கும். ஆனால் இன்றைய பொருளாதார நெருக்கடியில் இலாபகரமாக முதலீடு செய்வதற்கான தொழில்கள் இல்லை. ஆகவே முதலாளிகள் இத்தொழிலிலேயே தங்கள் மூலதனம் தொடர வேண்டும் என்று விரும்புகின்றனர்; அதிகாரிகள், நீதித்துறை, ஊடகங்கள், அரசியல்வாதிகள் என அரசின் அனைத்து அமைப்புகள் மீதும் தங்கள் செல்வாக்கைச் செலுத்தி, தங்கள் மூலதனம் தங்களுக்கு இலாபம் அளிக்கும் தொழிலிலேயே தொடரும் வழி வகைகளைப் பார்த்துக் கொள்கின்றனர்.

இதில் மூலதனப் பயணத்திற்கு உராய்வு ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்குத் தான் முதன்மையான முக்கியத்துவம் அளிக்கிறார்கள்.

**இதை நிலைநிறுத்துவதற்குத் தான் கையூட்டு முதலிய ஊழல்களில் ஈடுபடுகிறார்கள். ஆனால் நமது தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், அரசை ஆட்டிப் படைக்கும் மூலதன ஆட்சியைப் பற்றிச் சிறிதும் கவலைப் படாமல் ஊழலைப் பற்றியும், அதனால் விளையும் கேடுகளைப் பற்றியும் மட்டுமே பேசுகின்றன. மூலதனத்தின் ஆட்சியை, அதாவது முதலாளித்துவத்தை அடியோடு ஒழித்தால் தான், அது ஆட்டிப் படைக்கும் ஊழலையும் அதனால் வரும் கேடுகளையும் ஒழிக்க முடியும் என்று என்றைக்குத் தான் புரிந்து கொள்ளப் போகிறோமோ?**

## பேராசிரியர் த. செயராமனின் தந்தை தங்கவேல் மறைவு



மீத்தேன் எதிர்ப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் த.செயராமன் அவர்களின் தந்தையார் த.தங்கவேல் அவர்கள் மயிலாடுதுறையில் கடந்த 22-7-2017 சனிக்கிழமை மாலை இயற்கை எய்தினார். (வயது 96)

த.தங்கவேல் அவர்கள் பழைய தஞ்சை மாவட்டம் தரங்கம்பாடி வட்டத்தில் கிடாரங் கொண்டான் என்ற கிராமத்தில் வாழையடி வாழையாக வாழ்ந்து வந்தார்.

தங்கவேல்-பேச்சியம்மாள் இணையர் இரண்டு மன்கள், நான்கு மகள்களைப் பெற்றெடுத்தனர். குழந்தைகளின் கல்விக்காக கிடாரங் கொண்டானிலிருந்து இடம் பெயர்ந்து, செம்பனார்கோயிலுக்குச் சென்றனர். பழைய இரும்புக் கடை, மருந்துக் கடை ஆகியவற்றை நடத்திய இவர் பின்னர் அருகிலுள்ள ஆறுபாதிக்கு இடம் பெயர்ந்தனர். சென்னைக்கு மூங்கில் அனுப்பி வைக்கும் வணிகத்தை சில ஆண்டுகளுக்கு முன்புவரை செய்து வந்தனர்.

த.செயராமனைப் பள்ளியில் சேர்க்கும்போது முதல் நாளே 20 திருக்குறளும், வீரபாண்டிய கட்டபொம்மன் வசனமும் பேசிக்காட்டும் அளவிற்கு முதல் ஆசிரியராக விளங்கினார். 5ஆம் வகுப்பு வரை மட்டுமே கல்வி பயின்ற த.தங்கவேல் அவர்கள் நடமாட்டங்கள் குறைந்து போன நிலையில், த.தங்கவேல் மற்றும் அவருடைய துணைவியார் த.பேச்சியம்மாள் ஆகியோருக்கு அனைத்துப் பணிவிடைகளையும் செய்து பேணியவர் பேரா.த. செயராமனின் துணைவியார் செ.சித்ரா அவர்கள் ஆவார். கடந்த 24-5-2017 அன்று பேராசிரியர் குடந்தை சிறையிலிருந்து வெளியே வந்ததும் தாயார் த.பேச்சியம்மாள் (வயது 93) இறந்தார். இப்போது 30.6.2017 முதல் திருச்சி மத்திய சிறையில் சிறையிலிடப்பட்ட நிலையில் 22.7.2017 அன்று தந்தையார் த.தங்கவேல் அவர்கள் இயற்கை எய்தினார். தமிழ்த்தேசியத் தன்னுரிமைக் கொள்கையின் சிறந்த பரப்புரையாளராகவும், செயற்பாட்டாளராகவும் திகழும் பேராசிரியர் த.செயராமன் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகின்றோம்.

# தமிழ்ப்பெருமக்களே! இளைஞர்களே! மழைநீரைத் தேக்கிட வழிசெய்யுங்கள்! ஆற்றுநீர் உரிமைக்கும் போராடுங்கள்!

தமிழ் மாவட்டங்களில் ஓடுகிற பெரிய ஆறுகள் 17; சிறிய ஆறுகள் 99.

இவற்றில் இன்று நீர் ஓடவில்லை; 30 ஆண்டுகளாகக் காவிரியில் நீர் ஓடவில்லை.

இதற்கு முதலாவது காரணம் தாமிரபரணி, வைகை இரண்டு ஆறுகள் மட்டுமே தமிழகத்தில் தோன்றுகின்றன; தென்தமிழ் மாவட்டங்களில் ஓடி மக்கள் குடிநீரும், பாசன நீரும் பெறப் பயன்படுகின்றன.

காவிரி போன்ற பல ஆறுகள் குடகு, கர்நாடகாவில் தோற்றம் பெற்று, காவிரி ஓட்டத்தில் கர்நாடகத்தில் நான்கு நீர்நிலைகளை நிரப்பிவிட்டு, அப்புறம் வழியும் நீர் தமிழ்நாட்டுக் காவிரிக்கு விடப்படுகிறது.

ஒரே மாநிலமாக - கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தமிழகம் நான்கும் 1953, 1956 வரையில் இருந்தன.

1953இல் சென்னை மாகாணத்திலிருந்து ஆந்திரா பிரிந்தது; 1.11.1956இல் கர்நாடகம், கேரளம், தமிழகம் பிரிந்தன.

காவிரி நீர்ப்பங்கீட்டுத் தகராறு, தி.மு.க. ஆட்சியில் 1974இல் தோன்றியது. இந்திராகாந்திக்கு தி.மு.க. 1969இல் கைகொடுத்தது.

1972ஆம் ஆண்டில் தி.மு.க.விலிருந்து எம்.ஜி.ஆர். பிரிந்தவுடன், எந்த ஒரு சிக்கலைப் பற்றி நிலைப்பாடுகளை எடுப்பதிலும், மத்திய அரசிடம் அழுத்தம் தருவதிலும்-கலைஞர் மு. கருணாநிதியும் - எம்.ஜி.ஆரும் - பிறகு கலைஞரும் செல்வி செயலலிதாவும் ஒன்றாகச் சேர்ந்து சென்று-இந்திராகாந்திக்கோ, ராஜீவ் காந்திக்கோ அழுத்தம் தரவில்லை.

1989 - 1990இல் பிரதமர் வி.பி.சிங்குக்கு அழுத்தந்து, தி.மு.க. ஆட்சி, காவிரி நடுவர் மன்றத்தை அமைத்திட ஏற்பாடு செய்தது.

அதேபோல் 2011-16 ஆட்சிக் காலத்தில் செயலலிதா, காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை இந்திய அரசு அறிவிக்கை (Government of India Gazette)யில் வெளியிடச் செய்தார்.

அ.தி.மு.க. - தி.மு.க. இரண்டு கட்சிகளும் 1974 முதல் பிரிந்து நின்றே செயல்பட்டதுமின்றி, 1) ஏரிகளுக்கு நீர்வரத்து வாய்க்காலைத் தூர்வாருவது, 2) ஏரிகளிலிருந்து பாசனத்துக்கு நீர்போகும் வாய்க்காலைத் தூர் எடுப்பது, 3) ஏரிகளின் பரப்பளவு ஆக்கிரமிக்கப்படாமல் காப்பது, 4) ஏரிகளின் உட்புறத்துப் பரப்பில் 2 அடி, 3 அடி ஆழத்துக்கு மண்ணை வெட்டி ஏரிக் கரைகளில் கொட்டுவது, 5) ஏரிக்கரைகளில் மரங்களை வளர்ப்பது, 6) வரத்து, போக்குவாய்க்கால்களைத் தனியார் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிப்பது ஆகிய இவ்வளவு பணிகளையும்-கடந்த 50 ஆண்டுகளாகத் தி.மு.க. - அ.தி.மு.க. ஆட்சிகள் செய்யாமல் மக்களின் வரிப் பணத்தைக் கூட்டாகவும், தனியாகவும் கொள்ளை அடித்தன.

**இன்று பெரிய ஏரிகள் 18,789-ம்; சிறிய ஏரிகள் 20,413-ம் - ஆக 39,202 ஏரிகளிலும் - பாசனத்துக்கோ, குளிப்பதற்கோ, மக்களும், ஆடு மாடுகளும் நீர்குடிப்பதற்கோ வக்கின்றி வறண்டு கிடக்கின்றன.**

**இவற்றைத் தூாவாரச் சொல்லித் தமிழக அரசுக்கு அழுத்தம் தந்து தமிழ்ப் பெருமக்களும், தமிழக இளைஞர்களும் போராடுவது முதலாவது பணி.**

இவற்றைப் பற்றிக் கவலைப்பட்டு "ஆறுகள் மீட்சி இயக்கத்தார்" (Movement to retrieve T.N. Rivers) சென்னையில், 28.6.2017 புதன்கிழமை கூடி, கரிசனத்துடன் விவாதித்து, "இந்திய நீர்வள மீட்பாளர்" எனப் பெயர் பெற்ற இராசேந்திர சிங், ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி வி. கோபால கவுடா மற்றும் வேளாண் சங்கத் தலைவர்களும், "இந்தியக் குடிமக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றான நீரைக் காக்க முயலுவோம்" என முடிவெடுத்துள்ளனர். இது பாராட்டுக்கு உரியது.

"2016-2017இல் ஏற்பட்ட வரலாறு காணாத வறட்சியைப் போக்குவோம்" எனவும் இவர்கள் சூளுரைத்துள்ளனர்.

தமிழகப் பெருமக்களும், தமிழக அரசினரும் இப்படிப்பட்ட வழிகாட்டிகளைப் பயன்படுத்திக் கொண்டு, மழைநீரைத் தேக்கிட எல்லாம் செய்வது உடனடியான - தலையான பணி. ஏன்?

காவிரிக்கு கர்நாடக அரசு, கிருஷ்ணசாகர் அணையிலிருந்து 29.6.2017இல் 2,346 கன அடி நீர் திறந்துவிட்டது. உடனே கர்நாடக விவசாய சங்கத்தினர் அனைவரும் கூடி, 30.6.2017, "காவரிக்குத் தண்ணீர் தராதே!" என்று கோரிப் போராடுகின்றனர்.



கருநாடக வேளாண் தலைவர்கள் எப்போதும் தங்கள் உரிமைக்கு ஒன்றுபட்டுப் போராடுகிறார்கள். அந்த நல்ல பாடத்தை நாம் கற்கவில்லையே!

இன்று, கர்நாடகாவில் காங்கிரசுக் கட்சி ஆட்சி நடக்கிறது. ஆனால், ‘‘காவிரிக்குத் தண்ணீர் தரக் கூடாது’’ என்று காங்கிரசு, பாரதிய சனதா, மதச்சார் பற்ற சனதா ஆகிய எல்லாக் கட்சிகளின் முன்னாள் முதல்வர்களும், இந்நாள் முதல்வரும் ஒன்றுசேர்ந்து, ‘‘காவிரி நீர் ஆணையம் அமைக்காதே!’’ என்று கோரி, மத்திய அரசுக்கு அழுத்தம் தருகிறார்கள்.

அதேபோல், ‘‘முல்லைப் பெரியாறு அணையில் 146 அடிக்குமேல் நீரை உயர்த்தக்கூடாது’’ என்று கோரி, கேரளாவில், காங்கிரசு, இடது கம்யூனிஸ்டு, வலது கம்யூனிஸ்டு, பாரதிய சனதா ஆகிய எல்லாக் கட்சிகளும் ஒன்றாக இணைந்து போராடுகிறார்கள்; தில்லிக்குச் சென்று அழுத்தம் தருகிறார்கள்.

தமிழக வாக்கு வேட்டைக் கட்சிகளுக்குப் பொறுப்பும் அக்கறையும் இருந்தால் - ‘‘நீர்ப்பங்கீடு உரிமைச் சிக்கலை நீக்கிடு’’ என்று கோரி - ஒன்றுபட்டு - ஒரே குரலில் தமிழக ஆளும் கட்சியும் எதிர்க் கட்சிகளும் தில்லிக்குச் சென்று மோடி அரசுக்கு அழுத்தம் தர வேண்டும் என்று கோரிப் போராட வேண்டும்.

**தமிழர்களுக்கு உடனே வேண்டியவை மழை நீரைத் தேக்கி வைத்திட ஏற்ற ஏரிகள் - குளங்கள் - குட்டைகள்.**

**அப்போதுதான் மக்கள் செழிப்படைவார்கள்; வேளாண்மை சிறப்படையும்; ஆடு, மாடுகள் பெருகும்; குடிநீர் பற்றாக்குறை தீரும்.**

**எனவே, இக்கோரிக்கைக்கு எல்லோரும் முன் னுரிமை தாருங்கள்!**

**- வே. ஆனைமுத்து**

## நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சீர்காழி கா. சுப்ரவேலு மறைந்தார்



சீர்காழி மா.முத்துச்சாமி மிகவும் செல்வாக்கோடு திகழ்ந்த மா.பெ. பொ.க. தோழர் ஆவார்.

அவர் தி.க., தி.மு.க., தோழர் களுடன் அன்புடன் பழகினார்.

சீர்காழியில் எப்போது பெரியார் பிறந்த நாள் விழா நடந்தாலும், அந்நிகழ்ச்சிக்கு தோழர் கா.சுப்ரவேலு அவர்களைத் தவறாமல் அழைப்பார். அவருக்குப்பின் இப்போது முத்து. அன்பழகனும் அப்படியே அழைக்கிறார்.

சீர்காழி கா. சுப்ரவேலு அவர்கள், தி.மு.க. சார்பில், 1967 முதல் 1976 வரை நாடாளுமன்ற மக்கள் அவை உறுப்பினராகவும், 1977-79இல் தமிழகச் சட்டப்பேரவை உறுப்பினராகவும் திகழ்ந்தார்.

தற்போது மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினராக விளங்கினார்.

அப்பெருமகனார் தம் 86ஆம் அகவையில் 16.7.2017 ஞாயிறு அன்று மறைவுற்றார் என்பதை வருத்தத்துடன் அறிவிக்கிறோம். 17.7.2017 திங்கள் அன்று, அன்னாரின் இறுதி நிகழ்ச்சியில் மா.பெ.பொ.க. நாகை மாவட்டச் செய லாளர் முத்து. அன்பழகன், தோழர்கள் கோ.மு. கருப்பய்யா, ஆசிரியர் கோ. செயராமன், மூத்த தோழர் பெருமாள் ஆகியோர் பங்கேற்றனர்.

கா.சுப்ரவேலு அவர்களை இழந்து வருந்தும் அன்னாரின் குடும்பத்தார்க்கும், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்களுக்கும் மற்றுமுள்ள தோழர்களுக்கும், மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

**வாழ்க க. சுப்ரவேலு புகழ்!**

**- வே. ஆனைமுத்து**

## மடல் பகுதி

அன்புள்ள ஐயா,

நலம். உங்கள் நலம் சிந்தனையாளன் மூலம் அறிந்து மிக்க மகிழ்ச்சி.

நான் நேரில் வரமுடியாத உடல்நிலை. மனம் நிறைந்த பிறந்த தின வாழ்த்துகள்.

அய்யா நலமாக இருந்து பெரியார் வரலாற்றைக் கொடுங்கள். வணக்கம்.

பசுமரத்தில் ஆணி அறைந்தாற் போன்று, மிகத் தெளிவாகப் பற்பல ஆதாரக் குறிப்புகளோடு மறைந்த டி.எம். நாயர் வரலாற்றை எழுதிய திரு. க. சோமாஸ்கந்தன் அவர் களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துகள்.

**- முத்து செழியன்,** இடையாற்றுமங்கலம்

**கட்டுரைத் தொடர்-52**

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்



1938இல் நடைபெற்ற மாபெரும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவாக தமிழக அரசியல் தளத்தில் மாபெரும் திருப்புமுனை ஏற்பட்டது. இனி இந்தியாவுடன் தொடர்ந்து இருக்கக்கூடாது என்பதே அது. அதை வலியுறுத்தி ‘‘தமிழ்நாடு தமிழருக்கே’’ என்று விடுதலை ஏட்டில் அய்ந்து தொடர் கட்டுரைகள் எழுதப்பட்டது.

### தமிழ்நாடு தமிழருக்கே! - II

நேற்று இத்தலைப்பின்கீழ் எழுதிய தலையங்கத்தில் ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்பது ‘திராவிடம் திராவிடருக்கே’ என்ற கருத்துக்கொண்டதென்றும், திராவிடம் என்றாலும் தமிழ்நாடு என்றாலும் பழைய திராவிட எல்லையையும் திராவிட பாஷைகளையுமே குறிப்பது என்றும், ‘திராவிடம் திராவிடருக்கே’ என்பதன் கருத்து, ‘‘இந்தியா’’வின் பிணைப்பில் இருந்து திராவிடத்தைப் பிரித்து அதை ஒரு தனி நாடாக ஆக்கி, வேண்டுமானால் திராவிட பாஷைப்படி உள்ள பாகங்களை திராவிட தேசத்திற்குள் உள் மாகாணங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாகாணத்திற்கும் தனிப் பிரதிநிதித்துவமோ, அல்லது சட்ட சபையோ ஏற்பாடு செய்து முக்கிய அதாவது எல்லா மாகாணங்களையும் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்குப் பொதுப் பாதுகாப்பு, எல்லா மாகாணத்திற்கும் சம்பந்தப்பட்ட தபால், தந்தி, ரயில், மின்சாரம், பொதுத்தேவை, தொழிற்சாலை ஆகிய விஷயங்களில் தலை அரசாங்கத்திற்குச் சம்பந்தமும் அதிகாரமும் கொடுத்துவிட்டு, மற்றவைகளை அந்தந்த மாகாணமே முழுவதும் பார்த்துக் கொள்ளும்படியாகவும், கூடுமானவரை அந்தந்த மாகாண உத்தியோகம் பொருளாதாரம் முதலாகியவை பற்றிய நிர்வாக அதிகாரம் அந்தந்த மாகாணத்திற்கே அவரவர் எண்ணிக்கைப்படி அளிக்கக் கூடியதாகவும் செய்து கொள்வது என்ற கருத்திலும்.

### பிணைந்திருந்து பயன் என்ன?

இப்படிச் செய்வதனாது எவ்விதத்திலும் நாஸ்திகமென்றோ, மதமொழிப்பு என்றோ சொல்வதாகாது என்றும், மற்றும் இதானது உலகிலோ ‘இந்தியா’ விலோ உள்ள மற்ற மக்களுடன் துவேஷம் கொண்டதாக ஆகாதென்றும் ‘இந்தியா’ உடன் ஒன்றாய் இருந்ததால் இதுவரை எவ்வித முன்னேற்றமும் ஏற்பட்டுவிடவில்லை என்றும், அதற்கு மாறாகப் பல கெடுதிகள் ஏற்பட்டனவென்றும் முன்னேற்றம் அடையாமல் நிலைமை தேங்கிவிட்டதோடு அல்லாமல் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு பின்னாலும் போயிருக்கிறோமென்றும், நாம் தனித்து நின்று நம் காரியத்தையே நாம் கவனிப்பதற்கு ‘இந்தியா’ என்னும் பெரும் கசாகூளத்தில் இருந்து விலகிக்கொள்ளாவிட்டால் இனியும் கேடடைவோம் என்றும், சமுதாயத்துறையில் நாம் மைனாரட்டிகளாக ஆகிவிட்டோம் என்றும், சமயத்துறையில் நாம் மைனாரிட்டிகளாக ஆகிவிட்டோம் என்றும், சமயத்துறையில் கீழ் மக்களாகவும், நாலாம் சாதியாகிய பிறவி அடிமைகளாகவும் ஆய்விட்டதோடு, உலகத்தின் முன் காட்டுமிராண்டிகளாகக் கருதப்பட்டு விட்டோமென்றும், மற்றும் நாம் ஆரியர்களாலும், அவர்கள் நம்மை நசுக்க உதவி அளிக்கும் வடநாட்டாராலும் முறையே நாம் எவ்வளவு காட்டிக் கொடுக்கப்பட்டும், சுரண்டப்பட்டும் தலைதூக்க முடியாத நிலையில் ஆழ்ந்துவிட்டோம் என்றும் இத்தியாதி காரியங்களால் நாம் இனி ‘‘இந்தியா’’ என்ற போலிக்கூட்டு சம்பந்த மில்லாமல் விலகிக்கொண்டு திராவிட எல்லை மாத்திரம் கொண்ட திராவிடம் என்கின்ற ஒரு தேசத்தை தனித் தேசமாக ஆக்கிக்கொண்டு பூரணசக்தி ஏற்படும் வரை பிரிட்டிஷ் பாதுகாப்பு உதவியில் இருந்து வந்து பிறகு உலகில் உள்ள மற்ற பூரண சுயேச்சை தனி நாடுகளில் ஒன்றாக விளங்க வேண்டும் என்பது ஆகவும் எழுதி இருந்தோம்.

மற்றும் இதைப்பற்றி ‘மெயில்’ பத்திரிகைக்கு ஏற்பட்ட சந்தேகத்துக்குப் பதில் கூறி அதன் கண்டனங்களுக்கும் சமாதானம் கூறி அப்பத்திரிகைக்கு அனுப்பிய சேதியை மொழி பெயர்த்த கருத்தையும் நேற்று வேறு பக்கத்தில் பிரசுரித்துமிருந்தோம்.

என்றாலும் நேற்றைய தலையங்கத்தின் முடிவில் குறிப்பிட்டுள்ளபடி, அது சம்பந்தமான மற்ற சில விபரங்களையும் விளக்க அதன் தொடர்ச்சியாக இத்தலையங்கம் எழுதுகிறோம்.

பொதுவாகவே இன்றைய உலகக் கொள்கையானது ஒவ்வொரு நாடும் பெரும் பரந்த ஜனத்தொகை எல்லை ஆகியவற்றின் பிடிப்பிலிருந்து பிரிந்து சிறுசிறு அளவான சிறுநாடாக இருந்த அந்தந்த எல்லையின் சமுதாயத்தின் தேவைகளையும் முன்னேற வழிகளையும் கவனிப்பது தான் பொதுஜன சமுதாய முதலிய முன்னேற்றத்திற்கு அனுகூலமான வழி என்ற கொள்கை (டிசென்ட்ரலைசேஷன்- Decentralisation) என்று தெரியவருகிறது.

**எப்படி என்பதற்குப் பிரதியக்ஷ உதாரணம் கிரேட் பிரிட்டனிலிருந்து அயர்லாந்து பிரிந்து முற்போக்கடைந்து வருவதும், அது ஒரு சமயம் அதிகக் கஷ்டமான உதாரணமென்றால் இந்தியாவில் இருந்து பர்மா பிரிந்து முன்னேற்றமடைந்து வருவதும் போதுமானதாகும்.**

தனி மனிதனுக்கோ ஒரு தனி சமுதாயத்திற்கோ முன்னேற்ற உணர்ச்சி வரவேண்டுமானால் அதைத் தூண்டும் அவசியம் ஒன்று இருந்தே ஆகவேண்டும். இன்றைய நிலைமையில் இந்தியா முன்னேற்றமடைய வேண்டும் என்கின்ற உணர்ச்சி நமக்கு ஏற்பட வேண்டுமானால் அதைத் தூண்டும் அவசியம் நமக்கு என்ன இருக்கிறது? இதுவரை இந்தியா அடைந்த முன்னேற்றத்தில் அல்லது இதுவரை இந்தியாவுக்குக் கிடைத்த லாபகரமான சாதனத்தில் யார் என்ன பலனை அடைந்தார்கள்? குறிப்பாக நமக்கு, திராவிடத்துக்கு அதனால் என்ன நன்மை ஏற்பட்டது? அல்லது எந்தவித மான கஷ்டம் ஒழிந்தது? என்று பார்த்தால் நம் போன்ற வர்கள் வெட்கப்படவேண்டியவர்களாக இருக்கிறோமே அல்லாமல் திருப்தி அடையத்தக்க சமாதானமாவது உண்டா? என்று கேட்கிறோம்.

### முன்னேற்றம் என்றால் என்ன?

**பொதுவாகவே முன்னேற்றம் என்றால் ஒரு நாட்டு மக்கள் சமுதாய வாழ்க்கையிலும், பொருளாதாரத்திலும் முன்னேறுவதே முக்கியமானதாகும். அதற்கேற்றபடி நாட்டின் தன்மை உயர்த்தப்படுவதேயாகும்.**

**மற்றும் மனிதன், மற்றவனைவிடத் தான் மிகமிகக் கீழ்நிலையில் இருக்கிறோமே என்று அதிருப்தியும் துக்கமும் படாமையும் ஆகும். அப்படிப்பட்ட நிலைமையில் திராவிடர்களாகிய நாம் நம்மில் மிகப்பெரும்பாலோர் சமுதாயத் துறையிலாவது, பொருளாதாரத் துறையிலா வது, அதற்கேற்ற கல்வி அறிவிலாவது, முன்னேற்றமோ அல்லது மற்ற மக்களுக்கும் நமக்கும் அதிகமான பேதமில்லாத தன்மையோ பெற்றிருக்கிறோமா?**

அப்படி இல்லையானால் கூடி இருப்பதில் என்ன பயன்? நமது பங்காளிகளுக்கு மேலாக நாம் உழைத்துப் பயிரிட வேண்டும். அதன் பலனை நமக்கு மேல் நமது பங்காளிகளே அனுபவித்துக்கொண்டு நாம் பட்டினியால் செத்துப் போகாமலிருக்க மாத்திரம் (ஏனெனில் செத்துப் போனால் நமது பங்காளிகளுக்கு இம்மாதிரிப் பாடுபட ஆள்கள் கிடைக்காமல் போய்விடுமே என்கின்ற சுயநல கவலை மீது) உயிர்க்கஞ்சி மாத்திரம் பெற அருகதை உடையவர்கள் என்றால், எப்படி அயலார்களோடு கூடி ஒத்துழைக்க முடியும்? ஆதலால் தான் நாம் தனித்து - நமது நிலத்தை பிரித்துக்கொண்டு நமது ஏர்களைத் தனியாய் ஒட்டி ஆழ உழுது பயிரிட்டுக் கொள்ளுகிறோம் என்று சொல்லுகிறோம். இதனால் யாருக்கும் எவ்வித நியாயமான கெடுதியும் ஏற்பட்டுவிடாது.

### கைத்தொழில்

திராவிடநாடு பழங்காலச் சரித்திரத்தில் கைத்தொழி லில் மேன்மையுற்றிருந்ததாக சரித்திரங்களால் தெரிகிறது. உதாரணமாக யுத்த விஷயங்களில் இந்தியா பூராவுக்கும் இன்று உள்ள தகுதி உதைப்பவனைக் கண்டால் அஹிம்சை பேசி உதை வாங்கிக் கொள்வதும், இளைப் பாளியைக் கண்டால் "நாடு அகிம்சைக்கு லாயக்கில்லை கையில் கிடைத்ததை எடுத்து அடித்து ஒழிக்க வேண்டியது" என்று சொல்லுவதுமான அளவில்தான் இந்த 20ஆவது நூற்றாண்டு இந்தியா இருக்கிறது.

ஆனால், 3000, 4000 வருடத்துக்கு முந்தின தமிழ் நாட்டுச் சரித்திர இலக்கியத்தில் யுத்த விஷயத்தில் மனிதன் உதவி இல்லாமல் மதிற்சுவர்களே போரிட்டி ருக்கின்றன. அதாவது மதில்மேல் இயந்திரப் பொறி மனிதன் நின்று கொண்டு ஈயக்குண்டுகளை வார்த்து வீசி எதிரிகள் மீது எறிவதும், இயந்திரங்கள் சரமாரியாய் கவண் கல்லுகளை வீசுவதும், இயந்திரப் பொறியில் மனிதன் பறப்பதும், மயில் போன்ற ஒரு பொறியில் மனிதன் புகுந்துகொண்டு ஆகாய மார்க்கமாகப் பறந்து போவதுமான பல அரிய கைத்தொழில்கள் இருந்திருக் கின்றன. இவை சிலப்பதிகாரம், புறப்பொருள் வெண்பா மாலை முதலாகிய பழங்கால திராவிட சரித்திர இலக்கிய இலக்கணங்களில் காணலாம்.

இவற்றை நாம் பாட்டிக் கதையாகக் கூறுவதாக யாரும் கருதிவிடக்கூடாது. ஏனெனில் பாட்டிக் கதை என்பது இராமாயணம், பாரதம், பெரியபுராணம், சின்னப் புராணம், மச்சப்புராணம், தவளைப்புராணம் ஆகியவற் றில் வரும் தெய்விகப் புஷ்ப விமானங்கள் அதாவது மனிதனுடைய அறிவு முயற்சி இல்லாமல் நினைத்த மாத்திரத்தில் நினைத்தபடி தானாகவே ஆகக்கூடியதும், தெய்வலோகத்தில் இருந்து நரகலோகத்துக்கு வரக் கூடியதும் ஆகாயத்தில் மறைந்திருந்து சண்டை போடு வதும் போன்ற மனோ கற்பனை சாதனங்கள் போன்ற கட்டுக்கதை அல்ல - அறிவுக்கும், விஞ்ஞானத்திற்கும் ஏற்ற முறையில் ஒரு மனிதன் செய்தது இருந்ததாகவே சொல்லப்படுகிறது. இன்றும் பொறிகளால் அன்றி மக்கள் கையினால் செய்திருக்க முடியாது என்று சொல்லத் தகுந்த அநேகக் காட்சிகள் திராவிடத்தில் பிரத்தியட்சத்தில் பார்க்கலாம். இம்மாதிரியான காரியங்கள் இன்று வடநாட்டில் இவ்வளவு இருக்கிறதென்று சொல்லமுடியாது.

### மேனாடும் ஆரியமும்

இப்படிப்பட்ட பழைய சரித்திர உண்மைகள் நம்பப் படா விட்டாலும் சரி, தள்ளி வைக்கப்பட்டாலும் சரி, அதைப் பிடித்துக்கொண்டு நம் பெருமையைப் பேச நாம் வரவில்லை. ஆனால், இன்றைய அற்புதப் பொறிகளும் அதாவது இயந்திரங்களும் புதிய புதிய அதிசயமான

கண்டுபிடிப்புகளும் இந்திய மக்கள் நித்திய வாழ்க்கையில் அனுபவித்து இன்புறும் நூற்பு நெசவு முதலிய ஆலைகளும் தந்தி, கம்பியில்லாத தந்தி, ஆகாய விமானம், நீராவி வண்டி, எண்ணெய் வண்டி, மிதி வண்டி, கிராமபோன், நடிக்கும்-பேசும் சினிமா, புகைப்படம், எக்ஸ்ரே, ரேடியோ, ரேடியோ மூலம் படம் முதலான பல அற்புதங்கள் மேல் நாட்டாரால், அதுவும் சிறு சிறு நாட்டினரால் கண்டுபிடிக்கப்பட்டு உலகத்திற்குப் பயன்பட்டு மக்கள் இன்புறுவதைப் பார்க்கின்றோம்.

'இந்தியா ஒன்றாயிருந்த அந்தராத்மாவுடன் பேச்சு வார்த்தை நடத்தும் மாகாத்மாவைத் தலைவராக, வழி காட்டியாக, ஞானாசிரியராகக் கொண்ட இந்திய மக்கள் கண்டுபிடித்ததென்ன என்றால் கைராட்டினம், தக்கிளி, கட்டைவண்டி, 51 ஜதை மாடுகளைப் பூட்டி இழுக்கும் விசை வேகம், கருப்பட்டி, கைக்குத்து அரிசி, கோணி, வேஷ்டி, அதுவும் முழுங்காலுக்குமேல் கட்டிக்கொண்டு, காட்டுமிராண்டிகளை நினைவூட்டுதல், உலக நிலை கவனிக்காமல் உச்சிக் குடுமியைக் காட்டிக்கொண்டு, மழுங்கச் சிரைத்த தலையுடன் ஆபாசமாய்த் திரிதல்; இவைதான் இந்தியா இன்றைய சகாப்த அற்புதங்களாய்க் கண்டுபிடிக்கப்பட்டு விளங்குகின்ன.

**வடநாட்டாரின் கூலிகள்**

அன்றியும் விஞ்ஞானம், புதிய கண்டுபிடிப்பு, யந்திர காரியங்கள் முதலாகியவை இன்றைய இந்தியாவுக்குக் கசப்பாய் இருப்பானேன்? உலகில் இந்தியாவைத் தவிர வேறு எந்த பாகத்திலாவது அபிசீனியாவிலோ, அல்லது இன்னும் பழைய ஆதி மக்கள் போன்றவர்கள் வாழுமிடங்களிலோ இயந்திரம் கூடாதென்று சொல்லுவோருண்டா? ஆனால் இயந்திரம் பிசாசு என்று சொல்லி திராவிட நாட்டில் மாத்திரம் இயந்திரம் தலை எடுக்காமல் செய்துவிட்டு இந்தியாவிற்குள்ளாகவே தன் சுயசாதி உள்ள மற்ற நாடுகளில் இயந்திரங்கள் வைத்து திராவிட நாடு பூராவுக்கும் பயன்படும்படியாக துணிகள், சாமான்கள் அனுப்பி மற்ற மாகாணக்காரர்களைக் கொழுக்க வைத்து அவர்களிடம் லட்சம் பத்து இலட்சம் பணம் பெற்று திராவிட நாடு விபீஷணர்களுக்கும், அனுமார், சுக்ரீவன் அங்கதன்களுக்கும் கூலி கொடுத்து - வாலி, இராவணன் போன்ற அவர்களது பெரியார்களையும் வீரர்களையும் சூழ்ச்சியில் கொல்லச் செய்வதும், திராவிட நாட்டில் உள்ள சில இழி மக்களைத் தேர்தலுக்கு நிறுத்தி மற்ற மாகாணத்தாரிடம் திராவிடத்தைக் காட்டிக் கொடுத்துப் பெற்றுவந்த பணங்களைச் செலவுசெய்து வெற்றி தேடிக் கொடுத்து திராவிட மக்கள் ஸ்தாபனங்களை மைனாரிட்டியாகக் காட்டித் தங்கள் சிறு ஸ்தாபனத்தை ''மெஜாரிட்டி''யாக செய்துகொண்டு திராவிட பாஷை, கலை, நாகரிகம், சரித்திர உண்மைகள், சுதந்தர உணர்ச்சி, முதலியவை மறையச் செய்வதுமான காரியம் செய்வதானது திராவிடம் தனித்து இருந்திருக்குமானால் முடிந்திருக்குமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

திராவிடம் தனித்திருக்குமானால் திருநெல்வேலி ஜில்லாவிற்கு தோழர்கள் ஒரு சொக்கலிங்கமும், ஒரு எக்ஞேஸ்வர சர்மாவும், ஒரு லட்சுமி அம்மாளும் (இவர்களது தகுதியும் யோக்கியதையும் பொது மக்கள் அறிந்ததே) ஆகியவர்கள் திராவிடர்களுக்குப் பிரதிநிதியாகவும், மேடை குடும்பமும், சீனா - வானா (சி,வ.)குடும்பமும், இலஞ்சி குடும்பமும், சாவடி குடும்பமும் இன்று மூலையில் உட்கார்ந்து கொண்டிருக்கவும் நாலாந்தர ஆள்களுக்குப் பின்னால் கொடி பிடித்துக்கொண்டு திரியவும் நேரிட்டு இருக்குமா? அது போல மற்ற ஜில்லாக்களையும் பார்ப்பதற்கு ஆக கோவை ஜில்லாவைக் குறிப்பிடுகிறோம்.

கோவை ஜில்லாவில் அந்த ஜில்லா பெருமக்களின் சமுதாயத் தலைவர்களான இரண்டு பட்டக்காரர்களும் தமிழ்நாடு பிரதிநிதித்துவ சாதியில் இருந்து தள்ளப்பட்டு பொது வாழ்விற்கு லாயக்கில்லை என்று தண்டிக்கப் பட்டுவிட்டார்கள். கோவை ஜில்லா பிரமுகர்களான தோழர் இரத்தினசபாபதி முதலியார் சாதிப்பிரஷ்டம் செய்யப்பட்டு விட்டார். மற்றொரு பிரமுகரான இராமலிங்கம் செட்டியார் மாங்கல்யம் கழற்றப்பட்டுவிட்டார். இவர்கள் பொது வாழ்வில் சகுனத்தடையாக மதிக்கும்படி செய்யப்பட்டு விட்டார்கள். இராஜாக்கள், ஜமீன்தார்கள் புறமுதுகிடும்படி செய்யப்பட்டு விட்டார்கள். இவர்களில் யாராவது தோழர் ஆச்சாரியார், சத்தியமூர்த்தியார், குப்புசாமி, அண்ணாமலை உபயதுல்லா சாயபு, சுப்பையா, சுப்ரமணியர்கள் ஆகியவர்களுடைய தகுதியிலோ, ஒழுக்கத்திலோ, நாணயத்திலோ, தேசாபிமானத்திலோ குறைந்தவர்கள் என்று சொல்லமுடியுமா? மற்றென்ன காரணம் என்றால் திராவிடம் திராவிடருக்கல்லாமல் ஆரியர்களுக்கும், ஆரிய பனியாக்களுக்கும் ஆரிய புரோகிதர்களுக்கும் ஆக இருப்பதனால் அல்லாமல் வேறு என்ன என்று சொல்ல முடியும்? திராவிட கிறித்தவர்கள், திராவிட முஸ்லிகள் என்று சொல்லப்படுபவர்களுடைய யோக்கியதைதான் எப்படி இருக்கிறது?

தமிழ்நாட்டுக்கு முஸ்லிம் பிரதிநிதி தோழர் உபயதுல்லா சாயபு - மற்றொருவர் தோழர் யாகூப் உசேன். இவர் திராவிட நாட்டவர் அல்ல என்பது யாவரும் அறிந்ததே. கிறிஸ்தவர்களில் யாரோ ஒரு தோழர் வர்க்கியாம். தமிழ்நாட்டில், அல்லது திராவிட நாட்டில் முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இவர்கள் பிரதிநிதியாய் இருக்க நேர்ந்ததற்குக் காரணம் திராவிடம் திராவிடருக்கு அல்லாமல், ஆரியருக்கும், பனியாக் களுக்கும், மார்வாடிகளுக்கும், புரோகிதர்களுக்கும், ஆதரவுக்காக இருந்தது என்பதல்லாமல் வேறு என்ன என்று யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம்.

திராவிடர்கள் எத்தனையோ மேன்மையும், நாகரிகமும், தன்மானமும், வீரமும் பொருந்திய மக்களாக இருந்திருக்கிறார்கள் என்பதற்கும் ஆரியர் மிலேச்சர் களாக, காட்டு மிராண்டிகளாக இருந்திருக்கிறார்கள் என்பதற்கும் அவரவர்கள் கலை, சமய நூல்கள் முதலியவைகளே போதுமான சாட்சியம் என்றாலும் உலக சரித்திர ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டுபிடித்தெழுதி இருக்கிற உண்மை ஆராய்ச்சி சரிதங்களில் இன்றும் நூற்றுக்கணக்காக, ஆயிரக்கணக்காகப் பார்க்கலாம் என்றாலும் மற்றும் ஆரியத் தன்மையை உணர வேண்டியவர்கள் இந்து சமய சைவ வைணவ சம்பந்த மான, அவற்றின் கடவுள் சம்பந்தமான புராணங்களைப் பார்த்தால் கண்ணாடிபோல் விளங்கும்.

**அவை சிறிதும் சம்பந்தம் இல்லாத திராவிடர்கள் நிலை இன்று எப்படி இருக்கிறது? திராவிட நாட்டில் உள்ள தெருப்பெருக்கி, கக்கூஸ் கழுவி, மூட்டைதூக்கி, வண்டி இழுக்கி, பங்கா இழுக்கி, எச்சிலை எடுக்கி இது போன்ற மற்றும் பல தொழில் செய்பவர்கள் 100க்கு 100 பேரும் திராவிட ஆண் மகனும் திராவிடப் பெண்மணியுமேயாகும். ஆனால், இதே திராவிடத்தில் பிழைக்க வந்துள்ள ஆரியர்கள், குஜராத்திகள், மார்வாடிகள், பார்சிகள், பஞ்சாபியர்கள் முதலிய அந்நியர்கள் திராவிட நாட்டில் 100க்கு 100 பேர் எப்படி உயர்ந்த, உன்னத, மேன்மையான நிலையில் 'பூதேவர்களாக' கோடீஸ்வரர்களாக, மகாத்மாக்களாக, ஆச்சாரிய சுவாமிகளாக, உலகப் பிரசித்தியான பெரியோராக, அறிவாளியாக, விஞ் ஞானியாக விளம்பரப்படுத்தப்பட்டு வாழ்கிறார்கள் என்பது யாரும் அறிந்ததேயாகும்.**

இதற்குக் காரணம் திராவிடம் திராவிடருக்கில்லாமல் மேற்கண்ட கூட்டத்தாருக்காக இருப்பதினாலா அல்லது வேறு காரணத்தாலா என்று கேட்கிறோம்.

ஆகவே இவற்றிலிருந்து திராவிடம் தனித்து இருந்து தனது பண்டைய பெருமைகளில் உள்ள மேன்மை களையும், உலக முற்போக்கில் தகுதியானதும், முன் னேற்றமானதுமான பெருமைகளையும், ஸ்தானத் தையும் அடைய வேண்டியது அவசியமா? அல்லது ஜட்கா வண்டிக்காரன் மூலமாகத்தான் குதிரைகள் மோட்ச மடைய வேண்டுமென்பது போலவும், செக்கோட்டியின் மூலமாகத்தான் மாடுகள் மோட்சமடைய வேண்டு மென்பது போலவும், ஆரியர்கள், பனியாக்கள், மார்வாடிகள் முதலியவர்கள் மூலமாகத்தான் திராவி டர்கள் மோட்சமடைய முடியுமென்று கருதிக்கொண்டு "இந்தியா"வுடன் கலந்திருப்பதா? என்பதை யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம். மற்றும் திராவிடர் - அந்நியர் வாழ்க்கை முறை முதலியவைகளைப் பற்றிப் பின்னால் எழுதுவோம்.

**விடுதலை: 22-11-1939**

**- தொடரும்**

## மலேசியத் தமிழ் இலக்கியக் கழகத்தார், தோழர் க.இராம. மாணிக்கம் வழி - வளர்ச்சி நிதி

மலேசியத் தமிழ் இலக்கியக் கழகம் சிந்தனையாளன் திங்களிதழ் - தண்டல்,

| | | மலேசிய ரிங்கிட் |
|---|---|---|
| 1. | தமிழ்த் தோன்றல் அ. பழநிபாரதி | 100.00 |
| 2. | தமிழியப் பாவலர் கு.க. இராமன் | 100.00 |
| 3. | கல்விச் செம்மல் பெரிய நாயகம் | 100.00 |
| 4. | தமிழ்ச்சுடர் க.இராம. மாணிக்கம் | 100.00 |
| 5. | தமிழ்க் கழல் அ. இராமன் | 50.00 |
| 6. | மா. கருப்பண்ணன் - தமிழ்ப் பேரிகை | 50.00 |
| | மலேசிய ரிங்கிட் | **500.00** |
| | காசோலை வழியில் உருவா (இந்திய ரூபாய் மதிப்பில்) ரூ. | **7200.00** |

என்னால் இயன்றவரை சில தோழரிடம் சிறுதொகைப் பெற்று இம்மடல் வழி விடுத்துள்ளேன் பெற்றுக் கொள்ளுங்கள். தங்கள் பொருளகம் பெயர், வைப்புத்தொகை எண் இருந்தால், உடனே பணம் பெறும் வாய்ப்பு உள்ளது. இயன்றால் பொருளகப் பெயர், கணக்கு எண் மடல் வழி விடுத்து வைக்கவும்.

- **க. இராம. மாணிக்கம்**, மலேசியா

# என்னருமைத் தோழர் புலவர் த.கி. இரா.

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், குமிழியம் கிராமம், மேலத்தெரு, தங்கம்மாள் - கிருட்டிணசாமி இணையரின் அருமை மகன் த.கி. இராமலிங்கம் ஆசிரியர், என் இனிய நண்பர்; எளிமையானவர்; கடும் உழைப்பாளி. பிறருக்கு உதவும் பெற்றியர். பெரியார் கொள்கையில் இறுதி வரை தடம் மாறாமல் விடாய்ப்பிடியாக இருந்தவர். தன் கூரை வீட்டின் முகப்பில் 'பெரியார் துணை' என்று எழுதி வைத்திருந்தவர். "விடுதலை" ஏடும், "தினமணி"யும் அவரது கைகளில் தவழும்; எப்போதும் பகுத்தறிவுப் பிரச்சாரம்.

1963இல் இரும்புலிக்குறிச்சி சர்வாதிகாரி வீட்டில் என் முதல் சந்திப்பு. அன்று முதல் 10.7.2017 திங்கள் மாலை 6.15 வரை பழகிய இனிய பண்பாளர்.

உடையார்பாளையத்தில் இடைநிலைக் கல்வி கற்றவர். உடையார்பாளையம் சிற்றரசர் கச்சியுவ ரெங்க சின்னப்ப நல்லப்ப காலாட்கள் தோழ உடையார் சாமிதுரை கச்சியராயரின் அரசவைப் புலவர் அறிவானந்த அடிகள் அரண்மனையை விட்டு வெளியேறினார்; குமிழியம் வந்த அவர், மாணவன் இராமலிங்கம் வீட்டில் தங்கினார். அவர் நல்ல பண்பாட்டை இவரிடம் விதைத்தார்.

இந்தப் பகுதிக்கு பெரியாரை அழைத்து திருமணம் - பொதுக்கூட்டம் நடத்தக் காரணமாக இருந்த அறிஞர் வே. ஆனைமுத்து அவர்களிடம் மிகுந்த மதிப்பும் பாசமும் உடையவர். அய்யாவின் குடும்ப உறுப்பினர்களில் ஒருவர் என்னும் அளவிற்கு நெருக்கமாகப் பழகியவர்.

வெள்ளையம்மாளை த.கி.இராமலிங்கம் மணந்தார். அதில் விளைந்த மக்கள் மூத்த பெண் அறிவுக்கொடி; 2ஆவது மகன் சிந்தனைச்சிற்பி; 3ஆவது மகன் சித்தார்த்தன்.

தன் மகன் திருமணத்தை நடத்தியபோது 'ஆனைமுத்து குடும்பத் திருமணம்' என்று அழைப்பிதழை அச்சிட்டவர். சிந்தனையாளன் இதழ் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர். பொங்கல் மலர் வெளியீட்டு நிகழ்ச்சிகளில் தவறாது கலந்து கொண்டவர்.

கள் நல்ல உணவு; அதனால் வயிறுமுட்ட குடிக்கப் பழகினார்; உணவை ஒதுக்கினார்.

கள் குடியினால் உடல்நலம் கெட்டது. கழுத்தில் வந்த கட்டி, புற்றுநோயாக இருக்குமோ என்று ஐயப்பாட்டில் சென்னைக்குச் சென்றனர். வே. ஆனைமுத்துவும் உதவி செய்தார். புற்றுக்கட்டி இல்லை என்ற நிலையில் ஊர் திரும்பி வந்தனர். ஆயினும், அதுவே



அவரது உடல்நலிவிற்கும் மெலிவிற்கும் காரணமாயிற்று. குடும்பத்தார் இலட்சங்களை செலவிட்டனர். பயன் இல்லை.

30.5.2017இல் சிறுகடம்பூரில் நடந்த அம்பேத்கர்-பாவேந்தர் 127ஆவது பிறந்த நாள் கூட்டத்திற்கு இராமலிங்கம் ஆசிரியர் வந்து கலந்து கொண்டார். வே. ஆனைமுத்துவின் 93ஆவது பிறந்த நாள் அன்பளிப்பாக அய்யாவிடம் உருபா 500/- வழங்கினார்.

கடந்த மாதம் குமிழியம் சென்ற நான் அய்யாவுக்குத் தகவல் சொன்னேன். அய்யாவும் 30.6.2017 அன்று மதியம் 12.20க்கு நேரில் வந்தார்; ஆசிரியரைப் பார்த்தார். அவர் முகத்தோடு தன்முகத்தை வைத்து முத்தமிட்டுக் கண்கலங்கினார். அவர் கண்கலங்கி நான் பார்த்ததே இல்லை. அவரது சொந்தத் தாயார் மறைந்த பின், இரங்கல் (முருக்கன்குடி) நிகழ்ச்சியன்று கண்கலங்கினார். பின் 30.6.2017 அன்று கண்கலங்கினார். பேசிவிட்டு பகல் 1.30க்கு த.கி. இராமலிங்கத்திடம் பிரியா விடைபெற்றார்.

நான் மீண்டும் இருமுறை சந்தித்தேன். 10.7.2017 மாலை 6.15 வரை அவருடன் இருந்தேன். தனது பிறந்த தேதியை அவரே 7.2.1940 என எழுதிக்காட்டினார். மறுநாள் 11.7.2017 காலை 8.30 மணிக்கு இறந்துபோவார் என்பது எனக்கு அப்போது தெரியாமல் போயிற்றே.

என்னருமைத் தோழரை இனி என்று காண்பேன். ஐயகோ!

- **இரா. கலியமூர்த்தி,** சிறுகடம்பூர்



# தமிழ்த் தேசியப் போராளி ஓவியர் வீரசந்தானம் மறைந்தார்

ஓவியர் வீரசந்தானம் 13.7.2017 வியாழன் அன்று மறைந்தார். ஓவியர் வீர சந்தானம் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அருகே உள்ள உப்பிலியப் பன் கிராமத்தில் விவசாயக் குடும்பத்தில் 1947ஆம் ஆண்டு பிறந்தார்.

ஓவிய ஆர்வம் காரணமாக கும்பகோணம் அரசுக் கலைக் கல்லூரியில் ஓவியக்கலைப் பட்டயப் படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

1972இல் சென்னை ஓவியக் கல்லூரியில் தொழில் துறை ஆடை வடிவமைப்பில் பட்டய மேற்படிப்பை முடித்தார். சென்னை ஓவியக் கல்லூரியிலும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். பின்னர் இராஜஸ்தானில் பனஸ்தலி வித்யா பீடம் என்ற பல்கலைக்கழகத்தில் (ஃப்ரெஸ்கோ) சிறப்பு சுவரோவியக் கலைப் பயிற்சி முடித்தார்.

சென்னை, மும்பை, பெங்களூரு, காஞ்சிபுரம், திரிபுரா, நாக்பூர், மிசோராம் என இந்தியாவின் பல பகுதிகளில் நெசவுத் தொழில் ஓவியத்தைப் பயன்படுத் தும் வரைகலையைப் பயிற்றுவித்தார்.

சில திரைப்படங்களிலும் நடித்துள்ளார். சந்தியா ராகம், அவள் பெயர் தமிழரசி, பீட்சா, மகிழ்ச்சி, அரவான், கத்தி, அநேகன் போன்ற படங்களில் நடித்துள்ளார்.



வே.ஆனைமுத்து, வாலாசா வல்லவன், தாம்பரம் சுப்பிரமணி, கலசம் உள்ளிட்ட மா.பெ.பொ.க. தோழர்கள் ஓவியர் வீரசந்தானத்திற்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்

ஈழ விடுதலைப் போராட்டங்களில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டார். இவருடைய ஓவியங் களைப் மய்யப்படுத்தியே தஞ்சாவூரில் முள்ளிவாய்க் கால் முற்றம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய விடுதலையில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். அமைப்பு வேறுபாடுகளைக் கருதாமல் எந்த அமைப்பினர் போராட்டம் நடத்தினாலும் அதில் கலந்துகொள்வார்.

14.7.2017 வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு ம.பெ.பொ.க. சார்பில் வே. ஆனைமுத்து, கலச. இராம லிங்கம், வாலாசா வல்லவன், தாம்பரம் மா.சுப்பிர மணி, கு.கிருஷ்ணமூர்த்தி, சோனலை மாசிலாபாரி, ப.வடிவேலு ஆகியோர் நேரில் சென்று தேனாம் பேட்டையில் அவருடைய இல்லத்தில் உடலுக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

**வளர்க வீரசந்தானத்தின் புகழ்!**

தாம்பரம் சென்ட்ரிங் இரா.ப.கோவிந்தன் வே.ஆனைமுத்து அவர்களின் 93ஆவது பிறந்த நாளை முன்னிட்டு சிந்னையாளன் வளர்ச்சி நிதி யாக ரூ.10,000 வழங்கினார் என்பதை மகிழ்ச்சியு டன் தெரிவித்துக் கொள்கிறோம்.

*- ஆசிரியர் குழு*

## காஞ்சிபுரம் எஸ். கிருஷ்ணமூர்த்தி மறைவு

பெரியார் பெருந்தொண்டர் அரங்க. சானகிராமன் அவர்களின் பெயர்த்தி கே. கனிமொழியின் கணவர் எஸ். கிருஷ்ணமூர்த்தி உடல்நலக் குறைவு காரண மாக சென்னை இசபெல் மருத்துவமனையில் 13.7.2017 அன்று மறைவுற்றார். காஞ்சி மாவட்ட மா.பெ.பொ.க. தோழர்கள் சி. நடராசன், மு. செயப் பிரகாசு, தீ.கோபாலகிருட்டிணன், மா. கோதண்டபாணி, சம்பந்த சிவகுமார், பூ.கா. பொன்னப்பன், ஆ. சோதி மற்றும் டாக்டர் விமுனாமூர்த்தி, க. கோதண்டன், காஞ்சி அமுதன் ஆகியோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர். 14.7.2017 அன்று மதியம் நடைபெற்ற இறுதி ஊர்வலத்தில் காஞ்சி சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.அ.பொ. எழிலரசன், சி.வி.எம்.அ. சேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். கணவரை இழந்து வாடும் கனிமொழி அவர்களுக்கும், அரங்க. சானகிராமன் குடும்பத்தினருக்கும் மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# ஏழை அழுத கண்ணீர்!

- சி. பெரியசாமி

தமிழ் நாட்டில் மது டாஸ்மாக் செய்த-செய்கின்ற கேடுகள் பற்றி இன்றைய நிலையில் யாரும், யாருக்கும் சொல்லித் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. அன்னியப் படையெடுப்பால் ஆங்கிலேய ஆட்சியால் ஏற்பட்டக் கேடுகளை விடவும் அதிகக் கேடுகள் டாஸ்மாக்கால் ஏற்படுகின்றன. 1971 முதல் மதுவால் தள்ளாடித் தள்ளாடித் தமிழ்நாடு நாளும் எல்லாத் துறைகளிலும் சின்னா பின்னமாகச் சீரழிந்து வருகிறது.

**ஈடிணை இல்லாதப் பெரியார் :** பெரியார் ஒன்றைப்பற்றி நன்கு ஆய்ந்து முடிவு செய்துவிட்டால், அந்தச் சிக்கல் தீரும்வரை நூற்றுக்கு நூறு வீதம் தன்னை முழுமையாக ஈடுபடுத்திப் போராடி வெற்றி பெறுவது தந்தை பெரியாரின் தனிச் சிறப்பு. காங்கிரசில் இருந்தவரை காந்தியாரின் திட்டங்கள சிரமேற்கொண்டு செயலில் காட்டியவர் பெரியார். காந்தியாரின் மது ஒழிப்பு எண்ணத்தை அறிந்து, சேலம் தாதம்பட்டியில் தன் சொந்தத் தோட்டத்தில் இருந்த 500க்கும் மேற்பட்டத் தென்னை மரங்களை ஒரே இரவில் வெட்டி வீழ்த்திய செயல்வீரர் பெரியார் ஒருவரே! காங்கிரஸ் கட்சியில் நேரு உட்பட வேறு எவரும் இப்படிச் செய்ததாகத் தெரியவில்லை.

சாராயக் கடைகளுக்கு முன்னால் நின்று, கைகூப்பி வணங்கி குடிக்காரர்களைக் குடிக்கச் செல்லாமல் திருப்பி அனுப்பிய பெரியாரின் அருமைத் துணைவியார் நாகம்மை மற்றும் தங்கை கண்ணம்மாவின் மானிடப் பற்றும், துணிவும் இன்று திருமதி சோனியாவுக்கும், பிரியங்காவுக்கும், நளினி சிதம்பரத்திற்கும், தமிழிசை சௌந்தரராஜனுக்கும் ஏன் வரவில்லை?

**நீண்ட பயணம் :** யார் எப்படி இருந்தாலும், தமிழ் நாட்டில் முழுமையான மது-டாஸ்மாக் ஒழிப்பு என்ற ஒரே நோக்கத்துடன் 26 பேர்கள் 2.10.2014இல் கன்னியாக்குமரியில் நடை பயணம் மேற்கொண் டோம். நீலகிரி போன்ற ஓரிரு மாவட்டங்கள் நீங்கலாகத் தமிழ்நாடு முழுவதும் தினமும் 40 முதல் 45 கி.மீ. நடந்தோம். மது ஒழிப்பை வற்புறுத்தும் மூன்று இலட்சம் துண்டறிக்கைகள வழிநெடுக்கக் கொடுத் தோம். உடனடி மது ஒழிப்பு ஏன் வேண்டுமென விளக்கி ஒலிபெருக்கியில் பேசிக் கொண்டே நடந்தோம்.

**மாணவர் இனாமுல் அசன் :** தில்லி ஜாமியா இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணவனாக உள்ள தோழர் இனாமுல் அசன் என்ற மாணவர் முன்னெடுத்த இந்த நடை பயணத்திற்கு மது போதைக்கு எதிரான மக்கள் இயக்கம் (People's movement Against Liquer and Drugs) எனப்



டாஸ்மாக் கடைக்குப் பூட்டுப் போட்டுப் போராடும் பெண்கள்

பெயரிட்டோம். ஒரே ஒருநாள் கூட ஓய்வு இல்லாமல் 103 நாட்கள் தொடர்ந்து நடந்தோம். இந்த நடைப் பயணத்தின் இறுதி நாளுக்கு முதல் நாள் சென்னை இலயோலாக் கல்லூரியில் சிறப்பான அனைத்திந்திய அளவிலான கருத்தரங்க மாநாடு நடைபெற்றது. இறுதி நாளில் 12.01.2015இல் சென்னைக் கடற்கரை காந்தி சிலையில் இருந்து உழைப்பாளர் சிலை வரை கல்லூரி மாணவர்கள் பொதுமக்கள் இணைந்த முழக்க ஊர்வலம் நடத்தி டாஸ்மாக் ஒழிப்புக்கான கோரிக்கை மனுவைக் கொடுக்கக் கோட்டைக்குச் சென்றோம். ஆனால், அந்த மனுவை வாங்கக்கூட மாண்புமிகு அமைச்சர் பன்னீர்செல்வத்திற்கு விருப்பமில்லை. அமைச்சருக்கு நேரமில்லை எனக்கூறி ஒரு இளய ஐ.ஏ.எஸ். அதிகாரி மனுவைப் பெற்றுக் கொண்டார்.

**சிவஞான சம்மந்தம் இரவி :** அரியலூர் முதல் கடலூர் வரை 30 நாட்களுக்கு மது ஒழிப்புப் பிரச்சார ஊர்தி பயணத்தை 1.5.2015 இல் காந்திய சமதர்ம இயக்கத் தலைவரும், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞருமான தோழர் சிவஞான சம்மந்தம் தொடங்கினார். அதில் நானும் கலந்து கொண்டேன். இதே தோழர் சிவஞான சம்மந்தம், தேசிய மக்கள் சக்திக் கட்சியின் தலைவரும், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞருமான எம்.எல்.இரவி அவர்களுடன் இணைந்து 23.6.2017 இல் மீண்டும் அரியலூரில் தொடங்கி மது ஒழிப்புப் போராட்ட வீராங்கனைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் தொடர் போராட்டத்தை ஊர்திப் பயணம் மூலம் செய்தார். 30.6.2017இல் விருத்தா சலம் பொதுக் கூட்டத்துடன் முடிந்த இந்தப் பயணத் திலும் 2014 இல் 103 நாட்கள் நடைபயணம் மேற் கொண்டக் குழுவில் பங்கேற்ற சென்னை உதவும் கைகள் நிறுவனத் தலைவர் ஆனந்தி, தஞ்சை விசிறி சாமியார், இனாமுல் அசன் ஆகியோருடன் நானும் கலந்து கொண்டேன்.

**அதிர்ச்சி அதிர்ச்சி :** விருத்தாசலத்தில் இருந்து வடகிழக்கில் 7 கி.மீ. தொலைவில் உள்ள கச்சிராய நத்தம் என்ற சிற்றூர் டாஸ்மாக் நோயால் மிகவும் சீரழிந்துக் கிடப்பது அறிந்து அந்த ஊருக்கு எங்கள் குழு பயணித்தது. இந்தக் கச்சிராய நத்தம் நல்ல மண் வளம் கொண்ட ஊர்தான். இதில் 326 வீடுகள் உள்ளன. 1000 பேருக்கு மேல் வசிக்கின்றனர். இதில் குடிப்பழக்கம் இல்லாதவர்கள் 10 பேர்கூட இல்லை! 40 வயதுக்கும் குறைவான 110 பேருக்குமேல் மதுக்குடி காரணமாக இறந்துள்ளனர்! அதனால், இந்தச் சிற்றூரில் 110க்கும் மேற்பட்ட டாஸ்மாக் விதவைகள் தமிழ்நாட்டில் இன்னும் எத்தனை எத்தனையோ கச்சிராயநத்தங்கள்!.

கச்சிராயநத்தத்தில் ஒரே ஒரு டாஸ்மாக் விதவையிடம்தான் பேச எனக்கு மனத்தெம்பு இருந்தது. சுமார் 35 வயதுடைய இந்த விதவைக்கு இரண்டு பிள்ளைகள். இவருடைய பெண், கடலூரில் ஆதரவற்ற அனாதை இல்லத்தில் +1 படிக்கிறார். இவருடைய மகன் 10 வகுப்பு படிக்கவேண்டும். பள்ளிக்குச் செல்லாமல் தந்தையைப் போலவே நல்ல குடிமகனாக இருக்கிறான் எனக் கூறினார் தாய். அதிர்ச்சி அடைந்த எனக்கு மேலும் ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. ஏம்மா அவனை அடித்துத் தோலை உரிக்க வேண்டாமா? என நான் கேட்டதற்கு, அவன் என்னை கண்டமேனி அடித்து வீட்டிற்குள் தள்ளி கதவை மூடிவிடுகிறான் சார் என்று சொல்லி அழுதார்! மேலும் எந்த டாஸ்மாக் விதவையிடமும் விபரம் கேட்கும் மனத்தெம்பு, ஆற்றல் எனக்கில்லை.

எல்லாம் அவன் செயல், என்றும்
அவனின்றி ஓரணுவும் அசையாது என்றும்

கூறுவது உண்மையானால் டாஸ்மாக்கிற்கு முன்பாக அந்த அவனை ஒழிப்பது முதல் வேலையல்லவா?

**கண்ணகியும் பாஞ்சாலியும் :** நம் பாரத புண்ணிய பூமியில் இந்து மதத்தில் சாதியில்லா மனிதனே இல்லை. சாதி இல்லாத சங்கமோ, கட்சியோ இல்லை. தங்களை மகா, மகா, மகா வீர மரபினர் எனக் கூறிக் கொள்பவர்கள் வன்னியர்கள். இந்த டாஸ்மாக் கச்சிராயநத்தத்தில் 100 க்கு 100 வீதமும் வன்னியர்களே! இந்த வீராதி வீரர்கள் தங்கள் வீரத்தை நிலைநாட்டும் போர்களம் டாஸ்மாக் கடைக்களமே! குடிப்பதற்கு காசு கொடுக்காத பெற்ற தாயை, மனைவியை அடித்துக் கொல்வது. தானும் சாவது இவர்கள் சோழப் படையை ஆட்சி செய்த வீரம் எங்கே? சாதிச் சங்கம் எங்கே? கட்சிதான் எங்கே?

டாஸ்மாக்கை நினைத்தாலே மயக்கம், 5,6 வயது சின்னஞ்சிறு சிறுமிகளையும் பாலியல் வன்முறை செய்யும் டாஸ்மாக் மிருகங்கள் இந்த இளம் விதவைகளை விட்டு வைக்குமா? கண்ணகியும், மாதவியும், மணிமேகலையும் பிறந்து வாழ்ந்த பண்பாட்டுத் தமிழகம், பாஞ்சாலியின் பாரத பூமியாகிறதே! பண்பாட்டுச் சீரழிவுக்குப் பஞ்சமே இல்லை.

சாதி வாதத்தைத் தலைக்கு மேல் தூக்கி வைத்து ஆடுகின்ற ஐ.எஸ்.ஐ. அக்மார்க் ஒரிஜினல் சாதியினர் தங்கள், தங்கள் சாதி மக்கள் இப்படி டாஸ்மாக் புற்று நோயால் மாளுவதை-கண்ணகி மரபினர் வீதிக்கு வீதி விதவைகளாக நிற்பதை, பண்பாட்டுச் சீரழிவு நடப்பதைத் தடுப்பது எப்போது? எப்போது? எப்போது?.

இந்தப் பண்பாட்டுச் சீரழிவைத் தான் தமிழரின் ஒப்பற்ற ஒரே தலைவர் கலைஞரும்; தாலிக்குத் தங்கம் தந்து தாலியை அறுக்க டாஸ்மாக்கையும் மிக, மிக, மிகத் தாராளமாய் தந்த புரட்சித் தலைவியும் விரும்பினார்கள். அவர்களின் ஆசை, அவர்களின் விருப்பத்திற்கும் மேல் நடந்து கொண்டே இருக்கிறதே! இந்தக் கேடுகெட்ட ஈனத்தனமான புரட்சி டாஸ்மாக் ஆட்சி இன்னும் 100 ஆண்டுகள் நடக்குமாம்! தமிழ் நாட்டுக்கு வந்த சோதனையைப் பாருங்களேன்!

**கதர் சட்டை :** அரசுப்பணத்தில் காந்தியின் பேரால் அமைப்புகள் ஏற்படுத்திக் கொண்டு, கதர் சட்டையும் அணிந்து கொண்டு இருப்பவர்களுக்கு 1971 முதல் தமிழ்நாட்டில் நடைபெறும் மதுக் கொடுமைகள் தெரியவில்லையா? ரகுபதி ராகவ ராஜாராம் பாடிக் கொண்டே கச்சிராயநத்தம் சென்று, ராட்டையில் நூல் நூற்றுக் கொண்டே உண்ணாவிரதம்-சாகும்வரை உண்ணாவிரதம் என்று செயல்பட ஒரே ஒரு கதர் சட்டை கூட இல்லையா?

**கருப்புச்சட்டை :** காங்கிரசில் இருந்தபோது காந்தியின் மது ஒழிப்புக் கொள்கைக்காகத் தென்னை மரங்களை வெட்டிய பெரியார், மதுக்கடை மறியல் செய்த நாகம்மை, கண்ணம்மா ஆகியோரின் செயல்கள் இன்றைய கருப்புச்சட்டைகாரர்களுக்கும், பெரியாரியலாளர்களுக்கும் கனவான கடந்தகால வரலாறு தானா? அன்று பெரியார் செய்தது சரி. ஆனால் இன்றைய நிலைமை வேறு எனப் பகுத்தறிவு ஆய்வு கூறுகிறதா? பதில் சொல்லட்டும்.

**சிவப்புச்சட்டை :** பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலை நாட்ட வேண்டிய செஞ்சட்டைத் தோழர்கள் மதுவால் அழிவது புரட்சிக்குத் தேவையான அடிக் கட்டுமானம் என மார்க்சியம் போதிப்பதாகக் கட்சியின் மேல்கட்டுமானம் கருதுகிறதா?

**நீலச்சட்டை :** சமுதாய அமைப்பில் நால் வருணத்திற்கும் கீழே இருப்பதாக நம்ப வைத்து வஞ்சிக்கப்பட்டப் பட்டியல் சாதியினர், மலைவாழ் மக்கள் மதுப்பழக்கத்தால் மேலும், மேலும் அழிவதை இந்துமத சனாதன வாதிகள் விரும்பலாம். ஆனால், தங்களின் குலதெய்வம் என்றும் இளம் சேகுவாரா என்றும் வாழும் அம்பேத்கர் என்றும் மனதாரக் கருதும் மக்கள டாஸ்மாக் அழிவிலிருந்து விடுதலை செய்ய டாஸ்மாக்

ஒழிப்பை முதன்மைத் திட்டமாக ஆக்கி அன்றாடப் புரட்சியாக இந்தத் தலைவர்கள் ஏன் செய்யவில்லை என்பது புரியாத புதிராகவே உள்ளது. அடித்தட்டு உழைக்கும் மக்கள் எப்போதும் உழைப்பாளிகளாகவே இருக்க வேண்டும் என மனுதர்மம் மட்டும்தான் கூறுகிறதா இல்லை எல்லா அமைப்புகளும் விரும்பு கிறதா என்ற அய்யம் ஏற்படுகிறது.

**காவிச்சட்டை :** அனைத்து வண்ணமும் தோற்றுக் கொண்டிருக்கும் நிலையில் காவிச்சட்டையும், அதன் உள் ஒளிந்து கொண்டிருக்கும் சனாதனமும் நாளும் வெற்றிக்குமேல் வெற்றியை குவிக்கிறதே! இந்தக் காவிச் சட்டைத் தத்துவம் அன்பை, மானிட நேயத்தை, ஒற்றுமையை, சமத்துவத்தை கொடுக்காது மாறாகக் கெடுக்கும்! கெடுக்கும்! இதைப் புரிந்து கொண்டு காவி தவிர மற்ற வண்ணங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்துப் போராடினால் மட்டுமே மதுவும் ஒழியும், சாதியும் ஒழியும்! சமத்துவமும் தழைக்கும்.

**புறநானூற்றுப் பெண்கள் :** டாஸ்மாக்கால் அன்றாடம் கொடுமைகளை அனுபவித்த தமிழ்நாட்டுப் பெண்கள், ஆண்களை விடவும் வேகமாகக் கையில் கடற்பாறை ஏந்தி டாஸ்மாக் கடைகளை உடைத்துத் தூள் தூளாக்குவதும் மதுப் பாட்டில்களை தெருவில், சாலையில் தூக்கி வீசி உடைப்பதும் துடைப்பத்தால், பழைய முறத்தால், செருப்பால் அடித்துத் தீயிட்டுக் கொளுத்துவதும் புறநானூற்று வீரம், தைரியம், இன்னும் இருக்கிறது என்பது மனதுக்கு ஆறுதலைத் தருகிறது.

**மாண்புகளின் மிரட்சி :** தமிழ்நாட்டுப் பெண்களின் வீரச் செயல்களால் அம்மாவின் டாஸ்மாக் கடைகள் தரைமட்டம் ஆவதைக் கண்ணால் பார்க்கும் தமிழ் நாட்டு மாண்புகளுக்கு மிரட்சி ஒருபுறம், கொப்பளிக்கும் கோபம் மறுபுறம். யாரங்கே? தமிழ்நாட்டுத் தாய்க் குலங்கள் அம்மா டாஸ்மாக்கை அடித்து உடைத்துத் தரைமட்டம் ஆக்குவது உங்களுக்குத் தெரியவில் லையா? ஆண்கள், பெண்களை ஏன் கட்டுப்படுத்த வில்லை. இந்தக் கொடுமைகளை தாய்க்குலம் செய்ய ஏன் அனுமதிக்கிறீர்கள்? இரத்தத்தின் இரத்தங்கள் எங்கே? இனி கட்சியும் இல்லை, பதவியும் இல்லை, வரும்படிக் கொள்ளயும் இல்லை, நாசமாய் போங்க என குமுறுகின்றனர் மாண்புகள்.

**கூரியவாள் :** தமிழ்நாட்டில் டாஸ்மாக் விதவைகள் ஏழைப் பெண்கள் வடிக்கும் கண்ணீர்தான் கூரிய வாளாகி அம்மாவின் உயிரை ஒரே நொடியில் பறித்து விட்டது என ஊரே பேசுவது நம்ம மந்திரிக்குக் கேட்கவில்லையோ! எனக் கூடியிருந்த கரைவேட்டிகள் ஒன்றுக்கொன்று கூறிக்கொண்டன.

## திருச்சியில் தனித்தமிழ் இயக்க நூற்றாண்டு நிறைவு விழா மாநாடு

தனித்தமிழ் இயக்க நூற்றாண்டு நிறைவு விழா மாநாடு, திருச்சி தூய வளனார் கல்லூரிக் குமுகாய மன்றத்தில், 15.7.2017 காரி (சனி)க்கிழமை காலை 10 மணிமுதல் இரவு 7.30 மணிவரை நடைபெற்றது.

காலை 10 மணிக்கு தொடக்க விழா நடை பெற்றது. முத்து. செல்வன் தனித்தமிழ் இயக்கத் தலைவர்கள் படத்தைத் திறந்து வைத்தார். பி. செல்வக்குமாரன் வரவேற்புரையாற்றினார். முனை வர் இரா. இளங்குமரனார் தலைமை தாங்கினார். தென்மொழி ஆசிரியர் மா. பூங்குன்றன் தொடக்க உரையாற்றினார். அருள் முனைவர் லெயோ னார்டு வாழ்த்துரை வழங்கினார். கதிர் முத்தையன் நன்றியுரையாற்றினார்.

முற்பகல் 11.30 மணிக்கு கருத்தரங்கம் நடை பெற்றது. முனைவர் மு. இளமுருகன் அறிமுகவு ரையாற்றினார். தனித்தமிழ் இயக்கம் மொழியியல் நோக்கில் க. இராமசாமி, இயங்கியல் நோக்கில் தோழர் தியாகு, தமிழியல் நோக்கில் வீ.நா. சோம சுந்தரம் எனும் தலைப்புகளில் உரையாற்றினர். பிற்பகல் நிகழ்வு தொடங்குவதற்கு முன்பு தோழர் ஈகவரசன் தமிழிசைப் பாடல்களைப் பாடினார்.

பிற்பகல் கருத்தரங்கம் 3 மணிக்கு தொடங் கியது. முனைவர் கோவை வாணன் அறிமுகவு ரையாற்றினார். ‘தனித்தமிழியக்கம் செய்தனவும் செய்ய வேண்டுவனவும்’

| | | |
|---|---|---|
| அறிவியலில் | : | மு. நரேந்திரன் |
| படைப்பியலில் | : | இ. சூசை |
| தொடர்பியலில் | : | இலக்குவனார் திருவள்ளுவன் |
| வாழ்வியலில் | : | புலவர் செந்தலை ந. கவுதமன் |

ஆகியோர் உரையாற்றினர்.

மாலை 5 மணிக்கு நிறைவு விழா தொடங்கியது. கு. திருமாறன் வரவேற்புரையாற்றினார். ம.லெ. தங்கப்பா தலைமையுரையாற்றினார். சாது. சண்முக அடிகளார் வாழ்த்துரை வழங்கினார். இரா. வைத் தீசுவரன் சிறப்பு விருந்தினராக உரை நிகழ்த்தி னார். பழ.நெடுமாறன் அவர்கள் நிறைவுரையாற்றி னார். சு. முருகானந்தம் நன்றியுரையாற்றினார்.

# உங்கள் வகுப்பு பின்தங்கிக்கிடக்கிறதே என உங்களுடைய நெஞ்சம் கொதிக்கவே இல்லையா?

# உங்கள் வகுப்பை முன்னேற்ற வேண்டும் என்று உங்கள் மனம் துடிக்கவே இல்லையா?

## மக்கள் நெஞ்சம் வகுப்புரிமை மலர் - 2012




### இரண்டாம் பதிப்பு முன்பதிவுத் திட்டம்

உங்களுடைய வகுப்பில் படிப்பாளிகளும் பதவியில் உள்ளவர்களும் செல்வந்தர்களும் களப்பணியாளர்களும் கொண்ட படிப்பு வட்டத்தையும் செயல் வட்டத்தையும் உருவாக்குங்கள். உங்களுடைய வகுப்பின் நிலைமையை ஆய்வு செய்யுங்கள்; இருப்பு நிலையைக் கணக்கில் கொள்ளுங்கள். உங்கள் வகுப்புக்கு உரியதைக் கோரிக்கைகளாக ஆக்குங்கள். உங்கள் வகுப்பு அவற்றை அடைவதற்கான வேலைத்திட்டம் வகுத்துப் பாடுபடுங்கள்; விகிதாசாரப் பங்கு பெறுங்கள். அதற்கு உங்களுக்கு உதவக்கூடியதே மக்கள் நெஞ்சம் வகுப்புரிமை மலர் - 2012.

### மலரின் உள்ளடக்கம்

- தமிழ்நாட்டரசின் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் பட்டியல் களில் இடம்பெற்றுள்ள, 146 வகுப்புகளைப் பற்றிய சட்டநாதன் குழு, அம்பாசங்கர் குழு காகாகலேல்கர் குழு, மண்டல்குழு ஆகியவற்றின் அறிக்கைகளில் காணப்படும் குறிப்புரைகளும் புள்ளி விவரங்களும்,
- அரசமைப்புச் சட்டத்தில் இட ஒதுக்கீடு தொடர்பான பிரிவுகளும் உச்சநீதி மன்றத்தின் தீர்ப்புகளும்,
- வளர்ந்த பிரிவினரை (Creamy layar) நீக்குதல் பற்றிய அரசாணைகளும் OBC சான்றிதழ் பெறும் முறையும்,
- மண்டல் குழு அமைக்கப்படவும் அதன் அறிக்கை நாடாளு மன்றத்தில் வெளியிடப்படவும் அதன் பரிந்துரைகள் நிறை வேற்றப்படவும் வே. ஆனைமுத்துவும் அவருடைய மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக்கட்சியும் அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையும் ஆற்றிய பணிகளும் மற்றும் பல செய்திகளும்

இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

2012இல் வெளியிடப்பட்டுப் பெரும் வரவேற்பைப்பெற்ற மக்கள் நெஞ்சம் வகுப்புரிமை மலர் இப்போது மறுபதிப்பாக செப்டம்பர் 2017இல் வெளிவருகிறது; வாங்கிப் படியுங்கள். விகிதாசார வகுப்பு வாரிப் பங்கீட்டினைப் பெற்று முன்னேற்றம் காணுங்கள்.

**முன்பதிவுத் திட்டம்**

A4 அளவில் 500 பக்கங்களுக்கு மேற்பட்ட, நல்ல தாள், நேர்த்தியான அச்சு, கெட்டியான அட்டையுடன் மக்கள் நெஞ்சம் வகுப்புரிமை மலரின் விலை ரூ. 1500/- முன்பதிவு விலை ரூ. 1000/- மட்டுமே. முன்பதிவு செய்யக் கடைசி நாள் 05-09-2017. முன்பதிவு செய்பவருக்கு மலர் பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.

**வகுப்புரிமை மலரைப் பெறும் முறை**

முன்பதிவுத் தொகையை பணமாகவோ, காசோலையாகவோ செலுத்தலாம். காசோலை K.S. Ramalingam என்னும் பெயருக்கு எழுத வேண்டும். நேராகவும் வங்கிக் கணக்கில் செலுத்தலாம். அதற்கான விவரம்: K.S. Ramalingam S.B.Account No. 10457384913, State Bank of India. Anna salai Branch, Branch Code : 878, IFSC : SBIN0000878. வங்கிக் கணக்கில் பணம் செலுத்துவோர் செலுத்திய விவரத்தைக் குறிப்பிட்டு தனியாக மடல் எழுதி அனுப்ப வேண்டும். பணம் - காசோலை - மடல் அனுப்ப வேண்டிய **முகவரி:**

கலச. இராமலிங்கம், புதுவாழ்வுப் பதிப்பகம், 4(11) சி.என்.கே. சந்து, சேப்பாக்கம், சென்னை 600 005. கைப்பேசி 94446 07804.

**கலசம்**, நூலாசிரியர்

● வகுப்புரிமை மலரை வாங்கிடுவீர்.! உங்கள் வகுப்பை விகிதாசாரப் பங்கு பெற்ற வகுப்பாக ஆக்கிடுவீர்! ●

# வறட்சியின் கவலை

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் மழை யின்மையால் வறட்சி அதிகமாக உள்ளது. அதிலும் திருவண்ணாமலை மாவட்டம் முழுவதும் கடும் வறட்சி யில் கடந்த 18 மாதங்களாகப் பாதிப்பில் உள்ளது. மிக, மிக சொற்ப மாக பகுதி மக்களுக்கு நிவாரணம் கொடுத்துள்ளனர். இப்பகுதி மக்களை எந்தவொரு ஊடகமும் கண்டுகொள்ள வில்லை.

தமிழக அரசு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதம் ரூ.1.05 இலட்சம் கொடுக்கின்றது. இந்திய பிரதமர் ஒரு நாளைக்கு மாற்றுடைகளுக்கு மட்டும் பெருந்தொகை செலவாகின்றது. சின்னத்திரையில் எங்களை நடிகர் கமல ஹாசன் இழிவுபடுத்திவிட்டார் என்பது போன்ற திசைதிருப்பும் செய்திகளையே ஊடகங்கள் நேர்மையை இழந்து தினமும் கூலிக்கு மாரப் படிது போல் செயல்படுகின்றன.

விவசாயத்திற்கு நீர் ஆதாரம் தேவை. கல்விக் கொள் கையைக் கைப்பற்றி மத்திய அரசு, மாநில அரசுகளை அதுவும் 1.5 இலட்சம் மாணவர்களின் மேல்படிப்பை தமிழக மாணவர்களுக்குக் கொடுக்க மறுப்பது, தமிழகத்தில் பா.ச.க. எங்கேயும், எப்போதும் தனித்து நின்று வெற்றி பெறமுடியாது என்பதால் பழிவாங்குகின்றனர்.

கல்வியைக் கையில் எடுத்த மத்திய அரசு நீராண் மையைக் கையில் எடுத்தால் வறட்சிக்கு உடனடி தீர்வு காணலாம். ஒரு வார்த்தையில் “ரூ.500, ரூ.1000 நோட்டு கள் செல்லாது” என்று கூறிய அரசு நதிநீர் சிக்கலைக் கையில் எடுத்து பகிர்ந்து கொடுக்கலாம்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உயர்த்திய ஊதியத் தையும், தொகுதி மேம்பாட்டு தொகையையும் சேர்த்து பாதிக்கப்பட்ட மாவட்ட மக்களுக்கு ஒரு ஏக்கருக்கு குறைந்தது ரூ.25,000 கொடுக்க முன்வர வேண்டும்.

குடிநீருக்கு மனிதர்களும் விலங்குகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பசுவதை என்று கூறி இந்திய மக்களைப் பிரிக்க நினைக்கும் தீவிரவாத கும்பல் திருவண்ணாமலை யில் இறக்கும் பசுக்களையும் விலங்குகளையும் தண்ணீர் கேட்டு போராடி வாங்கித் தருவார்களா?

மதத்தைத் தீவிரவாதம் காப்பாற்றுகின்றது. பாதிக்கப் பட்ட மக்களைக் காப்பாற்ற முடியாத மக்கள் விரோதிகளே தொடர்ந்து ஆட்சி செய்கின்றனர். எந்த ஒரு கட்சியும் தன் கட்சியின் வளர்ச்சியை தவிர, கட்சியின் கொள்கையைக் கூட கண்டுகொள்வதில்லை. சுயநலக் கட்சிகளே நம்மை ஆளு கின்றன; இந்நிலையை மாற்ற மக்கள் முன்வரவேண்டும்.

- உழவர் மகன் ப.வ.

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி ஆகத்து-2017

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **இரா. குப்புசாமி** | கரூர் | 1000/- |
| **க. ஆதிமூலம்** | கீழ்பென்னத்தூர் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **ச.சம்பந்த சிவகுமார்** | காஞ்சிபுரம் | 500/- |
| **பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| பேரா. **ச.பொ.சீனிவாசன்** | மூணாறு | 200/- |
| **மரு. வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **இ. கபிலன்** | சிதம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - ஆகத்து-2017

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-53. ☎ : 044-2625 2119